# யோகநாதன்
# கதைகள்



SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM
EK-91

# யோகநாதன் கதைகள்

புதுமைப் பிரசுரம்
பேராதனை இலங்கை

புதுமைப் பிரசுரம் — I

முதற் பதிப்பு: 14-1-64

அச்சுப்பதிவு: தமிழ்நாடு அச்சகம், கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 2-50

அட்டை ஓவியம்: திரு. மார்க்.

விற்பனை உரிமை: யாழ். புத்தக நிலையம்,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# யோகநாதனின் கதைகள்

## பதிப்புரை

1961 — 63 காலப்பகுதியில் யோகநாதனல் எழுதப்பட்ட கதைகளில் சிலவற்றைத்தொகுத்து இந்நூலில் வெளியிட்டிருக்கின்றோம். அண்மையில் நம்நாட்டில் ஏற்பட்ட தேசிய, கலாச்சார விழிப்புணர்ச்சியின் விளைவாக நமக்குப் பல கலைஞர்கள் அறிமுகமாயினர். கடந்த மூன்றாண்டுகளாக எழுதிவரும் யோகநாதன் தமது சிறுகதைகள், கவிதைகள், குறுநாவல்கள்மூலம் வாசகர்கள் மத்தியில் அறிமுகமாகியுள்ளார்.

ஒருசில வார, மாத இதழ்களின் துணைகொண்டு எழுத்தாளன் தன் காத்திரமான படைப்புகளைச் சிருஷ்டிக்கவோ, வாசகனேடு நன்கு பரிச்சயங்கொள்ளவோ முடியாது. இச்சூழ்நிலை நிலவுகின்ற இலங்கையில் தொகுதிகள் மூலமே எழுத்தாளன்-வாசகன் ஆகிய இருவரது உறவும் நிலைநிறுத்தப்படக் கூடியதாயிருக்கின்றது. இதனை அடிப்படையாக வைத்தே புதுமைப்பிரசுரத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

'உன்நெஞ்சை நானும், என்நெஞ்சை நீயுமாய் உரிமை கொண்ட பின்பு வாழ்விலே நிறைவுதான்......புரிந்தவர்கள் பிணைப்புண்டவர்கள்' என்ற மன அவசம் ஒவ்வொரு கலைஞனுக்கும் இருப்பது இயல்பே. எழுத்தாளன் — வாசகன் பிணைப்பினை ஏற்படுத்தும் இலட்சிய வேட்கையின் முதற் செயற்பாடே இத்தொகுதி.

★ ★ ★

யோகநாதனின் கதைகளைப் படிப்பதால் விளையும் மன நிறைவு, மனித உணர்வுகளைப் புரிந்துகொண்டதின்

விளைவே. 'உணர்வுகள் வாழ்வை நிர்ணயிப்பதில்லை; வாழ்நிலையே உணர்வுகளை நிர்ணயிக்கின்றது.' வாழ்நிலையை வக்கிர நோக்குடன் புரிந்துகொண்ட ஆசிரியர் நமக்கு உணர்வுகளை — வாழ்வைப் புரியவைப்பதில் வியப்பில்லை. இவர் காட்டும் மனிதவாழ்வு, இம்மண்ணில் வேரூன்றியது. இவரின் எழுத்துக்கள் வாழ்வைப் படித்த எழுத்துக்கள்.

அக உலகினில் உழல்பவர்களும், மானித மேம்பாட்டின் தார்மீக ஆவேசகாரர்களும், நசுக்கும் வர்க்கத்தைக் கணத்தினில் முறியடித்து புத்தமைப்புக் காணக் கிளர்பவர்களும், மூலைக்கு மூலை இருதயத்தினுள் அனுங்கும் ஆசைகளின் வலையினின்று பிதுங்கி ஓசைப்படுபவர்களும், மெல்ல அலையெழுப்பினும் மறுவேளை பிரளயத்தின் வாயென விறிடும் கடலருகே இன்ப துன்ப தாக்கங்களுக்கிடையே போராடியும், செக்கலித்தும், வீரிட்டுவாழ்பவர்களும், குழந்தைகளின் பஞ்சுச்சதைக் கால்களின் மெத்தென்ற உதையல்களுக்கு இருதய வெளியமைத்து இயங்குபவர்களுமான இவர்கள் — எங்களின் உறவினர்கள், எங்களின் அயலவர்கள், எங்களுக்குள்ளேயே இருப்பவர்கள்: இவர்கள்தான் யோகநாதனின் கதைகள்; பாத்திரங்கள்; உலகினர்.

'நாதங்கள் எத்தனையோ,' 'தோழமையென்றொரு சொல்' ஆகிய இரண்டு கதைகளும் தொகுதிக்கென்று எழுதிச் சேர்க்கப்பட்டவை. ஏனைய கதைகள் இலங்கையில் வெளியாகும் வார, மாத இதழ்களிலும், பல்கலைக்கழக ஆண்டுச் சஞ்சிகைகளிலும் வெளியானவை. மேற்படி இதழாசிரியர்களுக்கு எங்கள் நன்றி.

இராமச்சந்திரனுள்ளான யோகநாதன் கமலத்தை நினைவுள் அசையிடும் சொற்சித்திரம், (நீ அழுதும் பாடினாய், தம்புராவைச் சுருதிமீட்டி, இசையைப் பரவித்துக்கொண்

டேயுனை மறந்து தோடி ராகத்தினைப் பாடிப்பாடி... மேலே எரிந்துகொண்டிருந்த சிறு விளக்குக்கூட அசைவற்று, தங்கத் திரியாயிட, டக்கென்று பாடியவள் பாட்டை நிறுத்தி தம்புராவினோடு அணைவு தேடியதும்; நீயே சிரிப்பும் அழுகையும்!) ஹாட்லிக் கல்லூரி ஓவிய ஆசிரியர் திரு. மார்க்கின் தூரிகை லயத்தினில், எழுத்தின் வெற்றியைப்போல் வெற்றி பெற்றது. அவருக்கு எங்கள் நன்றி.

நேற்றுத்தான் அச்சிடக் கொடுத்தாற்போல நினைவு. மறுநாளான இன்றே கையில் அச்சிட்டதொகுதி. ஆர்வத்திலேயே பிறந்த முயற்சியை, ஆர்வத்தோடு முடித்த தமிழ்நாடு அச்சக நிர்வாகிக்கும், ஊழியர்களுக்கும் கூறும் நன்றிக்கே, நன்றியென்ற பெயர்!

ஜேம்ஸ் பீரிஸ் மண்டபம்,
பல்கலைக்கழகம்,
பேராதனை.
14-1-64

— அ. ஜெயரெத்தினம்.

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY
EK 91

# சமர்ப்பணம்

தம் கலைப்பணிமூலம் சிங்கள தமிழ்
ஐக்கியத்திற்கு உழைத்தவரும்,
கீழைத்தேய கலைமாண்பினை
வெளியுலகிற்கு
அறிமுகப்படுத்தியவருமான,
கலாயோகி, டாக்டர்
**ஆனந்த குமாரசுவாமி**
அவர்களுக்கு

— புதுமைப்பிரசுரம்

# கலைஞன்

எழுத்தாளர் கந்தசாமி பேனாவை உதறிக்கொண்டார். மனதுள் எழும் ரச விகாரங்களை எழுத்தில் வடிக்க முடியாத நிலையின் ஆத்திரம் புருவச்சிற்றுகளின் நெளிப்பினில் தெரிகின்றது. கந்தசாமி அவரின் இடது கையோரமாக இருக்கும் 'பைலை' எடுத்துத்திறக்கின்றார். அவருடைய புகைப்படம் ஒட்டப்பட்டு, அதன்கீழே எழுத்தாளர் கந்தசாமி எனப்பெயர் பொறிக்கப்பட்ட பைலின் இடதுபுறத்தில் அவரின் கண்கள் நிமிஷத்திற்குத் தங்கின. அந்தப் பார்வையில் அவருக்கு மிகவும் ரசிப்பு; மனதுள் சொல்லமுடியாத ஆனந்தம் தலையெடுக்கும் கணப்பொழுது அது. வெட்டி அளவுபடுத்தப்பட்ட வெள்ளைத்தாள்களை மேசையில் வைத்துவிட்டு, பைலை மூடி மீண்டும் இருந்த இடத்திலேயே வைக்கின்றார் கந்தசாமி. ஏற்கனவே மேசைக்கு வந்த வெள்ளைத்தாள்கள் சில கசங்குண்டு மேசையின்கீழ் குவிந்து கிடந்தன.

மீண்டும் பேனாவைக் கையில் எடுக்கிறார். இடது கை ஆட்காட்டி விரலால் பேனையின் நிப்பை வருடி மையை நிப்பில் ஊறவைக்கிறார். வரையறை செய்யாமல் தாள்களில் கீறாயும், வட்டமாயும் கிறுக்கும் பொழுது மனதிற்குள்ளேயே அசமந்தம். என்றைக்கும் அவருக்கு இப்படி ஏற்பட்டதில்லை.

மேசையிலே தட்டுவைக்கும் சத்தம்.

கந்தசாமி நிமிருகின்றார்.

அவன் ஹோட்டல் பரிசாரகன்.

க1

மேசையில் வைக்கப்பட்ட தட்டுகளில் ரொட்டியும், இறைச்சியும், முட்டையும் வைக்கப்பட்டிருக்கின்றன.

உணவைப்பார்க்கும் பொழுது வயிற்றின் வெற்றிடம் நிறைவதைப் போன்ற மனப் பொலிவு. ஆனாலும் மன அடித்தளத்தில் தாளமிடும் அந்தக்குரல் ஒலிகள் ...

'இன்றைக்கு மலருக்கு அவசியம் கதை தந்துவிடுங்கள். — — கடைசிநாள். உடனே அனுப்பிவிடுங்கள், மறந்துவிடாதீர்கள்.'

'பசுமை' பத்திரிகை ஆசிரியரின் குரல் செவிப்பறையினுள் வச்சிரமாய் ஒட்டிக்கொண்டு ஒலிக்கின்றது. பளபளப்பான வாணிஷ் அட்டையுடன் வெளிவரவிருக்கும் 'பசுமை' மலரில் தம்முடைய கதையே முதலிடம் பெற வேண்டுமென்ற மனத்தவிப்பு கந்தசாமிக்கு.

மனதின் ஆசைக்கு கற்பனை வரமளிக்கவில்லை. பேனாவிற்கு எழுதும் வேட்கையின் உற்சாகவேர் அழுகிப்போய் விட்டாற்போல அவரது கைப்பிடியுள் இயக்கமின்றிக்கிடக்கின்றது. வெள்ளைத்தாட்களின் கசங்கல் குப்பைகள் கிழியுண்டும், கசக்குண்டும், சிதறுகின்றன. விடிநிலாவின் வெளிறல் மனதெங்கும் வியாபிக்கின்றது. அதோடு நெடு மூச்சுக்கள். பேனாவை மேசையில் வைத்துவிட்டு முள்ளுக் கரண்டியையும், கத்தியையும் கைகளில் எடுத்து முட்டையில் குத்தி வெட்டினார். குருகுருத்துத் துணுக்காகும் மஞ்சட்கரு, கரண்டியின் கூர்நாக்குகளில் படிகின்றது.

'சீ! எவ்வளவு துப்பரவு கெட்ட நாய்ப்பிறவிகள்' நினைவுகள் வாழை மடல்களைப்போல கழருகின்றன. கடைசியில் மனநிகழ்ச்சிப்பரப்பில் வெறுங்குருத்தாக அந்தச் சம்பவங்கள் அருக்கூட்டுகின்றன.

தலைநகரைக் கிழித்துக்கொண்டு செல்லும் பிரதான வீதியின் இடதுபுற மருங்கிலே உள்ள ஹோட்டலின் இரண்டாவது மாடியில் அவர் இப்பொழுது இருக்கின்றார். குளிர்சாதன வசதி இணைக்கப்பெற்ற அவ்வுல்லாசத் தனியுலகிலே கூட அவருக்கு கற்பனை கைப்பிடிக்குள் வசப் படவில்லை.

STY VINAYAGAR ... PLALAI WEST CHUNNAKAM LIBRARY

ஹோட்டல் வாசலில் ஏறுகின்ற அவர் ஹோட்டலின் ஓரமாக ஒரு முறை பார்த்தார். அந்தக்கணத்திலே நெஞ்சிற்குள்ளே யாரோ சாக்கடை நீரை வீசியெறிந்த உணர்வின் தகிப்பில் அவரது பார்வை அவிந்து சுருங்கியது. மனதின் கசப்பு, உதடுகளின் புழுந்தலில் இனங் காட்டியது.

ஹோட்டலுக்கு ஓரமாக உள்ள ஒழுங்கை நீளமெங்கும் பக்கீஸ்பெட்டித் துண்டுகளால் அடைக்கப்பட்ட சிறு வீடுகள். அவற்றின் அருகாக கழிவுநீர், மழைவெள்ளமாய் ஓடிக்கொண்டிருக்கின்றது. அவ்வீடுகளின் வாசற்புறத்திலே நிர்வாணமாக, சளிவழியும் அசிங்கமான முகத்தோடு குழந்தைகள் திரிகிறார்கள். 'அரையும் குழந்தைகள்' சின்னக் குச்சி விரல்களை வாய்க்குள் சூப்பி, பிறகு மண்ணுள் புதைத்து அவ்விரல்களை நாக்கால் தடவிப் பொச்சிடுகின்றார்கள்.

'இவைகள் வீடுகளா?... இவர்களும் மனிதர்களா?'

நெஞ்சப்பறகள் நரும்புகின்றன. எழுத்தாளர் கண்களில் மலச் சேற்றுள் நிற்கும் அருவருப்பு குபீரிட்டுப் பொங்குகின்றது.

அந்த வீட்டுவாசல்களிலே இலையான் மொய்க்கும் மலத்துணுக்குகளும், ஜலவடிசல்களின் வடுக்களும், அழு

கிய பதார்த்தங்களின் துண்டங்களும் நித்திய வாசமா கிக் கிடக்கின்றன. சிக்குப்பிடித்த பறட்டைத் தலையோடு, பீழை சாறும் கண்களைத் துடைத்துக்கொண்டு அவர் முன்பாக ஒரு பிள்ளைத்தாய்ச்சி குள்ள வாத்துப்போல் அசைந்து அசைந்து நடந்து வருகிறாள். கையில் இரண்டு பாண் கருக்கல்கள். அவை அந்த ஹோட்டலில் இருந்து கழிவெனக்கருதப்பட்டு வெளியே எறியப் பட்டவை. அங் கங்களை மூடமுடியாமல் மேலுங்கீழுங் கிழியுண்டும், நைந் தும் அழுக்கில் தோய்ந்து வெடிலடிக்கின்றது, அவளு டைய ஆடை. கடவாய் அவிந்து, வீணீர் படிந்து காய்ந்து விட்ட அயறுப்பொருக்குகள் வாய் அசைவில் உதிர்கின் றன.

"தொரை! தொரை!"

அவளுடைய சொற்கள் கரங்களாகி இரக்கின்றன. எழுத்தாளர் சுருண்டு முன் விழுந்த தன் மயிர்ப் பிரியை நீவிப் பின்னால் அழுத்தியபடியே அந்த 'நாய்ப் பிறவி' யைப் பார்க்கின்றார்.

சொடுகு படர்ந்து, பொக்களங்கள் தெறித்துக் கிடக் கும் நெற்றியிலிருந்து பொருக்கு வெடித்துச் சிதல் வடி யும் கால்கள்வரை அவரது நோட்டம் வெறுப்புமிழ ஏறி இறங்குகின்றது.

மூக்குச் சுழிக்கும் நினைவு ஒரு கணம், அதற்கு முந்திய சனிக்கிழமையினை நினைத்துக் கொள்ளுகின்றது. எழுத்தாளர் கந்தசாமிதான் சென்ற கிழமை நடந்த சுகா தார விழாவிற்கு தலைமைவகிக்கச் சென்றிருந்தார். ஆரோக் கியமான தாய்க்கும், சேய்க்கும் அவர்தான் பரிசளித்தார். அப்பொழுது அவரது மனம் அளவுகடந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்தது. சுத்தமும், அழகும், ஆரோக்கியத்தின்

வாளிப்பும் அவரது கண்களிலே அந்த வாரத்திலிருந்து இப்பொழுதுவரை சித்திரம்போல பதிந்திருந்ததே...

"சீ! அங்காலே போ!..."

அவர் தம்முடைய கைக் குட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டார். கைக் குட்டையில் பூசப்பட்டிருந்த அத்தரின் இனிய மணம் அவரைச் சூழ்ந்து கமழ்கின்றது.

'இந்த உலகந்தான் எவ்வளவு இனிமையானது! ஆனால் தூய்மையின் தன்மையை நோக்காது, அழுகலில் மனத்திருப்தியடையும் இந்தக் கீழ் ஜென்மங்கள் இவ்வினிமைக்குக் குந்தகம் ஆகின்றார்களே!'

கந்தசாமியின் கைகள் நெட்டி முறிக்கின்றன.

** ** **

வெள்ளைக்கரு நன்றாக வெட்டப்பட்டுத் தீய்ந்தது. நிலவுக் கதிர்களின் உதயம்போல யன்னல் வழியாக அவருக்கு கதையின் கரு ஆடி அசைந்து அடியெடுத்து நடந்து வருவதைப்போன்ற மனக்கிளுகிளுப்பு.

"மனித சமுதாயம் இன்பத்தைத் துய்ப்பதற்காக கலைஞன் தன்னுடைய பேனாவின் வன்மையால் உல்லாசப் பூங்கா அமைத்துக் கொடுக்கிறான்."

நம்பிக்கையின் ஒளி, வார்த்தைகளின் முணுமுணுத்தலில் உமிழ்கின்றது.

யன்னலோரமாய் அவர் நிற்கின்றார். கைக் குட்டையை எடுத்து சட்டைக் காலரை பிதுக்கிக் கழுத்தைத் துடைக்கின்றார். ஆயாசப் பெருமூச்சு விட்ட அவரின் கண்கள் திடீரென்று வெளியே எகிறுகின்றன.

மீன் கௌவிய தூண்டிலைப்போல, மனம் நம்பிக்கையில் துள்ளுகின்றது.

இலேசான மழைத் தூற்றலின் குளிப்பாட்டலிற் சிலிர்க்கும் பசுஞ்செடியாகிறது மனம்.

பக்கீசு வீடுகளின் புறமாக உள்ள 'கக்கூஸ்' சுவரிலே, ஒருவன், ஒரு பெரிய சினிமா போஸ்டரை ஒட்டிக் கொண்டு நின்றான். அது —

நிர்வாணமான பெண்ணின் படம்.

யாரோ அவளை அணையத் தவித்து எதிரே நிற்பது போன்ற மோக மயக்கத்தில் அவள் தன்னுடைய உடலை நெளித்து இனக்கவர்ச்சியை அங்கங்களின் ஒவ்வொரு வளைவு நெளிவிலும் காட்டி நிற்கிறாள். அவருடைய மனம் நெகிழ்வுணர்வில் முறுகியது. சூரியனை நோக்கித் தாவும் கொடியைப்போல நெடுங்கோடாக மனதின் கற்பனைகள் சிதறுகின்றன.

மேசையை யன்னலோரமாக நகர்த்தி ஒரு வெள்ளைத் தாளில் பேனையை ஓட விடுகின்றார் எழுத்தாளர்.

'மோகினி'

கதைக்குத் தலையங்கத்தை எழுதிய வேளையில் அவரின் வாயும் முணு முணுக்கின்றது.

"மோகினி நீ வெறும் படமில்லையடி. காந்தச் சிலையடி நீ! உன்னை வைத்து என்றுமே அழியாத அமர இலக்கியத்தை நான் படைக்கிறேனா, இல்லையா, பார்!" மீண்டும் அவளைப் பார்க்கும் துடிப்பு. அவளின் அங்கங்களிலே துளும்புவதெல்லாம் வெறும் வர்ணப் பூச்சாக

அவருக்குத் தெரியவில்லை. செழுமையான தசைத் திரட்சியின் மினுமினுப்பில் மனிதரைக் கிறங்க வைக்கும் காந்தர்வ மோகினியாய் அவள் காட்சியளிக்கின்றாள்.

எழுத்தாளர் மீண்டும் வெளியே பார்க்கின்றார்.

மோகினி!

மோகினிக்கு கீழே —

அவரது கண்கள் ஊசிக்கூர்மையாகின்றன.

மின்னும் கண்களின் பார்வைக்குள் அவர்கள் இருவரது உருவமும் ரம்பக் கூர்மையிற் பாய்ந்து நெஞ்சைத் தாக்குவதுபோன்ற நெட்டுயிர்ப்பு. நன்னிலைச் சமுதாயத்திற்கு இடங்கல் தரும் முள்ளாணிகளாக அவர்கள் இருவரும் நடந்து வருகின்றார்கள்.

ஆணும், பெண்ணும்.

நெகிழ்ந்து சரியும் உடையிலே அவளின் உடற்பாகங்கள் தெரியத் தவிக்கின்றன. அவளைத் தாங்கலாகப் பிடித்துக்கொண்டு அவன் நடந்து வருகின்றான். தள்ளாடும் அவளுடைய கரங்கள் அவனின் கழுத்தைச் சுற்றியிருக்கின்றன. அவர்களின் நிலையில் குடியும், விபசாரமும் கோடிட்டுத் தெரிவதுபோல எழுத்தாளர் உணருகின்றார்.

மேலெழுந்து குமுறும் ஆத்திரப் பிழம்புகள், நரம்பலில் சுவாலையிட, கால்கள் தரையை உராய்ந்து அழுத்துகின்றன. அந்தராத்மாவுள் ஒரு பாவ காரியத்தை நேரே நின்று பார்க்கும் குற்ற உணர்வு விஸ்வரூபமெடுக்கின்றது.

'சமுதாயம் நல்வழியிற் செல்லும் வேளையில் இங்கே விபசாரமும், குடியும்,... சாக்கடைப் பிறவிகள்!'

அவரது நெஞ்சம் கொதிப்பில் அனற்சட்டியாகின்றது. அவர்கள் இருவரும் கக்கூசிற்குள் போகக் காலடி எடுத்து வைக்கின்றார்கள்.

அவளின் பின்னே அவன் உள்ளே புகுகின்றான்.

** ** **

பேனையையும், தாள்களையும் அள்ளிக்கொண்டு வெளியே போக விரைந்தவர் மீண்டும் யன்னலடிப்பக்கம் செல்கின்றார்.

கக்கூசின் சுவரை நோக்கிய கண்கள் திடீரென்று திகைக்கின்றன. ஒருவன் மோகினியின் படத்தில் கை வைத்து வீச்சாய் இழுக்கின்றான். எழுத்தாளரின் முகத்தில் கோபம் ஜுவாலை வீச, நெரித்த பற்களுக்கூடாக வார்த்தைகள் வேகமாய்த் தெறிக்கின்றன.

"டேய்!"

அவர் தன்னை மறந்து கூவினார். கோபத்தால் அவரின் உடலே ஆடியது. தடதடவென்று படிகள் முனகும் ஓசை, நிகழப்போகும் விபரீதமொன்றிற்கு அர்த்தம் கற்பிக்கின்றது.

** ** **

வீதியின் ஓரத்தில் நின்ற பொலிஸ்காரனை அவர் கைதட்டி அழைக்கின்றார். அவரின் பின்னே அந்த ஹோட்டலின் முதலாளி நிற்கின்றார்.

சமூகத்தின் இழிவைத் துடைக்கும் ஆவேசம் எழுத்தாளரின் நெஞ்சில் வீறுகொண்டு ஆடியது.

என்றுமே சேரியின் அழுகலுள் நுழையாத கந்தசாமி, சமுதாய ஊழலைச் சுத்திகரிக்கச் செல்லும் வீரனின் பெருமிதத்தோடு முன்னே நடக்கின்றார்.

கக்கூஸ் வாசல்.

மனிதனே நுழையமுடியாத அசுத்த நிழல் மறைக்கும் நரகம். சுகாதாரத்தின் குரல்வளையை அங்கே நசுக்கிக் கொன்றுவிட்டார்கள். எழுத்தாளரின கண்கள் சாத்

தானே இழுத்து அடிக்கும் சாட்டையின் சீற்றத்தோடு வாசலுள் தாவுகின்றன.

நாற்றம் மூக்கைப் பிய்க்கின்றது.

குமட்டி ஓங்காளிக்கும் வாயை அத்தர் மணக்கும் கைக் குட்டையினால் அழுத்திக் கொள்கிறார் கந்தசாமி. ஆனாலும் நடையின் வேகம் குறையவில்லை.

திடீரென்று வீலென்ற ஒலி.

உலகைத் தரிசிக்கும் சிசுவின் முதற்குரல்!

கந்தசாமி வியப்பில் திடுக்கிட்டார்.

கக்கூசின் நடு மையத்தில் அவரது கண்கள் சுழன்றன.

நிர்வாணமான ஒரு பெண், சுவர் ஓரமாகச் சாய்ந்து ஒருக்களித்தபடியே தியங்கிக் கொண்டு அனுங்குகின்றாள். பிருஷ்டபாகத்தில் ஒரு கையை வைத்து அழுந்திக்கொண்டு காலோடு காலை முறுக்கும் அவளின் வேதனை நிலை... அவளுக்குக் கீழே அவளின் பிரசவத்திற்குப் பாயாகிக் கிடக்கின்றது நிர்வாண மோகினியின் படம். அதன் மேலே கருப்பை கக்கிய திசுத் துணுக்குகளும், உடைந்த பன்னீர்க்குடமும், நஞ்சுக்கொடியும்... இவைகள் சேருடித் தளதளக்கும் படுக்கையில், கொப்பூழ் கொடியோடு கிடக்கும் குழந்தை!

மோகினியின் மேல் புதிய மோகினி!

நாற்றம் மூக்கைத் துளைக்கின்றது.

கலைஞர் பொலிஸ்காரனை அழைத்துக்கொண்டு வீதிக்குச் செல்கிறார்.

'நாய்ப்பிறவிகள்!'

மனம் அருக்களித்துக் குமைகின்றது.

# சோளகம்

அமைதியை விழுங்கிய காற்றினூடாக அந்தக் கிரா மத்தின் இருதயக் குரல் இருண்ட நடுநிசியிலும் மினு மினுக்கும் கைவிளக்குகளின் அசைவினில் அடிநாதமாகத் தெரிகின்றது.

அது; உழைப்பற்ற, வள்ளங்களின் மரக்கோல்கள்
ஓய்ந்து பரணிற்குள் புகுந்துவிட்ட சோளகக்காலம்!

தென்னோலைகளின் சலசலப்போடு இடைக்கிடையே நாய்களின் ஊளையிடும் குரல் கேட்கின்றது. காற்று, கடல் அலைகளைப்போல எகிறி எவ்விக் குறைந்துகொண்டு வீசு கின்றது. வேகத்தின் வீச்சு பிழைப்பினை அழித்துவிட்ட பெருமிதத்திலேதான் கெக்கலிகொட்டிச் சிரிக்கின்றது.

பூரணம் கொட்டாவி விட்டாள்.

இமை மடல்களுள் கவியும் நித்திரையை முறியடிப் பதற்கு நெட்டி முறித்துவிட்டு, சிரட்டைக்குள் இருக்கும் உமிச் சாம்பலை அள்ளி வாய்க்குள் போட்டுக்கொண்டாள் பூரணம். உமிச் சாம்பலின் மெதுமையான ருசியின் உணர்வில் அவளது முகத்தில் தனி மகிழ்வு சுடரிடுகின் றது. பரந்த நெற்றியின் இடது புறத்திலுள்ள ஆறிப் போன பிளவு காயத்தை அவள் விரல்களால் தடவிக் கொண்டாள்.

சிறிது நேரம் அவள் தன்னுடைய பூனைக் கண் களை மூடிக்கொண்டு பேசாமல் இருக்கின்றாள். மன திற்குள் மறுநாளைய வாழ்க்கைப் பிரச்சினைகள் பேரலை களாய் பொங்கி விழுகின்றன. கிளிக் கூட்டுக்குள்

சிக்கிய மீன்களைப்போல கடன் தொல்லைகள், அவளை எங்குமே தலைகாட்டாது அந்தக் குடிசைக்குள் அடைக்கலம் புகச்செய்துவிட்டன.

கஷ்டப்பட்டுக் கூப்பன் எடுத்தாலும் அது ஒரு கிழமையைச் சமாளிப்பதற்குப் போதாது. பச்சையரிசிக் கஞ்சியைச் சொட்டும் சிந்தாமல் குடிக்குமளவிற்கு வறுமை. அரிசியில் ஒரு கொஞ்சத்தை விற்றுத்தான் சில வேளைகளில் மற்றச் செலவுகளைச் சரிக்கட்டவேண்டிவரும்.

பூரணம் கண்களை விழித்துக்கொண்டாள்.

மீண்டும் தனக்குப் பக்கத்தில் இருக்கும் தும்புக் குவியலினைப் பரப்பி வைத்துவிட்டு தும்பு சூர ஆரம்பிக்கின்றாள். சூர்ந்த தும்பிற்கும் சூராத தும்பிற்கும் நடுவே சோத்தி சிந்துணுகின்றது. இரண்டு பணத்துத் தும்பை இன்று சூர்ந்து முடிந்தால்தான் நாளைக்குக் கயிறு திரித்துப் பின்னேரப்பாடு முடிக்க முடியும்!

விறைத்துப்போன வலது காலுக்கு உணர்வூட்டப் பூரணம் உள்ளங்காலை உராஞ்சுகின்றாள்.

"எடி பூரணம்!"

வெளியே கேட்ட குரலில் பூரணம் துள்ளி எழுந்தாள். ஒரு கணத்தில் முன்வளைந்த உடலுடன் சண்டிக் கட்டுக் கட்டிய நிலையில் சிவந்த கண்களுடன் கணவதியின் உருவம் நெஞ்சிற்குள் தோன்றியது.

"வாறன்! வந்திட்டன்!"

படலையை அவிழ்க்கும்பொழுது பூரணத்திற்கு உடல் நடுங்குகின்றது. வழக்கமாக விழும் திட்டுகளும், உதைகளும் இன்றைக்கு விழக்கூடாது என அவள் நெஞ்சில்

கை வைத்துக்கொண்டே எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக்கொள்ளுகின்றாள். பனங்கள்ளின் நாற்றம் அடிக்கப் படலையைத் திறந்துகொண்டு கணவதி உள்ளே வருகின்றான். பூரணம் ஓரமாக ஒதுங்கி நிற்கின்றாள். அவன் தன்னுடைய முதுகிலுள்ள சழலையை இடது கைப் பெருவிரலால் சொறிந்துகொள்ளுகின்றான். அந்த வேளையில் உள்ளே தடுக்கில் கிடக்கும் குழந்தை அழுகின்றது. பூரணம் அசையாமலே நிற்கின்றாள்.

"பிசாசுகள்... இதோடை ஏழு கழுதையளைப் பெத்தாச்சு. எடி பூரணம் இதேனடி இதுக்கை வெடி வைக்கிறு போய் அந்தச் சனியனை ஆராட்டடி... ஒவ்வொரு காத்துக்கேம் நீ ஒவ்வொண்டைப் பெத்துத் தள்ளு... அதுக்கொண்டுங் குறைச்சலில்லை"

கணபதி அதிருப்தியுடன் அடுப்படிப் படலையை அவிழ்க்கின்றான். காலுக்குள்ளாக ஓடும் பூனையை அடிக்க ஓங்கிய அவனது கை, வெறுமையை ஸ்பரிசித்த தோல்வியில் உதறிக்கொண்டது.

பூரணம் கணவதிக்குச் சோற்றைப் போட்டுக் கொடுத்தாள். கறிச் சட்டிக்குள் இருந்த கறி முழுவதும் கணவதிக்குப் போடப்பட்டது. அந்த நிமிஷத்தில் அவளுக்கு மனதினுள் ஆறுமுகத்தின் மெய்மையான சிணுங்கல் கேட்கின்றது.

கணவதி மட்டிக் கறியைச் சுவைத்துச் சுவைத்துத் தின்னுகின்றான். ஒரு மீன்பிடிகாரன் மட்டிக் கறியைப் பெரும்பாலும் விரும்பமாட்டான். ஆனால் சோழகத்தின் வீச்சு, மட்டிக் கறியையே அவனுக்கு அளித்துவிட்டது. பனங்கள்ளின் மொச்சைக்கும், ருசிக்கும், மசாலையோடு கலந்து காய்ச்சப்பட்ட மட்டிக் கறி நன்றாய் ஒத்துக் கொண்டது.

'புழைப்புக் காலத்திலே மீன் அம்புட்டால் அதும் எங்களுக்குச் சுவர்றேயில்லை. தீர்வைக் காசு, கடல்க் கறி யெண்டு எல்லாந் திக்குத்திக்காகப் போகும். சோளகக் காத்திலே வள்ளங்களைக் கவிட்டாப்பிறகு மீன் எண்ட கதையுமில்லை. எப்பவும் மட்டிக் கறிதான் நமக்கு விதிச்ச விதிபோலே!'

## 2

"ஆறுமுகம்...... இஞ்சை வா. தம்பியாணை நான் சொல்றதைக் கேளடா. இண்டைக்கு நீ மட்டி உளக்கப் போகாட்டில் கறிப்பாடு இல்லை. துண்டாச் சாப்பாடே இல்லையடா"

பூரணம் மகனைக் கெஞ்சினாள். ஆறுமுகம் அசையாமலே நிற்கின்றான். இராவணன் மீசைப் பூண்டைப்போல குத்திட்டு நிற்கும் மயிரினுள் கை நுழைத்து அவன் சொடுகு பிடுங்குகின்றான். உடலின் பொருக்கு வெடித்த பாகங்களில் வேர்க்குரு பரவி அவனை பார்க்கமுடியாத பிறவியாகி நிற்கின்றான். பூரணத்தின் மூத்த மகன் அவன். ஒவ்வொரு நாளும் மட்டி உளக்கப் போவதும், சாணி அள்ளிவரத் துண்டிச் சுடலைக்குப் போவதும் அவனது தொழில்களாகிவிட்டன.

"போணை போ... அவ எனக்குச் சொல்லவந்திட்டா... நேத்து நான் வத்துக் கடலுக்கை போய் நிண்டு வெய்யிலிலை குளிச்சு மட்டி பிடிச்சுக்கொண்டு வாறன். ஆனா எனக்கு மட்டிக் கறியில்லை. பேந்தேன் நான் போவான் என்னாலை எலா... போ..."

பூரணத்தால் ஒன்றும் பேச முடியவில்லை. அவன் சொல்லும் உண்மைக்கு முன் அவனைச் சினக்க எண்ணும் கோபமும் தலைகுனிந்துவிடுகிறது. ஆத்திரம் ஒரு

புறம், தேவை மறுபுறம் அலைக்க ஒரு நிலைப்படாத மன தோடு அவள் அடுப்படிப் பக்கம் போனாள். வீங்கி எழும் வயிற்றினுள் புரளும் சிசுவையும் தாங்கி அலையும் களைப்பு அவளுக்கு. அவளுக்கு என்றும் கர்ப்பம் காட்டாத சின்ன வயிறு. களைப்போடு கால்களை முன் நீட்டி, கைகளை பின்னாக ஊன்றிக்கொண்டு அவள் துருவலையில் இருந்தாள்.

பூரணத்திற்கு அன்று ஒரே எரிச்சலாயிருந்தது. அவள் கணவதியைக் கைப்பிடித்து எழு வருஷங்கள். எழு வருஷ வாழ்க்கையும் நரகமாகவே கழிந்துவிட்டது. அதிலே இடை யிடை சந்தோஷமும் தலைதூக்காமல் இல்லை. ஆனால் அவை யெல்லாம் நீண்ட நாட்களில் தெட்டந்தெறியனாய் மிகக் குறைவான மணித்தியாலங்களாகவே இருந்தன. காலத்தின் வெம்மையாலும், இல்லாமையாலும் தசைகள் மினுமினுப் பிழந்து சுருங்கியதோடு தாம்பத்திய வாழ்வின் மகிழ்வு கள் யாவுமே பயனற்றுக் கரிக்கும் கடல் நீராகிவிட்டன.

மனம் எங்கெல்லாமோ நழுவி உருள்கின்றது. சளசளக்கும் சேற்றுநீரைப் போல, நினைவுத்தடங்க ளிலும் மனம் புதைந்து கொடுக்கும் சில இனிய நினைவுகள் ...

கணவதி, தனக்கு ஆறுமுகம் பிறந்ததும் பூரணத்திற்குப் பக்கத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றான். பூரணம் மடியில் கிடக்கும் குழந்தையையும், கணவனையும் பார்த்து மனதிற்குள் பூரிப்புக் கொள்கின்றாள். கிலுகிலுப்பையை மகனின் முகத்திற்கு நேரே நீட்டிக்கிலுக்கிக் கொண்டே, அவனின் சிரிப்பிற்குள் இருக்கும் சொற்களையெல்லாம் மொழி பெயர்த்து பூரணத்திற்கு அர்த்தம் சொல்லிக் கொண்டிருக்கின்றான் கணவதி.

"பூரணம் இப்பவே அவர்றை கதையளைக் கேட்டியே... பொழிப்பான கனகதையளைக் கதைக்கேக்கை அப்பரைப்

போலேத்தான் 'ரிக்கிறுன். பாவணிக்குணம். பெரிய ஆள் மாதிரி அவர்ரை மறுமொழியள். தம்பிக்கு நான் ஆறு முகம் எண்டுதான் பதிவிலே பேர் குடுத்தனுன்."

மடியில் பெருவிரலைச் சூப்பிக்கொண்டு கிடக்கும் குழந் தையின் உச்சி துடிக்கும் தலையினைத் தடவிக்கொண்டே பூரணம் கணவனை கண்ணீர் பனிக்க வாஞ்சையோடு நோக்குகின்றுள். தன்னை 'எலாதவள்' என்று அடிக்கடி கூறிக்கொண்டே அவளுக்குரிய எல்லா வேலைகளையும் அவனே செய்தான். அவள் குளிப்பதற்கு இலைகள் அவித்து தண்ணீர் கலந்து கொடுத்ததும், பத்தியமாக 'காயம்' வைத் துக் கொடுத்ததும் அவன்தான். அவள் அவனது முரட் டுக் கரங்களை எடுத்து வாஞ்சையோடு தடவுகின்றுள். பூனைக்கண்களிலே மிதக்கும் நன்றிப் பெருக்கான பார் வையில் கணவதியின் உள்ளம் தோய்ந்தது. கணவதி தன்னைமறக்கின்றுன. பறியில் நிறைய மீன்கள் அகப்பட் டால் ஏற்படும் மகிழ்வைவிடப் பன்மடங்கு மகிழ்வு நெஞ் சினுள் தோன்றி வியாபிக்கின்றது. அந்தக் கிறக்கத்தில் அவன் முணுமுணுக்கின்றுன்:

> "பூரணம் இந்தச் சோளகம் முடியட்டும். பேந்து பாரடி உன்னையும் ஆறுமுகத்தையும் பொன்னுலே போத்துறன். அடுத்த சோளகத்துக்கு முந்தி எனக்கு வள்ளமொண்டு சொந்தமாயிடும்... பேந்து... பேந்து ..."

வெளியே எதோ சரசரத்துக் கேட்கின்றது. பூரணம் தன்னிலை அடைந்தாள். அடுப்படிப்படலையில் நிற்பது ஆறு முகம்.

"என்ன ... என்னத்துக்கு நிக்கிறுய்?"

தாய்மையின் குரலில் வெறுப்பு உமிழ்கின்றது. அவ ளின் காய்ந்த அடிச்சொண்டை அவள் கீழ்நாக்கால் தடவி எச்சில் பூசுகிறுள்.

"கடல் நல்ல வத்து நான் மட்டி உளக்கப் போப் போறன்"

அவனின் ஒருநிமிஷ வார்த்தையில் பூரணத்தின் நெஞ்சம் வரால் மீனைப்போல மகிழ்வினில் துள்ளி விழுந் தது. பொன்னினுலும் பட்டினுலும் போர்த்திருக்கவேண் டிய ஆறுமுகம், வேர்க்குருவாலும், பொருக்காலும் போர்த் தப்பட்டநிலையில்—

"எனணை பேசாமையிருக்கிறு ?"

அவள் சமாளித்த குரலின் ஒலியோடு அவனைப்பார்க் கின்ருள்.

"சரிராசா போட்டு பன்ரெண்டுக்கிடேலை வந்திடு துலைக்குப் போய் உளக்காமல் கிட்டடியிலே பாத்தொண்டு வா"

வாய்கிழிந்த உமலை நீத்துப்பெட்டிபோல மடக்கிக் கொண்டு கூனியபடி செல்லும் ஆறுமுகத்தைப்பார்த்த படியே பூரணம் குந்திய நிலையில் இருந்தாள். கடல்த் தாளங் காயைப்போல அவனுடைய முதுகெங்கும் உப்புப்பொரிந்து கோடிட்டிருக்கின்றது. துருத்திக் கொண்டுநிற்கும் அவனு டைய எலும்புகள் ஒவ்வொன்றும் கணவதியின் அடிகளால் அதிர்ச்சியடைந்தவை. கழுத்துப் பாகத்தின் கீழே உள்ள வெட்டுக்காயமும், சிராய்ப்பும் கணவதி வெறியில் வந்து ஆறுமுகத்தைத் தள்ளி விழுத்தி அடித்த பொழுது எற் பட்டவைதான்.

கணவதி, ஆறுமுகம் பிறந்தபொழுது சொன்ன சொற்கள் இப்பொழுதும் அவளின் காதோடு கேட்கின்

றன. அந்தச் சொற்கள் வெறும் ஒலி வடிவில் எழுந்து காற்றோடு கலந்து மனதினுள் படிந்து விட்டன.

ஆனால், வந்துபோன சோளகங்கள் ?

## 3

வாடைக்காற்றை எதிர் நோக்கிய கொழும்புத்துறைக் கிராமத்தில் வாழும் மக்கள் அந்த நிராசையை, சோளகத்தின் வெம்மைக்காலத்துக் கண்ணுறங்காத இரவுகளைத் தங்கள் குடிசைகளில் நிகழும் நித்திய சண்டைகள் மூலம் காட்டிக்கொண்டிருந்தனர்.

கரைகளில் வெகுதூரம் வரை கவிழ்த்து வைக்கப்பட்ட வள்ளங்கள் அவர்கள் வயிற்றிலே வெறுமையையும் நெஞ்சிலே விரக்தியையும், குடிசைக்குள் சண்டைகளையும் சிருஷ்டிக்கும் பிரம்மாக்களாகிவிட்டன. அவ்வள்ளங்கள் இயங்காது கரையில் தலைகுப்புறப் படுத்துவிட்டால் மீனவனின் வாழ்வும் வறுமைக்குள் தன்னை ஒப்புக்கொடுத்துவிடும்.

உழைக்கும் அவர்களில் பெரும் பான்மையோருக்கு சொந்தமாக வள்ளம் இல்லை; வலை இல்லை. இருப்பதெல்லாம் கடன் ஒன்றும், இறக்காமல் வாழமுனையும் ஓயாத முயற்சியும்தான்.

காற்றுச் சுழன்று சுழன்று அடித்துக் கொண்டிருக்கின்றது. இரவுப்பூச்சிகளின் 'கிக்கிறீச்' ஒலி அதற்கு சுருதிமீட்டுகிறது. எங்கிருந்தோ, ஏற்றிக் கட்டப்பட்ட கொடியின் 'ஞொய்ய்ங்ங்' என்ற விண் கூவல் காற்றைக்கிழித்துக்கொண்டே கேட்கின்றது.

ஆறுமுகம் அசைந்து படுத்தான். சுறத்தை இழுத்து, முகத்தைமூடிக்கொள்ளும் அவனின் இதயக்கூட்டினுள் அவனையறியாமலே எட்டுமூலைக்கொடி

யின் 'விண்' ஒலி மதுரகான மெழுப்புகின்றது. அகக்கண்களின் திரையிலே வன்னம் ஒட்டிய எட்டு மூலைக்கொடி... வளைந்த அதன் விண்ணாங்குத்தடி... விண்ணாங்குத் தடியில் விண்ணைப் பிணைத்துப்பூட்ட றீல் கட்டைக் கப்பிதான் பாவிக்கப்பட்டிருக்கிறது... பெரியபிறை... முக்கோணமான தலையில் ஒளிரும் வாணிஷ் கடுதாசி... விண்ணாங்குத்தடியின் கப்பியில் கூட வன்னம்... டங்கென்று இசையெழுப்பும் விண். அதுபிரம்புவிண்ணா? வாட்டிய பனையோலை விண்ணா?

பிரக்ஞையற்ற நிலையில், மனதுள் எழும் ஆவலின் உத்வேகத்தில் தாழைமடலைப்போல அவன் நிமிர்ந்து எழுந்தான். தகப்பனைப்போல முன்வளைந்த ஒல்லியனான அவனின் கண்கள், கைவிளக்கால் சிறிது கரைந்த இருளினுள் தடுமாறின. மங்கலான வெளிச்சத்தில், பூரணம் பலகையில் சாம்பல் பரவி, தும்புக்கட்டைகள் கயக்கிக் கொண்டிருப்பதை அவன் காணுகின்றான். தூண்டுதலின்றியே குரல் எழுந்தது.

"அம்மா ணேய்!"

பூரணம் மயக்கநிலையில் இருந்து விடுபட்டு உசாரானாள். காய்ந்த தென்னம்பாளை போன்ற உடலில் அந்தக் குரல் புத்துணர்ச்சியினை ஏற்படுத்தியிருக்கவேண்டும். தாய்மையின் வாஞ்சை, அவனை அணைய, குரலாய் நெகிழ்ந்து ஒலித்தது.

"என்ன தம்பி அது?"

ஆறுமுகம் சிறிது மௌனமாய் இருந்தான். பிறகு தன்னுடைய குத்திட்டு நிற்கும் தலைமயிரைப் பிருண்டி முன்னே இழுத்துவிட்டபடி மூக்கைச் சீறினான். பிறகு தலையைச் சாய்த்துக் கொண்டு, தாயைப் பார்த்தபடி

நொய்மையான குரலில் எதையோ கூற முயலுகின்றான். எண்ணம் நித்திரை கவிந்த கண்களில் தெளிவாக விளங்கியது.

"என்னடாராசா என்னெண்டு சொல்லனெடா ..."

சிணுங்கும் குரலைப்போல அவன் கதைக்கும் ஒலி. நித்திரையின் ஆழ்தலுள் கிடந்ததால் சொற்களும் சோம்பல் முறியாமல் கூனியும் குறுகியும் வெளியாகின:

"அம்மாணேய், நான் உன்னட்டை ஒரு ஐம்பசம் நெடுக்கக்கேள்க்கிறன்... நீயும் தாறுயில்லை... எனக்கணை எட்டுமூலைக்கொடி கட்ட வேணுமெண்டு ஆசை... வன்னம்... நூல்... வால்க்கயிறு அதுக்கெல்லாமணை ஒரு ஐம்பசம் எண்டாலும் வரும்... நான் எத்தினை நாளா மட்டி உளக்கிறன்... எத்தினை நாளா உன்னோடை மட்டக் கடலுக்கை வந்து மட்டையள் அள்ளி முறிய முறிய நாற்கடகத்துக்கை சுமந்து கொட்டினனான்... போன முறை சாணி வித்த காசிலை ஒருசேங்கூட நீ எனக்குத் தரயில்லையணை!"

அவன் மூக்கை இழுத்து உறிஞ்சினான். குரலில் தவிப்பும் தாகமும் இணைந்தொலிக்கின்றன. அவனின் ஒவ்வொரு சொற்களும் பூரணத்தின் இதயத்தை திருக்கை வால் கொண்டு அடிப்பதுபோலத் தாக்குகின்றன. அவன் உச்சி வெய்யிலிலும் சாணி அள்ளுவதற்காகச் சுடலைக்குச் சென்றிருக்கின்றான். பலர், மத்தியானத்தில் சுடலையிலே வைரவர் உலாவுவதாகச் சொன்னபொழுது அவன் அதைத்துச்சமாக மதித்து, சாணியே விருட்டியாகிவிடும் நடு வெய்யிலில் சுடலைக்குச் சென்றிருக்கின்றான். சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு வந்து, பெரிய சாணிக்கும்பம் ஒன்றைக் குவித்த அவனுக்கு அவள் ஒரு சதங்கூடக்

கொடுக்கவில்லை. அவள் கொடுக்க நினைத்தாலும் அவளிடம் 'வெள்ளைச்சல்லி' கூட அடுக்குப்பெட்டிக்குள் இல்லாமலிருந்தது. சித்திரை வருஷப்பிறப்பாகத்தான் இருக்க வேண்டும். அன்றிலிருந்து இன்றுவரை ...

'எத்தனைநாளா ... வரியம் புறந்ததிலையிருந்து இண்டைவரை ... நாற்பது நாளாதலிருக்கும் ... அவன்தான் கறிக்குதவினவன் ... இவரை முடிச்சதிலை நான் கண்ட சுகமென்ன? வரியம் ஒரு புள்ளைப் பெத்ததுதான் மிச்சம்... இருவத்தைஞ்சு வயதுக்குள்ளை இத்தினை ... ஏழு ... வந்து போற சோழகமெண்டுமில்லை ... வாடையெண்டுமில்லை... நமக்கு இப்புடித்தான்... எப்ப வழிபிறக்குமோ ... ?'

பூரணம் பெருமூச்செறிந்தாள்.

அங்குள்ள பெண்ணிற்கு உழைப்பு சோழகத்தில்தான். ஆண் வாடைக்காலத்தில் நன்றாக உழைப்பான். சோளகத்தில் வீட்டிற்குள் படுத்து விடுவான். சோளகத்தில் பெண் மட்டையெடுத்துப் பிழைப்பாள். ஆனால் சோளகமும் சிலவேளைகளில் நம்பிக்கைத் துரோகம் செய்துவிடும். இரண்டு சோளகங்கள் அவ்வூர்ப் பெண்களை அப்படி ஏமாற்றிவிட்டன. அதோடு பூரணத்தை புதிதாய் ஒரு சனியன் பிடித்துக்கொண்டு விட்டது. கரையோரமாக கடலணை போட அத்திவாரமிட்டவர்கள், பலரின் மட்டைக் கிடங்குகளைக் கிண்டி தரையில் எறிந்துவிட்டார்கள். நாலுமாதங்களுக்கு கடலில் கிடந்து ஊறவேண்டிய அம் மட்டைகள் 'தாட்டு' இரண்டு மாதங்களுள் கிளறி எறியப்பட்டதால், மீண்டும் புதுக்கிடங்கு கிண்டித் தாழ்க்க வேண்டியதாயிற்று. அரைவாசி நனைந்த அவ்விளந்தேங்காய் மட்டைக் கீலங்களைப் பார்க்கப் பார்க்கப் பூரணத்திற்கு வயிறு பற்றியெரிந்தது. கிளறியெறிந்தவர்களுக்கு அன்று நல்ல திட்டுக் கிடைத்தது.

சோளகம் போய் வாடை வந்துவிட்டால் கடற்கரையில் மட்டை புதைக்கவும் முடியாது; கிளறவும்முடியாது. மட்டைக் கிடங்குகள் வெறுமையாகி விடும் அதேவேளையில், பெண்களின் மனதிற்குள் விரக்தி கபங்கட்டி விடும். தேங்காய் மட்டைகளைப் புதைத்து ஊறவைத்து, பின் அதைக் கிளறி எடுத்து தக்கைப்பொல்லால் அடித்து தும்பாக்கும் பொழுது அவர்கள் மனதில் ஏற்படும் நிம்மதியையும் மகிழ்வையும், வாடைக்காற்றின் குமுறும் அலைகள் அழித்து விழுங்கி விடுகின்றன. இரண்டு பணத்து மட்டையை கடகத்துள் அள்ளிக் கொண்டு வரும் பொழுது ஒரு பெண்ணிற்கு ஏற்படும் ஆத்ம திருப்தியும், மகிழ்வும் தன் கணவனோடு சரஸமாடும் நிலையில் ஏற்படுமோ என்பது ஐயமானதுதான்.

பூரணத்தின் காலை ஈரம் நனைத்துவிட்டது. அவள் காலை ஒதுக்கிக்கொண்டு குனிந்தாள். நடுவில் பிள்ளை மூத்திரம் பெய்துவிட்டது. ஆறுமுகத்தை அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவன், தாயின் பதிலிற்காக அரைகுறையாய் தூங்கிக்கொண்டு, முழங் கால்களில் கைகோத்து முட்டுக் கொடுத்திருந்தான். ஆறுமுகத்தின் கதையைத் தடம்புரள வைப்பதற்காகப் பூரணம் மன ஒப்புதலின்றி வாயை அசைத்தாள்.

"டே தம்பி ஆறுமுகம்... அந்த ரெட்டுச் சாக்கை இஞ்சாலை எடு... இண்டைக்கு வெளியிலைதான் படுக்கை... மெய்யடா இண்டைக்குப் போரடியிலை உன்ரை கன்னைக்கு நல்ல வெற்றியாம்... நீ நல்லா அடிச்சியாம்... கோடித் தென்னையிலை காச்சது நல்ல போர்த் தேங்காதான்... வேணுமெண்டா நீ அதிலை ஒண்டைப் புடுங்கி எடு..."

ஆறுமுகத்தின் மனம் கொடிபறக்க விடுவதி லிருந்து தடம் புரள்கின்றது. போரடித்தலில் அலை பாய்பும் மனம் அதிலேயே முற்றாக ஆழ்ந்துவிடுகின் றது. தன்னுடைய 'வீரவாகு' வான பெரிய தடித்த ஒட்டுத் தேங்காயை, கையழுத்தச் சாய்விலிருந்து வேகமாகச் சிறவைத்து, மாணிக்கனின் போர்த்தேங் காய்களையெல்லாம் சில்லவல்லயாக உடைத்ததைப் பற்றி ஆறுமுகம் தாய்க்கு மிகவும் உற்சாகத்துடன் சொல்லிக்கொண்டிருக்கின்றான்.

பூரணம் துட்புக் கட்டைகளைக் கயக்கிக்கொண்டு, அழுத மனத்தைத் தெரியவிடாமல் வெளியே சிரிக்கின் றாள்.

4

கொட்டுமட்டும்தெரிய மொட்டையாக நின்ற தென்னை மரம் கணவதி வீட்டு அடுப்படிக்குச் சாய்வாக உள்ள பத்தியின்மேல் விழுந்துவிட்டது. சோளகக் காற்றின் முதற் பலியாக அது கணவதி வீட்டுப் பத்தியைப் பெற் றுக்கொண்டு சன்னதம் ஆடத் தொடங்கிவிட்டது.

றோட்டுவரை வந்த கடல் நீர் காற்றின் வேகத்திற் கேற்ப துள்ளிச் சீறிப் பொங்கியபொழுது றோட்டுக்கு எதிர்த்தாற்போலிருந்த பள்ளக் காணியிலுள்ள மக்கள் குடியெழும்பிவிட்டார்கள். பானை சட்டிகளையும், கந்தல் களையும் அள்ளிக்கொண்டு பீதிக் கலக்கம் நிறைந்த முகத் தோடு அவர்கள் அங்குமிங்கும் ஓடினார்கள். கடைசியில் தாங்கள் வட்டிக்குக் கடன் வாங்கும் கல்வீட்டுக்காரர்க ளின் வீட்டுத் திண்ணைகள்தான் தாங்கள் தஞ்சம் புகு வதற்கு இடமாக இருந்தன என்பதை அவர்கள் கண் டார்கள்.

கணவதி வீட்டுக் கூரையை நிமிர்ந்து பார்க்கின்றான். வீட்டுக் கூரையின் கண்ணறைகளை பழைய தடுக்குப் பாய்கள் மூடிக் கிடக்கின்றன. இப்பொழுது கிடுகின் விலை பன்னிரண்டு ரூபாவிற்குப் போய்விட்டது. இனி அதற்கு மேலும் போகும் என்று கணவதிக்குத் தெரியும். அவனது மனம் வெறுப்புமிழக் கண்களை மூடிக்கொள்ளுகின்றது. காணாமல் இருந்துவிட்டால் மனதுள் பிரச்சினைகள் எழாது என்பது அவனின் யோசனை. ஆனால் மனம் விட்டபாடாயில்லை. கடைசி மேய்ச்சலுக்கு அவன் செல்லத்துரை முதலாளியிடம் அறுபது ரூபா வாங்கினான். ஆனால் ஆறு மாதத்தின் பின் அதை அவன் எண்பது ரூபாவாக செல்லத்துரை முதலாளியிடம் திருப்பிக் கொடுத்தான். கடனுக்கு வட்டி எண்ண அவனுக்குத் தெரியாது. செல்லத்துரை முதலாளியாரின் நெற்றியில் என்றும் திருநீற்றுக் குறிகள் துலங்கியபடி இருக்கும். வீட்டு விறாந்தையில் உள்ள ஈஸிசேரில் சாய்ந்து கிடந்தபடி தேவாரபாராயணம் செய்யும் அவரைக் கணவதி பலமுறை கண்டிருக்கின்றான். தமது செலவிலே சித்திராபூரணையன்று கருப்பணிக் கஞ்சி வார்க்கும் அவர்மீது அவ்வூர் மக்கள் மிகவும் நம்பிக்கை வைத்திருந்தனர். கோயில் முகாமைக்காரரும், சிவநேயச்செல்வருமான செல்லத்துரை முதலாளியார் ஒருபொழுதும் கடவுளுக்கு மாறாய் பொய் கூற மாட்டாரென அவன் திடமாக நம்பினான்.

பூரணம் 'முட்டு' வியாதி பிடித்த கைக் குழந்தையை நெஞ்சோடு அணைத்துக்கொண்டு கப்போடு சாய்ந்தபடி இருக்கின்றாள். வயிற்றினுள், தாங்கிய சிசு கொடுக்கும் தொல்லையின் ஆயாசம் தீர சாய்ந்தபடி சிறிது கண்மூடலும், திறப்பும். கையிலிருக்கும் குழந்தையை ஏணையில் கிடத்தியதும் அழுவதால், வேறு வழியின்றி நெஞ்சோடு

சார்த்தியிருக்கிறாள். மூன்றாவது பிள்ளை செல்வன் தடுக்குப் பாயில் காய்ச்சலின் தாக்கத்தால் முனகிக்கொண்டு கிடக்கின்றான். இரண்டாவது மகன் தேங்காய்ச் சொட்டைத் தின்றுகொண்டு தன்னுள் ஏதோ அலம்பினான்.

"சீ... என்ன சீவியம்"

கணவதியின் நெஞ்சம் வற்றிய கடலாகி அலுத்துக் கொள்ளுகின்றது.

பூரணம், தனது பூனைக் கண்களால் கணவதியை இரக்கத்தோடு நோக்கினாள். அவனின் சிவந்த கண்களுள் நிராசையின் சித்திரம். முதுகிலுள்ள கழலையைச் சொறிந்துகொண்டே அவன் கரகரத்த குரலில் யாருக்கோ முறையிடுவதைப்போல சொல்லுகின்றான்.

"அகலவாய் போய்ப் பறிபோடேலாதெண்டு பணிவிலை களங்கண்டி நட்டு வலைகட்டினாலும் வலையளைக் கூடக் களவெடுக்கிறாங்கள்...... இனி எங்காலையெண்டு போறது? புழைப்பென்ன புழைப்பு... மரங்களும் தடியளும் நினைச்ச நேரத்துக்கு எங்கடை கொட்டிலுகள்ளை தான் விழுந்து துலையுது... ஏழையின்ரை கொட்டிலுகளிலை காத்துக்கும் கோவம்...... கடவுளுக்குஞ் சண்டை..."

கடல் நீருள் பல நிறங் காட்டி ஓடும் பஞ்சுக் கலவாய்போல, அவன் குரலிலே கோபமும், விரக்தியும், நிராசையும், எளனமும் இழையோடி ஒலிக்கின்றன.

பூரணம் பதிலே பேசாமல் அவனைப் பார்த்தாள். எஃகிய வயிற்றைத் தடவிக்கொண்டு அவன் குனிந்தபடி இருந்தான். சீப்புக்கு அடங்காத அவனின் 'சிலுப்பா'த் தலைமயிர். துருதுருக்கும் சிவந்த கண்கள். சுறாமீன்

தோல் போல வழுவழுப்பான அவனது தேகம்... பயில் வான் உடம்பு...

ஏழு வருடங்களுக்கு முந்திய அவனது அந்த வசீகரமும், கம்பீரமுமிக்க உருவம் இப்பொழுது சோளகக் காற்றின் வெம்மையாலும், மிதமிஞ்சிய உழைப்பாலும், வறுமைத் தாக்கத்தாலும் தண்ணீரை விட்டு நீங்கிய கடற் பஞ்சாகிவிட்டது.

சோளகமும், வாடையும், கச்சானும், கொண்டலும், வெய்யிலும், மழையும், இருளும், ஒளியும் வந்து வந்து போய்...

கோடியடித் தென்னம் பிள்ளையின் கீழ், சித்திரைப் பூரணையன்று சித்திரைக்கஞ்சி குடித்துவிட்டு அவனும் அவளும் கொஞ்சிப் பேசிய அந்த இன்பகரமான நாட்கள்...

கலியாணம் முடித்ததின் பின்பு வந்த தீபாவளியன்று பூரணத்திற்கு சிவப்பு நிறத்தில் 'தியாக பூமி'ச்சேலையும், பச்சை நிறத்தில் சித்தைச்சட்டையும் வாங்கிக் கொடுத்திருந்தான். கறுப்பியென்றாலும் அவளிற்கு அவை அழகையளித்தன. நெற்றியில் குங்குமப்பொட்டு. யௌவனத்தின் வேட்கையில் அவளது கண்கள் பிரகாசித்திருந்தன.

"பூரணம்... நீ இண்டைக்கு எவ்வளோ வடிவாயிருக்கிறா... இதேனை உன்ரைசொக்கையிலை இப்பிடி..."

சரஸம் வலுக்க அவள் செல்லமாகச் சிணுங்குகின்றாள். நாணத்தால்உடல் வரித்திருக்கையாய் நெளிகின்றது.

"சொண்டு நல்லாச் சிவந்துபோச்சு... எங்கை ஒருக்கா... ஒருக்கா எண்டாப் பெரிய செட்டுவிடுறு... வாணை ..."

அவளுடைய அடர்ந்த தலைமயிரை அவன் கோதிவிடுகின்ருன். அவளுடைய செவ்விதழ்கள் இரத் தமூறித் துடித்தன. கண்கள் மூடிய மோகலாகிரியில் அவள் கிறங்கி அவன் தோளோடு...

"வீல்...க்மா ... ம்ம் ... ம்மா ..."

'மூட்டு'க் குழந்தை வீரிட்டு அலறுகின்றது.

பழையநாளின் இனிய கனவுகள் கலைய, அவள்நெஞ் சோடு கவ்விக்கிடந்த குழந்தையை இதமாகத் தடவிக் கொடுக்கின்ருள்.

திண்ணையில் கணவதியைக் காணவில்லை.

** ** **

'பன்ரெண்டுக்கு வாறேண்டவனை இன்னுங்காண யில்லை... எக்கணம் அந்தமரம் வந்தாலும் நாந்தான் மறுமொழி சொல்லோணும்... வெள்ளணவோடை வாடா எண்டு அவனிட்டைப் போகப்போகச் சொன்னனுன்... கடவுளே அம்மாளாச்சி... எப்பிடியும் ஆறுமுகம் சுறுக்கா வரோணும்'

பூரணம் உலையை வடித்துக்கொண்டிருக்கிருள்... மனம் வேண்டாத வேண்டுதல்களை வேண்டுகின்றது. வாய்க்குள் பச்சையரிசியைப் போட்டுக்கொறித்துக் கொண் டிருக்கும் அவள் சுழற்றிவிட்ட பம்பரம்போல அலுவல் செய்வதில். ஆனல் இப்பொழுது, இருந்தால் இருந்த இடத்தைவிட்டு உடனே எழமுடியாத உடல் அலுப்பு அவளுக்கு. உலைப்பானையை நிமிர்த்திவிட்டு அவள் அடுப் புக்கரையில் ஆயாசத்தோடு இருந்தாள்.

"எடீ பூரணம்!"

பூரணம் கணவதியின் குரலில் குத்தூசியில் குத்துண்ட நண்டாகி பிரயத்தனப்பட்டு அவசரமாக எழுந்தாள்.

"என்னவும் ..."

"எங்கை இவன் ஆறுமுகம்?"

"மட்டி உளக்கவெண்டு விட்டனான்... இன்னுங் காணயில்லை ..."

பூரணம் அனுங்கியபடி சொல்லி முடிக்கவில்லை. அவனின் கரகரத்தகுரல் அவளின் சொற்களைப்பாய்ந்து நிறுத்துகின்றது :

"எளிய பரதேசி நாய் ... உன்னாலைதான்ரி எல்லாம் வாற அந்த எருமையன் அங்கை கொடியேத்திக்கொண்டு நிக்கிறான்"

கணவதி, பூரணத்தின் தலைமயிரைப் பிடித்துக் கரகரவென்று வெளியே இழுத்து எறிந்தான். தகப்பனின் செயலைக் கண்ட குழந்தைகள் பயத்தில் ஓடிச்சென்று தலைப்பெட்டிக்குப் பின்னால் ஒளித்துக்கொண்டனர். அவனின் முரட்டுத்தனமான தள்ளுதலில், பூரணம் வீரிட்டுக் கொண்டு வீட்டு முற்றத்தில் கிடந்த தும்புக்குவியலின் மேல் அலக்க மலக்காக விழுந்தாள். விழுந்த அதிர்ச்சி நீங்கமுன், பூரணத்தை கணவதி கையாலும், காலாலும் ஓங்கி அடித்து உளக்கினான் ...

"ஐயோ என்னைக் கொல்லாதை ... என்னைக் கொண்டாலும் என்ரை வயித்துக்குள்ளை கிடக்கிற சிவனை வதைக்காதை ... என் இப்பிடி என்னை அடியால கொல்லுறாய் ... ஐயோ ... ஐயோ ... என்ரை அம்மாளாச்சியே ..."

அவள் மூச்சிழுத்தாள். மல்லாக்காய் கிடந்தவள் எழும்பமுடியாமல் தவித்தபடி கைகால்களை வலித்தாள். தும்புக்குவியலுள் கிடந்த கல்லொன்று முழங்கை மூட்டில் குத்தியதால் புறங்கையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

பூரணத்தை அடிக்க ஓங்கிய கணவதியின் நெஞ்சுக்குள் பல்லாயிரம் முட்கள் குத்தியதைப் போன்ற உணர்வினில் அவன் குலுங்கினான்.

பூரணம் எழாமலே மல்லாக்குப்பாடாக மூச்சிழுத்தபடி கிடந்தாள். அவள் சீலையில், தெறித்த ரத்தச்சொட்டுகள்.

வெளியே படலை திறக்கப்பட்டது!

கணவதியின் கண்கள் திகிலில் எரிகின்றன.

"ஐயோ என்ரை நாச்சியாரே ... எட ஆறுமுகம் உனக்கு ... உனக்கு என்னெடா ... டேய் ..."

கணவதி தடாலென்று மயங்கி வீழ்ந்தான்.

"அவள் ஆறு மாதப்பிள்ளைத்தாச்சி... கிறுதி வந்து கிடக்கிறாள்... முட்டிலை குழந்தை செத்ததை என்னண்டனை சொல்லிறது... அந்த ஆறுமுகம் பொடியனுக்கும் சுடலையிலை பேயடிச்சுப் போட்ட காயம் இனி எப்பிடித் தான் கணவதி இதுகளை அண்டலிக்கப் போறானோ?"

ஆஸ்பத்திரிக் கட்டிலோரமாக கணவதி கைகளைப் பிசைந்துகொண்டு நிற்கிறான். வரிசை வரிசையாக உள்ளவர்களை டொக்டர் பரிசோதித்தபடி வருகின்றார்.

ஆறுமுகத்தின் கட்டில்.

டொக்டர், ஆறுமுகத்தை ஸ்பரிசிக்கிறார்.

பொச்சான தலையைக் குலுக்கிக் கொண்டு ஆறுமுகம் புலம்புகின்றான். வார்த்தைகள் கிழிந்து, காற்றில் பறக்கும் சாதாளைகளாகி ஒலிக்கின்றன.

"எணை ... என்ரை அம்மா ... இனி இல்லையணை ... பன்ரெண்டுக்கு வாறணணை ... மட்டி உளக்கப் போனனான்தான் ... பிறகணை ... இல்லை ... இல்லை ... நல்ல கொடியணை ... பாம்பன் கொடி இல்லையணை கொக்குக் கொடியோடை தட்டுப் போட்டு ..... என்ரை ஐயோ .... எணையெணை ஐயா வாறார் ... பொறணை ... அம்மா ... வேலிச் சிராய் ஏறியிட்டுதணை ..... ஐயாட்டைச் சொல்லாதையணை ... இனி மட்டி உளக்கப்போறன் ... கொடி எத்தன் ... ஐயோ ... ரத்தமணை ... ரத்தம் வருகுதணை ..."

அவன் வீரிட்டுக் கத்தினான்.

கணவதி விம்மி விம்மி அழுகின்றான். கொக்கரைக் கூட்டுக்குள் அகப்பட்ட மீன்போல, குற்ற உணர்வுகளுள் சிக்கிய அவன் நெகிழ்ந்து கசிந்து விம்மினான்.

பிறகு, மனதை கணவதி ஒரு நிலைப்படுத்திக்கொண்டு, பூரணத்தின் கட்டிலடிக்குச் சென்றான்.

பூரணம், முகத்தில் சாந்தி தவழப்படுத்துக் கிடக்கின்றாள். பூனைக்கண்களில் அமைதி தவழ, அவள், கணவதியைப்பார்த்து இள்நகை செய்தாள். அலைந்து, கலைந்த தலைமயிர் அவளின் வட்டமான முகத்தில் நாவூறு கழிக்கும் கறுப்புப் பொட்டாக அவனுக்குத் தெரிகின்றது. பொட்டுப் பொட்டாக அவள் முகத்தில் அரும்பி நிற்கும் வியர்வைத் துளிகள் கூட, அவளின் முகத்திற்கு புது மெருகை அள்ளித் தெளிக்கிறது.

அவள் தன்னுடைய இரண்டு கைவிரல்களையும் பின்னி ஊதிய வயிற்றின் மேல் மூடிவைத்தபடி கிடக்கின்றாள்.

நினைவு ஓலை, சட்டங்களாய்க் கிழிந்து சிந்தனை நீருள் மிதக்கிறது ...

'அவளுக்கு நான் என்ன சுகத்தை வைச்சன்? ஒரு வருஷங்கூட நாங்க சந்தோசமாச் சீவிச்சமா? குப்புறப் படுத்திருந்த அவளை நான் படுத்தின பாடு... அவளுக்கு நன்மையெண்டுமில்லை... தீமையெண்டுமில்லை... நெடுகலு மடுப்புக்கைதான் கிடப்பாள்... ஒரு நகையோ? நகையளை ஆரு போடுகினம்... நான் கள்ளுக்குடிக்கிற கொட்டிலை நடத்திற முதலாளி வீட்டுப்புள்ளையள் அம்மனுட்டம் நகைபோட்டிருக்கு... என்ரை இவள் என்னட்டை அடி வாங்கினதும்... சாய்மட்டை நொருங்கினதும்தான் கண்டது... இனி'

கணவதியின் கண்கள் நீரைக் கக்குகின்றன.

அவனுடைய தீய எண்ணங்கள் நீறூறி வெடித்த பேத்தை ஆயின.

'அவள் புள்ளைப் பெத்ததுதான் என்னோடை கண்ட மிச்சம்... புள்ளையளுக்கு நான் வேண்டினது செய்தனே?'...

புரண்டெழும் உணர்வுகளின் மோதலில் கணவதி திசைமாறி வாசலை நோக்கினான்.

அதே வேளையில் பூரணத்தின் குரல் காதிற்குள் இனிமையைக் குருப்பிக்கிறது.

"இஞ்சாரும் இதிலை வாரும்!"

அவள் அவனுக்கு கட்டிலடியில் இடம் ஒதுக்குகின்றாள். கணவதி அவளது தலைமாட்டு ஓரமாக அமர்கிறான். அவள் தலையின் இருபுறமும், பிதுங்கி உயர்ந்திருக்கும் தலையணையின் மூலைகளில் அவனுடைய கண்கள் மேய்கின்றன.

"என்னவும் வாடிப்போயிருக்கிறீர்.. சாப்பிட்டனீரா?"

அவளுடைய குரல், தூண்டில் முள்ளாகி அவன் நெஞ்சைக் குத்திப் பிடிக்கின்றது. உலகம் முழுவதிற்கு மாக அவள் உருவம் பொலிந்து நிற்பதைப்போல அவ னுக்கு ஒரு பிரமை.

அவள், அவனையே ஊடுருவுகிருள். "மெய்யணை... ஏன் ஒரு மாதிரியிருக்கிறீர்?"

அவளுடைய குரலில் எழும் இனிய தாபமும், இரக் கமும் கணவதியை என்னவோ செய்கின்றன. பழைய நினைவுகள் நெஞ்சிற்குள் வலைபின்னுகின்றன. அந்த வேகத் தில் அவன் தன் வாழ்வை நினைத்துக் கொள்ளுகிருன். கடன் என்ற ஓயாத தொல்லையுடன் கிளித்தட்டு விளை யாடும் வாழ்வை ஒழித்துவிட்டு, புதிய வாழ்வை ஆரம் பிக்க வேண்டுமென்று ஆசைகள் நெஞ்சிற்குள் சுவாலை பரப்பி எரிகின்றன. கண்கள் உறுதி பெற்ற துடிப்பில் படபடக்கின்றன. முகத்தில் புதிய அமைதி.

"இஞ்சேரும் சும்மா ஒண்டுக்கும் யோசியாதையும்... அங்கை அந்தப் பிறுக்கித் தட்டிலை பாலிருக்கு... எழும்பும் எடுத்துக்குடியும்..."

அவளுடைய கை, அவனது முதுகை வருடு கிறது. அவன்மேலே பார்க்கிருன். குரலில் உறுதி கிளர்கிறது:

"பூரணம் இந்தச் சோளகம் முடியப் பிறகு பாரணை... இனி... உங்களுக்கு ஒரு குறையும் நான் வைக்கன்..."

பூரணம் அவனை பச்சாதாபத்துடன் பார்க்கின்ருள். மனக் கண்களில் அந்தவேளையில் அவளுடைய வீட்டின்

வடக்குத் திண்ணையில் கிடக்கும் மட்டை கிளறும் ஓடும், அலவாங்கும், மட்டைக்கீலங்களும் தோன்றிமறைகின்றன.

துவளும் மனதோடு அவள் அழுதாள் துன்பங்கள் முட்டி, திமிங்கிலங்களைப்போல மோதிய வேளைகளிலும் அவள் சிரித்தாள். சிரிப்பும், அழுகையும் அவள் வாழ்க்கையில் சேருய்க் கலங்கி, சுரிநாற்றம் கிளப்பிய பொழுதும் அவளது குடிசையிலே, அவளது அளவற்ற பொறுமை அமைதியைப் பாயாய் கட்டி வாழ்க்கைத் தோணியை நிம் மதிக்கடலில் பாதுகாப்புடன் எதிர்நீச்சல் போடவைத்தது என்பதையும் அவள் உணராமலில்லை.

கணவதி எழு வருடங்களுக்கு முன்பாக இருந்து சொல்லிக்கொண்டு வரும் வார்த்தைகள் அவளது காதோடு கேட்கின்றன. அந்தச் சொற்கள் வெறும் ஒலிவடிவில் எழுந்து காற்றில் கலந்து மடிந்து விட்டன.

ஆனல், வரப்போகும் சோளகங்கள் ? ●

# மலரும் செடியும்

இரவு முழுவதும் பெய்த மழை முற்றாக ஓய்ந்து விட்டது. காலைக்கதிரவனின் மெல்லிய ஒளியால் வான மும், வையமும் புது மெருகுடன் திகழ்ந்தன. வானத் தில் நீலநிறம் மெல்லிய மஞ்சளின் கலப்பில் குழைந்து ஒளிர்ந்தது. செடி கொடிகள் மழைநீரின் கழுவுதலில் சிலிர்த்து இலைகளின் மடல்களில் துளிகளைப் பரப்பி வைத்து, அசைவற்று மௌனத்தின் அணைப்பில் உறவாடி நின்றன. யசோதை படுக்கையை விட்டு எழுந்து யன்னற் கதவுகளைத் திறந்தாள்.

திறந்தயன்னற் கம்பியினூடாக வெளியே விரைந்த பார்வை நெஞ்சிற்குள்ளே துன்ப அனலையே அள்ளிக் கொட்டுகின்றது. சின்னக்கண்களின் விழிம்பினிலே கண் ணீர் துளும்பி வெடிக்கின்றது.

வெளியே — அவள் தனது கையாலேயே நட்டு வளர்த்த ரோஜாச் செடி மழையின் சீற்றத்தால் வேரறுந்து நிலத்தில் சாய்ந்து கிடக்கின்றது. இரண்டு தினங்களுக்கு முன்புதான் அது தன் முதல் மலரைப் புஷ்பித்திருந்தது. பச்சைவண்ணப் பகைப்புலத்திடையே செந்நிற மலராகச் சாய்ந்து, நிமிர்ந்த அந்த ரோஜா மலர் வானைநோக்கி ஊமை இரகசியம் பேசிக்கொண்டிருந்த அந்தக்காட்சி இப் பொழுதும் யசோதையின் கண்ணினுள்ளே நிற்கின்றது. பச்சைக்காம்பின் முனையில் ரத்தத்தில் தோய்ந்த இதழ டுக்குகள். இதழ்களின் அடுக்கிலே, அதன் உள்நடுவே மஞ்சள் பொட்டினில் அல்லித்தண்டின் சிறல்களும், வட்ட அழகினுள் அவை தலைநீட்டும் ஒழுங்கும். இப்படிச் சிவப்

பும் பச்சையுமே பலவாகத் தோன்றும் இனிய காட்சியின் சுரப்பே அந்த ரோஜாவும், அதன் ஆதாரங்களும்...

அந்த ரோஜாவும் அதன் ஆதாரங்களும் நேற்றுமிருந்தன. அவை தந்த எண்ணங்கள் இன்றும் இருக்கின்றன. அந்த ரோஜாவின் அழகே அவளுள் நாதமாய் இழைகின்றது.

அந்த ரோஜா மலரை யசோதையின் கணவன் கண்ணன் பறித்து அவளின் கூந்தலில் சூடப்போவதாக நேற்றுத்தான் சொன்னான். அதற்கு யசோதை மறுத்துவிட்டாள். ரோஜாவே அவளின் கானம்.

"வேண்டாமுங்கோ செடியில் இருந்து மலரைப்பறித்தால் செடிக்கு வேதனையிராதோ! ரோஜாவும் ஒரு குழந்தை தானே! எவ்வளவு பாடுபட்டுப் பூக்கிறது!"

அவளின் மொழியிலே ரோஜாவின் உயிர். இப்படிச் சொல்லிக்கொண்டு போகும் பொழுது அவளையறியாமலே அவளின் பேச்சுத் தடைப்பட்டது. வயிற்றினுள் ரோஜா உருள்வது போல கணத்தின் பிரமை. விழியோரங்களில் கண்ணீர் மணிகள் பளபளத்தன. இதயமே பிய்ந்து கிழிவது போன்ற உணர்வு அவளை உந்தி உந்தித் தள்ளியது. அன்றுகாலை தொடங்கின அவளின் அழுகை படுக்கும் வரை தீரவேயில்லை.

இன்றைக்கு அப்படித்தானே?

யசோதை யன்னலடியிலேயே திகைத்து நின்றாள். சாய்ந்து இலைகளைச் சிறகாய் விரித்து நின்ற அந்த ரோஜாச் செடியிலே நேற்று அலர்ந்து சிரித்திருந்த அந்தச் செம்பட்டு மலரெங்கே? அது, நீரில் வெம்பிச் சுருண்டு கிடக்கும் காட்சியை அவளால் சகிக்கவே முடியவில்லை. சிவப்

புகள் எல்லாம் சேற்ருேடு நைந்து மங்கிசுங்கி, இலைமூட லுள், விபத்தில் சிக்கி இரத்தமாய் தெப்பலுள் கிடக்கின் றன.

இன்றைக்கு யசோதை பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும். யசோதை யன்னலில் இருந்த தன் கரங்களை எடுத்துத்தன் கண்ணீரைத்துடைத்தாள். அங்கிருந்து போய் விடவும் அவள் நெஞ்சம் துடித்தது. ஆனல் போகாமல் நிற்கவும் மனம் விரும்பியது. இருளை ஒளியும், ஒளியை இருளும் விழுங்குவது போல இரண்டு உணர்வுகளும் ஒன்றையொன்று விழுங்கி ஆனல் தனித்துவம் குலையா மலே நின்றன.

மனப் போராட்டம் அவளை யன்னலடியிலே நிறுத் தியது.

அவள் பார்வை, யன்னலுக்கு வெளியே சோகத்தில் ஆழ்ந்து கிடக்கும் ரோஜாச் செடியிலே ஒன்றியிருந்தது. அழுகல் தாவப்போகும் சிவப்புகள் காம்பின் பிடிப்பிலி ருந்து இழையிலே கழன்று விடும்போல கவிழ்ந்து கிடக் கின்றன.

அவளின் கணவன், கண்ணன் அந்த ரோஜாச்செடிக் குக் கிட்டச் செல்கின்ருன். அவனைப் பின்தொடர்ந்து வந்த அடுத்தவீட்டுச் சிறுமி, சரசு வேதனை ததும்ப அந் தச் செடியைப் பார்த்தபடியே நிற்கின்ருள்.

கண்ணன் ரோஜாச் செடியை மிருதுவாகத் தூக்குகின் ருன். அதன் ஆணிவேர் முற்றிலும் அறுந்து விட்டது. அந்தச் செடியிலிருந்த ஒரே மலரை அவன் தொடப் பயந்தவன் போல — மென்மையுடன் தடவி அதன் ஒவ் வொரு இதழ்களையும், சிவப்புகளையும் ஸ்பரிசிக்கின்ருன்.

"மாமா!"

சரசு கண்ணனை அழைத்தாள். அவளின் வாக்குக் கண்ணிலே திடீரென ஒரு கேள்வி முளைத்தெழுந்தது.

"மாமா! இந்த ரோஜா இனிமேல் பூக்காதா?"

கண்ணன் ஏதோ சொல்ல வாயெடுத்தான்; ஆனால் நிறுத்திக்கொண்டான். என்னவோ நினைவுகள். எதையோ எண்ணிக்கொண்டு நாக்கைக் கடிக்கின்றான்.

"மாமா!..."

சரசுவின் குரலில் ஏக்கமும் தவிப்பும் இணைந்தொலிக்கின்றன. கண்ணனுக்கு நெஞ்சம் இளகியது.

"சரசு, செடியழிந்தபின் மலர் எப்படிப் பூக்கும்? செடி அழிந்தால் அதிலுள்ள மலரும் அழிந்துவிடும். செடி இருந்தால் அது புதுப்புது மலரைப் பூக்கும். ஆனால்—"

தன்னை மறந்து துன்பத்தின் தன்முனைவில் பேசிக்கொண்டுபோன கண்ணன் தற்செயலாக யன்னற் பக்கம் பார்த்தான். யன்னர்பக்கம் யசோதையின் முகத்தைக்கண்டதும் அவன் திடுக்கிட்டுப் பேசுவதை நிறுத்திக்கொண்டான்.

## 2

மணி எட்டு.

யசோதை அவசர அவசரமாக ஆடைகளை அணிந்து கொண்டிருக்கின்றாள். அவள் பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கு இன்னும் அரைமணி நேரத்திற்குள் கார் வந்துவிடும்.

அவள், தன்னுடைய வெறுங் கழுத்தை வருடும்போது கழுத்துக்கும் தாடைக்குமிடையே தசையோடு விம்மியிருக்கும் நரம்பில் கை சிறிது தாமதிக்கின்றது. அது அவ

ளுக்குப் பழக்கத்தில் வந்தது. இன்று அவள் வெள்ளைச் சிலைதான் கட்டியிருக்கின்றாள்.

முன்பு அவள் ஆடையணிந்து புறப்படுகிறுளென்றால் —

"யசோதை இதென்ன கழுத்திலே ஒண்டுமில்லாமல்..."

கண்ணுடியின் பரப்பிலே கண்ணனின் உருவம் அவள் தோளின் பின்னுல் தெரிகின்றது.

"இந்தா போடுகிறனே!"

அலுமாரியுள் இருந்த நகைப் பெட்டியை எடுத்து யசோதை திறந்தாள். சிவப்பு நிறமான வெல்வெட்டுள் அவள் மாங்கல்யம் உறங்குகின்றது. அதில் கிடக்கும் இரண்டு சட்டைக்குக் குத்தும் ஊசிகளும் தாலி மொக்கோடு கலந்து கிடக்கின்றன. இரண்டு மாதங்களுக்கு முன், அவள் படுக்கையில் கிடந்தபடியே கணவனிடம் மாங்கல்யத்தைப் பத்திரமாக வைக்கும்படி கழற்றிக் கொடுத்தவள் இன்றுதான் மீண்டும் அணிகின்றாள்.

அவளின் விரல்கள் சிவப்புநிற வெல்வெட்டின் பொருமிப் பிறிட்டிருக்கும் பாகத்தை வருடுகின்றன. மென்மையின் கனிவில் விரல்கள் ருசி கண்டு வெல்வெட்டின் மேட்டிலேயே மேய்கின்றன.

'எவ்வளவு சுகம்!'

அத்தச் சிவப்பு வெல்வெட்டை யசோதை தன் மென்மையான கன்னங்களோடு உராசுகின்றாள். நினைவுச் சுழல் அவளை எங்கெல்லாமோ இழுத்துச் செல்கின்றது. சிவப்புக்களின் அடுக்கில் காம்பின் கரும் பச்சை ஆதாரம். அவளின் கானமான ரோஜா. இவை கணத்துள் அவளினுள் மின்னிப்போடின. அந்தச் சிவப்பு வெல்வெட்

ஒரு சடப்பொருளாகவே அவளுக்குத் தோன்றவில்லை. சடப்பொருள் என்ற நினைவே மறந்து அந்த வெல்வெட் இரத்தமும் சதையும் நிறைந்த மனிதமேனியாகியதோ?

சிவந்து, பவளத்துண்டின் வண்ணங் காட்டி, மலர்ச்சியொன்றினையே தன்னுள் உள்ளடக்கிக் குவிந்து, மலர்ந்து, நெளிந்து, வளைந்து வாடாத சிவப்பு இதழ்களின் அடுக்காலான றோஜாவைப்போல, பசுமையின் உறைவிடமாய்க் கிடந்த ருக்மலீனின் இதழ்களும் இப்படித்தானே —

வெளியே காரின் அழைப்புக் கேட்டது.

யசோதை அவசர அவசரமாக வாசலுக்கு நடந்தாள்.

## 3

கார் விரைகின்றது.

காருக்குள்ளிருந்த எவருமே பேசவில்லை.

யசோதை மாங்கல்யம் கிடக்கும் கழுத்தை வருடும் பொழுது கழுத்துக்கும் தாடைக்குமிடையே தசையோடு விம்மியிருக்கும் நரம்பில் கை சிறிது தாமதிக்கின்றது. காற்றின் அலைப்பிலே யசோதாவின் நெற்றியில் தலைமயிர் கவிந்து சுருள்கின்றது. அவளையறியாமலே அவள் மீண்டும் சிந்தனையில் மூழ்கிவிட்டாள். அவளுக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடந்த நாளில் அவள் சிந்தனை தோய்ந்தது ...

தாலிகட்டி முடிந்ததும் அவள் மணவறையில் தலை குனிந்திருக்கின்ருள். அறுகரிசி தூவியவர்கள் அவளின் மடியிலும் சில அரிசிகளைத் தூவிவிட்டார்கள். கூறையின் மொடமொடப்புள் அரிசியும் ஒளித்திருந்தது. யாரோ ஒருவர் ஒரு குழந்தையைக் கொண்டுவந்து அவளின் மடியில் இருத்துகின்ருர். அது ஒரு திருமண சம்பிரதாயம்.

குழந்தை மிகவும் அழகாயிருக்கின்றது. அதன் பட்டு இதழ்களும், துருவி நோக்கும் கருவிழிகளும், சிறிய மூக்கும், சிவப்புநிற நுரசினூடாக அரும்பித் தெரியும் அரிசிப் பற்களும் அவளின் நெஞ்சிற்குள் சுகந்தத்தை அள்ளி இறைக்கின்றன. இதழடுக்கு மெதுமையில் பூரித்த அதன் கன்னங்களில் புன்னகைப்புச் சிறிக் குழி விழுத்து கின்றது. அந்தக் குழந்தை அவளை ஆசையோடு தடவு கின்றது. பூத்துக் குலுங்கும் அதன் பொலிவில் ஆழ்ந் திருந்த யசோதையை அதன் பிஞ்சுக் கரங்களின் தடவல் மயிர்க்கூச்சிடச் செய்கின்றது. மின்னும் மூக்குத்தியினைப் பிடுங்க முனையும் அதன் பிஞ்சு விரல்களில் அதன் நினை வுக் கவனமெல்லாம் மௌனமாய் நடுங்குகின்றது.

அப்பொழுது பின்னாலிருந்து ஒரு குரல் கேட்கின் றது.

"எடி யசோதை அடுத்த வரியம் இப்படி ஒரு குழந் தையை, றோஜாப் பூவைப்போலக் குழந்தையைப் பெத்துத் தரவேணும்"

நினைவு, துன்ப வட்டத்துள் சுழன்று பிரக்ஞையடை கின்றது.

காருக்குள்ளிருந்த யசோதை விம்மி விம்மியழுகின் றாள்.

தன்னை மறந்து, தானிருந்த சூழலை மறந்து அழுத அவளை எல்லோரும் திடுக்கிட்டுப் பரிதாபம் மேலிடப் பார்க்கின்றனர்.

கார் நின்றது.

இரண்டு மாதங்கள் படுக்கையில் கிடந்துவிட்டு யசோதை மீண்டும் தன் வகுப்பிற்குள் நுழைகின்றாள்.

"டீச்சர் வந்திட்டா!"

வகுப்பு முழுவதும் கீச்சுக் குரல்களால் நிறைகின்றது. மகிழ்வின் எல்லைபோரத்தில் குழந்தைகளின் நெஞ்சம் தாவிப் பறக்கின்றது.

"குட்மோணிங் டீச்சர்!"

"டீச்சர்!"

"டீச்சர்!"

யசோதை அவர்களைக் கனிவுடன் பார்க்கின்றாள்.

"டீச்சர் இவ்வளநாளா நீங்க ஏன் வரயில்லை டீச்சர்?"

"உங்களுக்குச் சுகமில்லையா டீச்சர்?"

பிஞ்சு உள்ளங்களின் மழலை மொழியிலே அவளின் இதயக் குமுறுதல் நீர் ஊற்றிய நெருப்பாய் அவிந்தது.

அவள் பதில் சொல்லாமலேயே வகுப்பை நோட்டம் விடுகின்றாள். சின்னக் கண்களின் பரப்பினுள், தேடி அலுத்த ஏமாற்றம்.

"ருக்மலின் வகுப்புக்கு வரவில்லையா?"

"வந்தவ டீச்சர்!"

"அங்கை நிக்கிறா டீச்சர்!"

யசோதை அந்தச் சிறுமி காட்டிய திசையைத் திரும்பிப் பார்த்தாள்.

வகுப்பறையின் ஓரங்களுக்கு அடித்திருந்த கம்பியின் ஊடாக அவள் பார்வை வெளியே சென்றது.

அது ஒரு கிறிஸ்தவப் பள்ளிக்கூடம். அதன் வளவுக்குள்ளேயே, அந்தச் சமயத்தவரைப் புதைக்கும் சவக்காலை, யசோதையின் வகுப்பிலிருந்து இருநூறு யார் தள்ளிச் சமாதிக் கட்டிடங்களால் நிறைந்து காணப்படு

கின்றது. அதற்கும் பள்ளிக்கூடத்திற்கும் ஓரடி உயரமான மதில் எல்லையிடுகின்றது. அந்த மதிலில் கைகளை ஊன்றிக் கொண்டு சுடலையைப் பார்த்தபடி நிற்கின்றாள் ருக்மலீன்.

யசோதைக்கு நெஞ்சுள் கோபம் கொழுந்துவிட்டெரிகின்றது. கழுத்தோரமாக இரத்தம் குபீரிட்டதுபோல, கழுத்தின் அருகாகக் கையை அழுத்தித் தடவுகின்றாள்.

வகுப்பைவிட்டு யசோதை வெளியே போகின்றாள்.

வகுப்பில் அமைதி; பரபரப்பான சம்பவத்தை நோக்கும் பீதி.

"ருக்மலீன்!..."

யசோதையின் நெஞ்சிலிருந்த கோபம் ஒரு சொல்லில் சிந்தியது. ருக்மலீன் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

திரும்பிய அவளின் தோற்றத்தைக் கண்டதும் யசோதையின் இதயமெங்கும் இரத்தம் குபீரிட்டது. ரோஜா முட்களை கண்ணினுள் அழுத்தியது போன்ற வேதனை.

'தலைமயிர் காய்ந்து கருகிய புல்லைப்போல வாரிவிடப் படாமற் சிலம்ப, கண்கள் ஏக்கத்தின் நிலைக்களனாய் மயங்கி கண்ணீர்த் துளிகள் சிந்த, வாடி, சேறினுள் தெப்புண்டு புழுதியில் படிந்த மலரைப்போல நிற்கும் இவளா ருக்மலீன்?'

ருக்மலீன் பெருமூச்சொன்றை உதிர்த்தாள்.

வாழ்வினில் எல்லாவற்றையுமே இழந்து விட்டவர்களைப்போல முகத்தில் ஏக்கம் படர, கண்களிலே வேண்டுதலின் பாவம் நிறைந்திருக்க அவள் யசோதையைப்பார்த்தாள்.

அவளின் இதழ்கள் அசைந்தன. "டீச்சர்!"

அறுந்ததந்தியின் இறுதிக்குரல் போல ருக்மலீனின் மெல்லிய அழைப்பில் சோகம் ஒலித்து மறைந்தது.

யசோதை தன்னை மறந்து ஏதோ சொன்னாள்.

ருக்மலீன் வகுப்பிற்குள் போனாள்.

## 4

வகுப்பு மீண்டும் தொடங்கியது.

யசோதை பாடப்புத்தகத்தை விரித்தாள்.

பிள்ளைகள் எல்லோரும் கீச்சிடுகின்றார்கள் :

"எங்கள் அம்மாப்பாடம் டீச்சர்!"

அவள் தலையசைத்து அந்தப்பாடத்தை எழுதச் சொன்னாள்.

வகுப்பில் இலேசான எழுத்துக் கூட்டும் முணுமுணுப்பும், சிலேட்பென்சில் உராசமும் மட்டுங் கேட்கின்றன.

யசோதைக்கு உடம்பெல்லாம் இரத்தம் குமுறுவது போன்ற உணர்ச்சி, எதைப்பார்த்தாலும் மனம் சிடுசிடுப்பாயிருக்கின்றது.

பார்வைக்கு அவள் இரைகொடுத்து, மனத்திற்கு பராக்குக் காட்டுகின்றாள். வகுப்பின் சுவர்களிலே தொங்கும் படங்களில் அவளின் பார்வையும், மனமும் லயிக்கின்றது.

மிருகங்களின் படம். பறவைகளின் படம். எழுத்துக்கள். பூக்கள். எல்லாமே அந்தப்பிஞ்சுகளின் பிஞ்சுக்கரங்கள் தீட்டியவையே.

பார்வை, படங்களை வரிசையாகத் துருவிக் கொண்டு, கடைசியில் அவளுக்கு எதிர்த்தாற் போல சுவரில் உள்ள

படத்தில் விழுந்தது. அது அவளே கீறியபடம். சின்னப்பாப்பா என்றுகீழே எழுதப்பட்ட குழந்தை ஒன்றின் உருவம். அதன் உருண்டைத் தலையின் உருவத்தை தஅவள் தன்னுடைய நினைவிலே சேமித்து வைத்திருந்தவள், ஓவியம் கீறும் பொழுது அதுபோல, அதேபோல அப்படி இதழ்களும், அப்படி விழிகளும், இதழடுக்கு மெதுமையில் பொங்கிய சதைக் கன்னங்களும், ஆக அந்த உருவத்தை வரைந்துவிட்டாள். கண்ணனுக்குத் தெரியாத இரகசியமாக அதை வரைந்தவள், கண்ணனுக்குள்ளாலேயே அந்தப் பெருமையைப் பெற்றவள்தான். மணவறையில் தாலிகட்டி முடிந்ததும் மடியில் இருந்த குழந்தையைப்போலவே படத்தின் பாப்பாவும். அதே அச்சு. அவள் மனம் குழந்தையின் உருவை இவ்வளவு மூர்க்கமாய் உறிஞ்சியிருக்கின்றது. குழந்தையின் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு வயிற்றுள் எதோ புரள்வதைப்போன்ற உணர்ச்சி; அது ஒரு பிரமை.

கன்னங்குழிய, கண்கள் மலர, அரிசிப் பற்களின் அழகுகாட்டிச் சிரிக்கும் அந்தக்குழந்தையின் படத்தை, தான் ஒரு குழந்தைக்கு தாயாகிக்கொண்டிருக்கும் இன்ப நினைவில், அடிமனம் மகிழ்வுப் பூக்களைச் சொரிய, அந்த மகிழ்வின் மையினாலேயே அவள் அற்புதமாக வரையும் வல்லமை பெற்றாள். அவள் அப்பொழுது முதலாம் மாதக் கர்ப்பவதி.

வயிற்றினுள்ளே இன்பப் பொக்கிஷமாய் வளரும் தன் ஆசையின் நிழலை அவள் உருவகப்படுத்தினாள். நித்தமும், வகுப்பிற்குள் வந்தால் அந்தப் படத்தையே அவள் தன்னை மறந்து பார்த்துக்கொண்டிருப்பாள். நீள அகலம் என்ற சதுரப் பரப்பிலே சிரிக்கும் இந்தக் குழந்தையின் உருவைப் பார்த்துக் கொண்டிருந்தால் அதைப்போன்ற குழந்தை

யைப் பெறலாம் என்ற மனோதத்துவத்தை அவள் நம்பி னாள்.

நாட்கள் நினைவுகளாகத் தோன்றிக்கழிந்தன.

அவள் மூன்றுமாதக் கர்ப்பவதி.

குழந்தை வயிற்றுள் புரள்வதுபோன்ற அவள் அவ ளுக்குள் கற்பித்த அந்த இன்ப உணர்வு அற்று, அவ ளுக்கு ஒரு நோவு அடிவயிற்றிலே எற்படத் தொடங்கி யது. அடிவயிற்றின் தசைநார்களைப் பிய்த்து, குருதி நாளங்களையெல்லாம் யாரோ கரகரவென்று இழுப்பது போல அவளுக்கு ஒரு வேதனை. அடிவயிற்றின் ஒவ்வொரு மயிர்க் கண்களிலும் ஊசியால் குத்திக் கிழிப்பதுபோன்ற துடிப்பு. அதோடு இரத்தமும்....

அவளே அது எனென யோசித்துப் பார்த்தாள்.

மூன்று கிழமைகளுக்கு முன் நடந்த அந்த நிகழ்ச்சி அவளது வியாதிக்கு ஒருவேளை காரணமாயிருக்குமோ?

ருக்மலீன் பிள்ளைகளோடு பள்ளிக்கூடத்தின் விளை யாட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருக்கின்றாள்.

யசோதை, மாநிழலின் கீழுள்ள சிமெண்ட் பெஞ்சின் மீது ஆயாசத்துடன் இருக்கின்றாள்.

ருக்மலீன் பார்த்தால் மீண்டும் பார்க்கத் தோன்றும் வசிகரிப்பானவள். சதா ஒளியான புன்னகை முகம். கேள்வி போடான கண்களுள், கருந்திராட்சை போல கறுப்பு, பிதுங்கிய வெள்ளையினுள் என்றுமே அது சுழன்ற படி தான். துடியாட்டமான ருக்மலீனைப் பார்க்கும் பொழுது அவளையறியாமலே அவள் மீது யசோதைக்கு அளவு மீறிய ஒரு மனச்சாய்வு.

அவள் ருக்மலீனேயே பார்த்துக்கொண்டிருந்தாள்.

ருக்மலீனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் பொழுது அவளது தாய் சொன்ன சொற்கள், யசோதையின் நெஞ்சில் இப்பொழுதும் ஈரமாய் இருக்கின்றன :

"அம்மா, இதுக்குத் தேப்பனுமில்லையம்மா... நாங்களும் ஏழையள்... இந்தப்புள்ளேயை கொஞ்சம் கவனமாப் படிப்பிச்சு விடுங்கோ. இதை உங்கடை புள்ளேயெண்டு நெய்யுங்கோ ..."

விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளைக் கவனித்திருந்த யசோதை திடீரெனக் கூவுகின்றாள்: "ருக்மலீன்"

ருக்மலீன் யசோதையின் குரல் கேட்டுத்திரும்பமுன், பின்னாலிருந்துவந்த கல்லொன்று அவள் மண்டையில் தாக்கியது.

யசோதை அவள் மண்டையில் குபீரிய இரத்தத்தைக் கண்ட மயக்கத்தோடு எழுந்தாள்.

காலடி எடுத்து வைக்கமுன்...

உலகம் உருள்கிறது; காட்சி உருள்கின்றது; எங்கும் இரத்தத்தின் குதியாட்டமோ...

அவள் மயங்கி நிலை குலைந்து வீழ்ந்தாள்.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அவளுக்கு அந்த இடர்ப்பாடு.

அவள் கண்ட கனவுகள்...

நான்காவது மாதத்தில் அவள் படுக்கையில் கிடக்க, கணவனே டொக்டர் இரகசியமாக அழைத்துச் சென்ற பொழுது—

அவள் செய்த தவம்; அவள் நெஞ்சுக்குள் வளர்த்த கற்பனைகள்; அரைகுறை மயக்கமான நிலையில் அவள்

தன்னை மறந்து, தன்குழந்தையோடு கொஞ்சிக்களிப்பது போன்ற மன மயக்கமான நிலை—

எல்லாமே எரிந்து சாம்பராயின.

அவளுக்குக் கருச்சிதைவு!

ஏதோ அதிர்ச்சி அவளுக்கு கருச்சிதைவையளித்து விட்டது!

அவளின் ரோஜா, மொட்டிலேயே அழிந்துவிட்டது.

'அதிர்ச்சி —

ருக்மலீன் —

கருச்சிதைவு —'

## 5

அந்தச் சின்னப் பாப்பாப் படத்தினின்று நினைவு கழன்று, மண்ணுக்கு, அவள் வகுப்புக்கு வந்தது.

"எல்லோரும் எழுதியாச்சோ?

குரலில் கடுமை ஒலித்தது.

"டீச்சர்! டீச்சர்!"

சிலேட்டுகள் மேலே உயர்ந்தன. முன்னுக்கு முன்னுக்கு நீண்டன. ஒருவரையொருவர் நெருங்கும் முனைப்பு.

மூன்றாவது வாங்கின் முதலாவது சிலேட் உயரவுமில்லை; ஒருகுரலுமில்லை.

யசோதைக்கு நெஞ்சினுள் கோபாக்கினி குமுறியது.

'அதிர்ச்சி —

ருக்மலீன் —

கருச்சிதைவு —'

நெஞ்சுக்குள் வார்த்தைகள் கொதித்தன.

மூன்றாவது வாங்கின் முதலாவது இடத்தில் யசோதையின் கண்கள் கனலைக்கக்கின.

ருக்மலீன் சிலேட்டை நாடிக்கு ஆதாரமாய் வைத்துக் கொண்டு திசை திரும்பிக் கம்பிகளுக்கூடாகச் சுடலையைப் பார்த்தபடி இருந்தாள். பிடரிப்பக்க நடுக்கமும் அற்றுப்போக அவள் உலகை மறந்த நினைப்பினில் லயித்திருந்தாள்.

ஒரு நிமிடமும் இல்லை.

மனம் அசுரகதியில் செயலாற்றியது.

அசுரகணம் யசோதையா? யசோதை அசுரகணமா? இரண்டு ஓசைகள்!

சிலேட் உடைந்து நொருங்கியது.

ருக்மலீன் அடி விழுந்த தன் கன்னத்தைத் தடவினாள்; அதிர்ச்சியின் வீறல் முகத்தில் ஒரு கணம் நிழலாடியது.

கன்னத்தின் செழுமையோடு மூன்று இரத்தக்கோடுகள் ஒளிகாட்டி அதைத்தன.

"ஏனடி எழுதவில்லை?"

ஆங்காரத்தின் அழுத்தமான குரல், அமைதியின் முன் தேய்ந்து மடிவதை யாரால் சகிக்கமுடியும்?

"நான் அம்மாப் பாடம் எழுதச் சொன்னது உனக்குக் காதிலை விழயில்லையாடி?"

"நீ என் எழுதேல்லை. உம்மாண்டி மாதிரி நிக்கிறியே. பொறு பொறு: இன்டைக்கு உன்ரை வீட்டை வந்து உன்ரை அம்மாட்டைச் சொல்றன்..."

ஆத்திரம் கண்களை மறைக்க, வார்த்தைகள் அறிவிற்குக் கட்டுப்படாமல் உணர்ச்சியின் உந்தலில் பிரவாகமாய் வடிய பிஞ்சு நெஞ்சு அதன் வேகத்தைத் தாளாமல்—

அடிக்கு அசையாமல், பயமுறுத்தலுக்கு அசையாமல், நினைவின் கருக்கிருட்டில் தன்முனைவு இன்றி நின்ற ருக்மலீன் திடீரென்று விம்மினாள்; விம்மிவெடித்த கேவலும் அழுகையும் இதயத்தைக் கசிந்துருகச் செய்தன.

அந்தச் சிறுமலர் வார்த்தைச் சூட்டின் தகிப்பினில் தாளமுடியாது நெஞ்சக இதழில் கருகல்காண ஆரம்பித்தது. தேனும் மகரந்தமும் செழித்திடவேண்டிய அதன் நெஞ்சம் பாலைநிலத்தின் வெம்மையுடன் கொதித்து எரிந்தது.

ருக்மலீனின் சொற்கள் துன்பத்தின் கேவலுடன் விக்கி விக்கித் தடுமாறின.

"நீங்க வீட்டை வராதேங்கோ. டீச்சர்... அங்கை அம்மா இல்லை... அவ செத்துப்போ..."

"ருக்மலீ!..."

பெண்மை கணத்தில் நடுங்கியது.

யசோதை அந்தக்கணமே தாயானாள்.

சேற்றின் தெப்பலுள் இரத்தமாய்க் கிடந்த ரேஜாவும், கண்ணினுள்ளே தெரியாது கனவாகித் தோன்றி அழிந்த அவளின் உருவாகச் சிசுவும் அந்த வேளையுள் அவளுள் உயிர் பெற்றனபோல அவளினுள் நிறைவு பூரித்தது.

ருக்மலீனின் குரல் குலுங்கியழுதது.

"எனக்கு அம்மாதான் வேணும். அவதான் என்னிலை நேசம்.

ருக்மலீனின் குரல் தேய, அவளின் சிறிய கரம் நிமிஷத்தில் மேல் எழுந்து திசை திரும்பி சுடலைக்கு நேராகித் தடுமாறியது.

"அதுக்குள்ளைதான் என்ரை அம்மா இருக்கிறு அவேட்டை என்னைக்கொண்டே விர்றீங்களா டீச்சர்..."

யசோதைக்கு இதயம் வெடித்தது; உயிரே துவள, அவளின் குரல் ருக்மலீனை வாரி அள்ளியது. "ஐயோ மகளே!"

ருக்மலீன் பேச முடியாமல் யசோதையின் உடலோடு சாய்ந்தாள். யசோதை கட்டியிருந்த வெள்ளைச் சிலையில் அவள் கண்ணீரும், மூக்கின் சிந்துதலும் ஒற்றுண்டன.

யசோதை நிலை குலைந்தாள். நெஞ்சின் முழுப்பாகத்திலும் வியாபித்திருந்த துன்பம் விக்கலாய் அழுகையாய் வெளிக்கிளம்பியது. காலையில், காற்றின் வலிப்பினுல் அழகிழந்து, வேரறுந்துகிடந்த செடியின் இலையுள், இரத்தக் கட்டியாய் கிடந்த ரோஜாப்பூவைப் பார்த்துக் கண்ணன் சொன்ன சொற்கள் யசோதையின் காதோடு ஒலிக்கின்றன.

'செடியழிந்தபின் மலர் எப்படி வாழும்? செடி அழிந்தால் அதிலுள்ள மலரும் அழிந்துவிடும்.'

உணர்ச்சியினுல் குமுறி நின்ற செடியும் — அதன் காலடியில் மனம் உதிர்ந்து கிடந்த பூவும் அவையவை சிந்தனைக்குள், அமைதியின் கரங்களுள் அணைந்து நிலை மறந்தன. யசோதை தன்னோடு சாய்ந்த ருக்மலீனை வாரி

யணைத்தாள். அவளின் மனம் நிறைவுடன் முணுமுணுத்தது. 'மலரைக் கருக விடமாட்டன்'

தான் விசி யெறிந்ததால் உடைந்த ருக்மலீனின் சிலேற் துண்டுகளை யசோதை பொறுக்கிச் சேர்த்தாள்.

"ருக்மலீன்!"

அவளின் குரலில் தாய்மை மணந்து கமழ்ந்தது.

ருக்மலீன் வாத்ஸல்யத்துடன் அவளைப் பார்த்தாள்; கண்ணீர்ப்பனிப்பில் அவளின் விழிகள் படபடத்தன. யசோதா ருக்மலீனை வாரித்தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். யசோதையின் அணைப்பினை மீறிய ருக்மலீனின் தலை சவக்காலையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தது.

# தாகம்

பூரண நிலவின் பொன்னொளியில் வைசாலி நகரம் அழகில் குளித்துக்கிடக்கின்றது. இரவின் பாதி இறந்து மடிந்த நிலையில், செடிகளின் உயிர்களும் கண்மூடித்துயில் கின்றன. அசைவற்ற மௌனநிலையில், நிலவுக் கற்றைகள் சலனமற்று மண்ணில் கசிகின்றன.

அம்பபாலி இன்னமும் தூங்கவில்லை. தபஸ் செய்யும் இளமகளைப்போல அவள் அசையாமலே அமர்ந்திருக்கிறாள்.

அவளது மேலாடை தோட்புறத்திலிருந்து கழன்று வழுக்கும் தரையில் விழுவதையும் அவள் கவனிக்கவில்லை. சயனமஞ்சத்தின் விளிம்போரத்தைக் கைகளால் சுரண்டிக் கொண்டிருக்கும் வேளையில், பெருமூச்சுகள் உணர்வின் தகிப்பினில் காய்ச்சுண்டு நெஞ்சைக் கீறிக்கொண்டு எழுந்தன.

பிறைநெற்றியில் முத்துக்கோர்த்திருக்கும் வியர்வையைச் சுண்டியெறிந்துவிட்டு, நெற்றிப்பட்டத்தைக் கழற்றும் வேளையிலும், நாட்டிய முத்திரைகளைக் கைகள் அபிநயிக்கின்றன. நெற்றியின் வழுவழுத்த மென்பகுதியில் சிதறி அலைந்திருக்கும் முன்னுச்சி மயிரைச் சீராக்கிக்கொள்ளும் வேளையில் அவளையறியாமலே அவளின் அதரங்கள் அசைந்து முணுமுணுக்கின்றன:

'சீ!... என்னவாழ்வு... அமைதியில்லை; ஆறுதல் இல்லை. என் இதயத்தை வருடிச் செல்வனவெல்லாம் ஏன் ஏக்க நினைவுகளாகவே இருக்கின்றன?'

கரிக்கும் மனதினுள், எண்ணத்திவலைகள் கசப்பாகச் சொட்டுணுகின்றன.

'அபயமுத்திரை பிடிக்கும் கரங்கள் யாசிப்பது அபயம் ஒன்றைத்தானு? விழிப்பு... ஒப்பனை... ஆட்டம்... உல்லாசம்... இவைகளெல்லாம் வெறுப்புகை மூட்டமா? இவைகளையெல்லாம் கடந்து என்மனம் எந்தத் தேவையைத் தேடி ஊடுருவுகின்றது?'

அம்பபாலி கட்டிலில் இருந்து எழுந்தாள். குலைந்த தலைமயிர் முதுகெங்கும் படர்ந்து மூடுவதோடு தோள் வழியாகப் புரண்டு முன் புறத்தினில் கவிகின்றது. அவள் தலையை வெட்டிச்சாய்த்து உலுப்பி, தலைமயிரைப் பின்னுகத் தள்ளினுள். கரங்கள் மயிரை அடக்கித் தடவிப் படிவு செய்கின்றன.

சாளரத்தின் திரைச்சீலைக் கயிற்றைப்பிடித்தபடியே அந்த மாஞ்சோலையை அவள் பார்த்தபடி நிற்கின்றுள். மாவிலைகள் அசையாத அமைதியான நிலையிலும் அவள் மனதினுள் குமுறல்கள் துளிர்த்து பூதாகார வடிவம் பெறுகின்றன.

'சின்னச்சின்ன மாம்பூக்கள். நறுநறுப்பாய்... மஞ்சள் பூசிய வெள்ளை வண்ணக்கலவையில் நீளப்போரான அடுக்குகளாய்... வாய்க்குள் போட்டால் புளிப்பும் கயர்தலும் கலந்து... அதை வாய்க்குள் போட்டு மென்று கொண்டால்... ஆ! அது எவ்வளவு இனியகாலம். வாழ்வின் கனவிற்கெல்லாம் மெருகூட்டிய அந்தப்பருவம்... இனி... இனி எனக்கு அந்தப் பருவத்தின் மகிழ்ச்சி யெல்லாம் மரணத்தின் பின்புதான் கிட்டுமா?'

சடக்கென்று திரைச்சீலைக்கயிற்றினை அவள் சுண்டி இழுத்துவிட்டாள். சாளரத்தின் வழியாக வெளியே தெரிந்த இனிய காட்சிகளை காசிப்பட்டுத்திரை மறைத்து மூடுகின்றது.

## 2

காலைக்கன்னி புட்குரலால் பூபாளம் இசைக்கின்றாள். அறையெங்கும் மாம்பூக்களின் வாசனை சமழ்கின்றது.

அம்பபாலி மெல்லணையில் தன்னை மறந்த துயிலில் ஆழ்ந்துகிடக்கின்றாள்.

சேடியர்கள் தங்களது பாதகிண்கிணிகளைக் கழற்றி வைத்துவிட்டு அறைக்குள் புதுமலர்கள் தூவி அலங்கரிக்கின்றார்கள். சாளரத்திரைகளோடு முட்டிக்கொண்டு விழும் மாஞ்சருகுகளின் நிழல், மெல்லிய மஞ்சள் ஒளியின் பின்னணியில் தெரிவதுகூட அந்த அறைக்கு அழகைக் கொடுக்கின்றது.

கனவின் அமிழ்ந்தலுள் தன்னை இழந்த அம்பபாலியின் மனம் அரைகுறையில் விழிப்புற்றபடி சொற்களை முனகுகின்றது.

'நான் சிறுகுழந்தையாக இருந்தபொழுது மாம்பிஞ்சுகளைப் பொறுக்கித்தின்றுகளித்த மகிழ்வினை இப்பொழுது நினைத்துப் பார்த்தும் அனுபவிக்க முடியாதிருக்கின்றேன். அந்த மகிழ்வினை என்னிடமிருந்து இப்பொழுது பறித்தவர்கள் யார்? அழகும், கலைகளும், செல்வமும், கவர்ச்சிகளும் என்னிடம் உறவு கொண்டாடியபோதும் நான் மனதில் நிம்மதியில்லாதிருக்கின்றேன். பிறந்து சிலமாதங்களே ஆகாத சிசுவான என்னை வைசாலியின் மாமர நிழலிலே எனது தாய் கிடத்திவிட்டு மறைந்தபொழுது நான் அழாமல், கன்னங்குழிய கால்விரல்களைச் சூப்பிக்கொண்டு கிடந்ததாகத்தானே என்னுடைய வளர்ப்புத்தாய் என்னிடம் சொன்னாள். இளமைப் பருவத்துத் தொட்டிலிலே நான் அமைதியைப் பெற்றேன். வெம்மை நிறைந்த என் வாழ்வில் அது ஒரு குளிர்மை... அது ஒரு கணத்து நிழலின்

சாயையா? குமரப் பருவத்தின் வைகறையிலே எனக்குக் கிட்டுவதெல்லாம் ஏன் மன அவிதலாகவே இருக்கின்றது?'

அவளின் உள்ளம் சலனப்பட்டுச் சிறகடிக்கின்றது. நினைவுக் குருவி, அவளின் நெஞ்சக் கனியை கேள்விச் சொண்டினால் கொத்திக் கொத்துகின்றது.

யௌவனத் திமிரில் கொழித்திருக்கும் அங்கங்களைக் குறட்டிக்கொண்டு அவள் குழந்தையைப் போல புரண்டு கிடக்கின்றாள்; மெல்லிய வெண்துகிலைக் கரங்கள் இழுத்து உடலை மூடுகின்றன.

அவளது வாழ்விற்கு ஆறுதலளித்த கலைகள்கூட அவளைக் கொன்று தின்னும் பிசாசுகளாக மாறி விட்டாற்போல அவளின் நெஞ்சிற்குள் வெறுப்புணர்ச்சி தலைதூக்குகின்றது.

படுக்கையின் விளிம்போரமாக இருந்த வீணையின் தந்திகளில் அவளின் கரம் தற்செயலாகவே படுகின்றது.

"டங்... டங்... ரங்... ர்ர்ரிங்..."

வீணை எழுப்பும் முதல் ஒலியில், மீண்டும் காந்தள் விரல்கள் வேட்கையுற்று வீணையின் நரம்புகளை ஸ்வரம் குன்றாமலே மீட்டுகின்றன. உறக்கத்தின் அரைவிழிப்பு நிலையில், கட்டிலில் கிடந்தபடியே அவள் வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாள்...

வீணை பிறப்பிக்கும் இனிய ஒலியிலே அவளின் உடல் உருகி அந்த உருக்கத்தின் பிரவாகமாய் அவளின் ஓசை வீணையொலியோடு சமமாகியுருப்பெற்று இணைந்து ஜீவ நாதத்தை அறையெங்கும் கமழ்விக்கின்றது......

உணர்வும், உயிரும் மேலே மேலே பறக்கும் கலையின் வெறித்தன்மையாய் இசை எங்குமே நர்த்தனமிட்டுத் துடிக்கின்றது...

" தனிமைதனிலே நான் செல்ல
தனிமைதனிலே நான் செல்ல
கனிவு இலேயே மனமதிலே
கனிவு இலேயே மனமதிலே
வெளியே அழகே, புகமொலியே!
வெளியே நானோர் யாமானேன்."

பாட்டை முடித்துக்கொண்டு அவள் கண்களை மலர்த்து கின்றாள். அந்தப் பாட்டை அவள் மீண்டும் நினைத்துக் கொள்ளுகின்றாள். 'இதைப் பாடியது?' அவளின் புருவங்கள் கேள்வியில் நெரிய, இதழ்கள் புதிரவிழ்க்கும் நிலையினில் முணுமுணுக்கின்றன.

அவள் உடைகளைச் சரிப்படுத்திக்கொண்டு எழுந்து, கால்களை நிலபாவாடையில் அழுத்திச் சுரண்டினாள்.

சேடி ஹேமாங்கினி செருமியதைச் செவியுற்று அம்பபாலி கேள்வியோடு அவளை நோக்கி நிமிருகின்றாள்.

" அம்மா, இவ்வளவு அற்புதமாகப் பாட்டுப் புனைகின்றீர்களே!" ரசிப்பு சொற்களில் பிதுங்க, குரல் தயங்கி ஒலிக்கின்றது.

முடிச்சுப் போடப்பட்ட கயிற்றைப்போல அம்பபாலியின் மனதிற்குள் ஏதோ நெருடுவதைப்போன்ற உணர்வினில் அவள் கைகளை உதறிக்கொள்ளுகின்றாள்.

## 3

புருவங்களுக்கு மைதீட்டிக்கொண்டிருக்கும் மந்தாகினியை அம்பபாலி கூர்ந்து நோக்குகின்றாள். மந்தாகினியின் முகத்தில் என்றுமில்லாத தனிக்களை ஒளியிட்டிருக்கின்றது.

தன்னுடைய கால்களுக்குச் செம்பஞ்சுக் குழம்பு பூசிக் கொண்டிருக்கும் கௌதமியை நோக்கி, அம்பாலியின் நீண்ட கண்கள் கவிழ்கின்றன.

"கௌதமி!"

கௌதமி அம்பபாலியின் உள்ளங்காலை நிலத்தில் வைக்காமல், கைகளில் தாங்கியபடியே நிமிருகின்றாள்.

"என்ன அம்மா?"

"இன்றைக்கு என்ன என்றுமில்லாத மகிழ்வுடன் மந்தாகினி இருக்கின்றாளே?"

கௌதமி நாணத்துடன் தலையைத் தனது தோளோடு புதைத்தாள். அவளுடைய கன்னங்களில் நாணம் செம்மை பூச, மூன்று குமிழ்கள் கன்னக் கதுப்பில் விழுந்து அந்த அழகிற்குக் கிரீடமிடுகின்றன.

"இல்லையம்மா... அவளுக்கும் அவளது காதலருக்கும் விரைவில் திருமணம்... அதுதான்..."

"ஓ!"

அம்பாலியின் குரல் நெடுமூச்சோடு எழுந்தது. மனதுள் விசாரமும், வெறுப்பும் கலவையாய்க் கலந்து குமிழி பெருக்குகின்ற மன நச்சரிப்பில் அவள் எரிந்து விழுகின்றாள்.

"சரிசரி அலங்காரம் போதும். இனி நீங்கள் போகலாம்!"

அரைகுறை அலங்கரிப்பு நிலையில், திடீரென்று தங்களை விரட்டும் அம்பபாலியை விரியும் விழிகளால் பார்த்தவாறே சேடிகள் அறையைவிட்டு அகலுகிறார்கள்.

சாளரத் திரைகளைத் திறக்கவும் மனமின்றி, அவள் பொற்றவிசில் அமர்ந்து கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தபடியே இருக்கிறாள்.

'என்னுடைய அழகைத்தான் எத்தனைபேர் தம்முள் கனவுகாண்கிறார்கள்! என்னை மனைவியாக வரித்துக்கொள்ளத் தவங்கிடக்கும் இளைஞர்கள் தொகை! ஆனால் நான்? நான் தனிமை. செல்வமும், கலைகளும், உல்லாசமும், உடற்பசியைத் தீர்த்துக்கொள்வதுந்தான் வாழ்வா? குடியரசின் கீழ் செல்வச் செழிப்பில் மிதக்கும் லிச்சாவியே எனது எழிலைப் போற்றும்பொழுது நான்மட்டும் ஏன் எனக்குள்ளேயே செத்துக்கொண்டிருக்கிறேன்? என் உள்ளம் ஏன் வெறுப்பினிலேயே மிதந்துகொண்டிருக்கின்றது? எங்கோ இருந்துகொண்டு எனது அழகிற்காக — வெறும் சொல்லளவில் மட்டும் கேள்விப்பட்ட எனது அழகிற்காக செல்வங்களையெல்லாம் கொட்டிக் குவிக்கத் தயாராயிருக்கும் இளைஞர்கள்மேல் ஏன் எனக்குப் பச்சாத்தாபம் சுரக்கின்றது? என்னை எல்லோரும் அழகரசி என்கிறார்கள். ஆனால் என்னுடைய நெஞ்சம் அடிமையாய் நைகின்றது. என்னுடைய மனம் எங்கும் சொற்களை நான் பெறாதவளாய் மனதின் அந்தரங்கத்தினுள்ளே ஓயாமல் புலம்பிக்கொண்டிருக்கின்றேன்.'

தண்டறுந்த நீர்ப் பூவாகிய நெஞ்சம் துன்பத்தால் அலைப்புண்டு நடுங்குகின்றது. அவளுடைய கன்னங்களில் கண்ணீர் தாரைகட்டி வழிகின்றது. விம்மியழுதலில் தன்னுடைய இனந்தெரியாத துன்பங்களை அலசிக் கழுவுதற்கு அவள் அவாவுகின்றாள்.

அவளுக்கு அழுதாலும், சிரித்தாலும் துணையாக யாருமில்லை. சேடியர்கள் அவளை அம்மா என்று மரி

யாதை ததும்ப அழைக்கின்றார்கள்; செல்வந்தர்கள் அவளை வைத்த விழி வாங்காமல் காமம் நிறைந்த பார்வையாலும், இச்சை பொதிந்த வார்த்தைகளாலும் எதிர்நோக்குகின்றார்கள்; கலைகளெல்லாம் அவளை அவளாயில்லாமல் ஆட்டி வைத்து வெறிபிடிக்கச் செய்கின்றன. ஆனால் அவளின் இதயம்?

நாடு புகழும் அழகும், கலைத்திறனும் அவளிடம் பொருந்தியிருந்தபொழுதும், அவளை உரிமையோடும், கண்டிப்போடும் மனிதப் பெண்ணாக நடத்தும் ஒரு உயிரைத்தான் அவளின் மனம் தேடித்தேடி அலைந்துகொண்டிருக்கின்றது.

## 4

"போ!... என்னை அம்மா என்று சொல்லாதே!"

அவள் சேடியரோடு சீறிச் சினக்கின்றாள்.

'அம்மா என்று சொல்லாதே'

மீண்டும் தன் வாயினாற் சொன்ன வார்த்தையை அம்பபாலி நினைத்துக்கொள்ளுகின்றாள். அந்தச் சொல், மனதில் வேர் பதித்துச் செடியாகி வளர்கின்றது ...

"அம்மா என்று சொல்லாதே... போ!..."

அவள் அந்தச் சொற்களையே மீண்டும் முணுமுணுக்கின்றாள்.

'என்னுடைய தாய், என்னை மாமரத்தின் அடியிலே வளர்த்துவிட்டு அகல, நான் தனியளான திகிலின் மன உடைதலில் அம்மா என்று மழலை மிழற்றியிருந்தால் அவள் இப்படித்தான் சொல்லியிருப்பாளா? என்னை அனாதையாக, முதற்பால் குடியாத பச்சிளம் சிசுவாக விட்டுச்சென்ற அதே வேளையிலேயே என் மனதிலிருந்த அமைதியையும் அவள் திருகிப் பறித்துச் சென்றாளா?'

அவளின் நெஞ்சம் தளதளக்கின்றது. பழைய நினைவுகளிலேயே அவளின் மனம் ஆழ்ந்து சுழியோடிக் குடைகின்றது.

'சின்னஞ்சிறு வயதிலிருந்தே எனது நெஞ்சம் எதனை ஆதாரமாகத் தேடியலைகின்றது? என்னுடைய பெயரைச் சொல்லி அழைத்தது யாருமில்லை. என்னுடைய அழகிற்கு மதிப்பும், மரியாதையும்... என்னுடைய ஆட்டத்திற்கு தலைவணங்கலும் போற்றலும்... என்னுடைய அழகை விழுங்கத்தானே இளைஞர்கள் வேட்கையுற்றுத் தவிக்கின்றார்கள். எனனுடைய இளமையை நுகரத்தானே இவர்களுக்குள் போட்டி... நான் ஏன் அழகாய்ப் பிறந்தேன்? என்னை இங்கே யார் விரும்புகிறார்கள்? என்னுடைய இதயத்தினைப் பூரிக்கச் செய்வதற்கு இந்த உலகில் ஒரு அன்புக் குரலும் இல்லையே! எல்லோரும் எனது வெளிப்புற மினுக்கு அங்கங்களை அணைந்து சுகிக்கவே விரும்புகிறார்கள்... ஆனால் தவிக்கும் மனதினளான இந்தக் கன்னியின் துன்பத்திற்காக இரங்கி ஆதரவான மொழி கூறுவதற்கு ஒருவர் கூட இந்த மண்ணிற் பிறக்கவில்லையா?'

அவள் துள்ளி எழுந்தாள்; அவளையறியாமலே அவளது குரல் சவுக்கின் விசிறலோடு ஓங்கி எழுகின்றது.

"இதற்கு விடை வேண்டும்... இதற்கு விடை வேண்டும்..."

மாடமெங்கும் அவளின் குரல் முட்டி உடைகின்றது. சித்தம் சிதறிய சலங்கல் மன நிலையினள்போல அவளின் முகம் பேதலிப்புக் காட்டுகிறது.

லிச்சவி நகரத்தின் கணிகையான அவள் மன அமைதியைத் தேடி மாமரத்தடியில் அமர்ந்திருக்கிறாள். அவளை

நோக்கி மந்தாகினி தயங்கித் தயங்கி அடியெடுத்து நடந்து வருகின்ருள்.

"அம்மா!"

மாமரச் சருகை நுள்ளியெறிந்துகொண்டிருந்த அம்ப பாலி, காலை மணலில் உராசியபடியே கேள்விக்குறியைக் கண்களில் ஏற்றிப் பார்க்கின்ருள்.

"என்ன?"

மந்தாகினி வளையல்களைத் திருத்தி முழங்கையோடு தள்ளியபடியே சொல்லுகின்ருள்.

"அம்மா, நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்களே... அந்தத் துறவி கௌதமர்..."

"என்ன?"

மடியில் குவிந்து கிடந்த சருகுத்துணுக்குகள் நிலத்தில் சிதற அவள் துள்ளியெழுந்தாள்.

"லிச்சாவிக்கு அவர் வந்திருக்கின்ருரா?"

அவளுடைய வாய் இயக்கமின்றி அசைகின்றது.

'கௌதம சித்தார்த்தன்; அந்தத் துறவிக்குள்ள நிம்மதி எனக்கில்லையே! நானே பலமுறை எண்ணியிருக்கிறேன் செல்வத்திலும், இச்சையிலும்தான் வாழ்வின் பூரணத்துவம் தங்கியிருக்கிறதென்று, என்னிடம் கோடி செல்வம், பட்டுடை, பரிவாரம் ஆகிய யாவுமே நிறைந்திருக்கின்றன. ஆனலும் நிம்மதியின் இழையளவு கீதம் கூட எனது வாழ்விலே ஒலித்ததில்லை. எனது வாழ்வு என்றுமே இப்படித்தான் போய்க்கொண்டிருக்கப் போகின்றதா?'

அவளின் சிந்தனை கேள்வி வளையங்களுள்ளேயே இழுவுண்டு சுழல்கின்றது. உடலை உதைக்கும் மனஉளைவில் அவளின் கண்கள் ஓயாமலே நீரைச் சொரிகின்றன.

## 5

தேர் விரைகின்றது.

சாதாரணமான உடையில் அம்பபாலியின் அழகு யௌவனத்தின் கனவெனத் தோன்றுகிறது. ஆரமணியா வெறுங் கழுத்தை இடது கையினால் தடவிக்கொண்டே அவள் புன்முறுவல் செய்கின்றாள்.

இதயத்துள் மனநிறைவு, நிறைந்து கொலுவிருக்கின்றது.

கௌதமசித்தார்த்தனின் சாந்தமயமான கண்நோக்கில் இருதயத்துள் அடர்ந்து கனத்திருந்த துன்பமெல்லாம் ஒற்றி வழித்து எடுக்கப்பட்டதுபோல அம்பபாலியின் மனது உணர்வு கொண்டது.

மீண்டும், நினைவுகள் ஆம்ரவனத்திலேயே தொட்டுப் படர்கின்றன.

'லிச்சவிதான் அழகு பொருந்திய திருநகர் என எல்லோராலும் போற்றப்படுகின்றது. குடியரசு நடத்தி அயலரசுகளைக் கவர்ந்துவிட்ட வல்லமை மிக்க அரசு இது! மாடங்களும்; கூடங்களும்; மண்டபங்களும். ஆனால் அழகிற்குள் அமைதியென்பது துளியளவுகூட இல்லையே! ஆம்ரவனத்தில் சீவர ஆடைதரித்து தத்துவவிசாரம் செய்யும் சிரமணக் குழுவினரின் அமைதி இங்கே எங்கேயாவது உண்டா? அவர்களைக் கண்ட உடனேயே எனக்கு என் ஓமாக்கினிபோல நெஞ்சினுள் சாந்தியே பொங்கிவழிந்தது? அவர்கள் எனது வீட்டிற்கு உணவு உண்ணுவதற்கு வரச் சம்மதித்த அந்த ஒரு சொல்லிலே நான் என்னையறியாமலே என் உவகையுற்றேன்? என்னை அவர்கள் எல்லோரையும் போல ஒரு தாசாக — சாதாரண பெண்ணாக மதித்த அந்த நிலையில் நான் என் என்னையே மறந்தேன்?'

தேர், குலுக்கிக்கொண்டு நின்றது.

விரைவின் திடீர் நிறுத்தலில் அவள் சாய்ந்து முன்னே பார்க்கிறாள்.

அவள் முன்னே நான்கு தேர்கள்.

யசோவர்மன், தயோனதன், பிண்டிகன், மானசன் ஆகிய நாலு லிச்சவிகணப் பிரபுகளும் தேரிலிருந்து அவளை வைத்தவிழி வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். குறும்பில் சுழலும் கண்களைப் போல வார்த்தைகளும் கிண்டல்கக்கி எழுகின்றன:

"இன்றைக்கு என்ன கண்மண் தெரியாத மகிழ்ச்சி?"

அம்பபாலி ஏற்கனவே பதில்சொல்லக் காத்திருந்தவள் போல, மகிழ்ச்சியின் கெக்கலிப்பில் அமைதியோடு விடை சொன்னாள் :

"இன்றைக்கு பகவான் புத்தர் என்னுடைய வீட்டிற்கு அமுதுண்ண வருகின்றார்... அதுதான்..."

"என்ன ?"

"ஆ ?"

பிரபுக்கள் சக்கரம் கழன்ற தேராகி அதிர்ந்தார்கள். அவர்களையறியாமலே உள்மன உந்தலில் வார்த்தைகள் கசப்புடன் தெறித்தன :

"போதிமாதவனை வரவேற்பது இந்த வைசாலியிலே ஒரு கணிகையா ? இது வைசாலி நகருக்கும், லிச்சவி குலத்துக்கும் மாறாத அவமானமாகிவிடும்."

"தவத்திருவொருவனை கேவலம் நீயா அம்பபாலி வரவேற்பது ?" அம்பபாலிக்கு அவர்களின் குரல் கேட்காத ஆத்திரநிலை. அவளுடைய நெஞ்சம் மூக்கைச்சுழிக்கின்றது.

"நான் கேவலமானவளா? என்னிடம் இவர்களே வலியவந்து எத்தனைநாட்களாக யாசித்திருக்கிறார்கள்; அது எதற்கு? இந்தக்கணிகையிடம் இவர்கள் நாய்களாக வாலாட்டியிருந்தார்களே நீதான் சௌந்தர்யங்களின் லட்சியம் என்றெல்லாம் புலம்பியிருக்கிறார்களே, இவற்றைச் செய்யும்பொழுது இவர்களுக்கு நான் என் கேவலமானவளாகத் தெரியவில்லை?'

அம்பபாலி ஏளனத்துடன் அவர்களைப் பார்க்கின்றாள்.

'என்னுடைய வீட்டுவாசலில் தவங்கிடந்தபொழுது இவர்களுக்கு அவமானம் வரவில்லை. என்னுடைய பெயரைப் பித்தர்களாகச் செபித்தபொழுது இவர்களுக்கு அவமானம் வரவில்லை. ஆனால் இப்பொழுதுமட்டும் நான் அவமானமாகிவிட்டேன்! சீ! வெறும் உடலிச்சைகொண்ட மிருகங்கள் ... சதைப்பசியர்கள் ... இவர்களின் மான அவமானப் போதனைகளெல்லாம் தமது நலன்களைக் காப்பாற்றுவதற்குத்தான்!'

கரகரத்த செருமல் சிந்தனையை அறுக்கின்றது.

"நீங்கள் அவரை அழைக்கவேண்டாம். பத்தாயிரம் பொன்னை அதற்கு ஈடாகத் தருகின்றோம். நீங்கள் அழைத்தால் அது எங்கள் கணத்துக்கும், நகரத்துக்கும் மாறாத அவமானமாகிவிடும்!ய "சோவர்மனின் கீச்சிட்ட குரலுக்கு, பிண்டிகனின் தலை அசைப்பு கெஞ்சுதல் காட்டியது."

அம்பபாலியின் நெஞ்சம் ஓங்காளித்துக் குமட்டியது.

'இரவில் ஒரு உள்ளமும். பகலில் இன்னொரு உள்ளமும் படைத்த இவர்கள்தான் அவமானத்தைப்பற்றிப் பேசுகின்றார்கள்!'

குரலில் உறுதி கிளர அவள் சொல்லுகின்றாள் :

"பத்தாயிரம் பொன்னல்ல வைசாலியே என் காலடியில் காணிக்கையாக வைக்கப்படினும் நான் சாக்கிய முனியை உணவுண்ண அழைத்தே தீருவேன்."

"என்ன, என்ன ?"

பிரபுக்கள் கொதித்தனர், மனதின் ஆத்திரம் அவர்கள் சொற்களில் சிறிக்கிளம்பியது; தயானதனின் வலது கை உடை வாளினைப் பற்றியது. மானசன் தலையைச் சொறிந்து கொண்டு யசோவர்மனின் பின்னால் ஒதுங்கிக் கொண்டான். இவ்வளவிற்கும் அம்பபாலியின் செய்கையில் எவ்வித சலனமுமில்லை. பிரபுக்களை எதிர்த்தால் என்ன விளைவுகளேற்படுமென்ற பயமெதுவுமின்றி அவள் அவர்கள் மேல் துச்சமாகப் பார்வையை எறிந்தாள். அவளின் செவ்விதழ்களின் பிதுங்கலில் தன்னம்பிக்கை நிறைந்து வழிந்தது.

"இந்தக் கணிகை சொன்ன சொற்களைக் காப்பாற்றியே தீருவாள். கணிகைக்கும் இதயமிருக்கிறது செல்வர்களே, கணிகைக்கும் இதயமிருக்கின்றது."

அம்பபாலி சட்டென்று சென்று தன்னுடைய தேரில் ஏறிக் கொண்டாள்.

## 6

அவர்கள் வந்துவிட்டனர்.

தாங்கமுடியாத துக்க அழுக்கத்தில் நெஞ்சம் விரிசல் காண, அவள் கௌதம சித்தார்த்தனின் கால்களில் விழுந்து சொல்லின்றித் தேம்புகின்றாள். சோகம் நிரம்பிய அவளின் ஒலியிலே சூழ நின்ற சேடியர்களின் கண்கள் கசிந்தன. மந்தாகினி சாளரத்தோடு முகம் புதைத்து விம்மிய குரல் சன்னமாகத் தெறித்துத் தனியாக ஒலிக்கின்றது.

"என்னைக் கணிகையென்றார்கள் ... திட்டினார்கள் ... சுவைக்க முயன்றவர்களே கேவலமானவள் என்று தூற்றினார்கள்... ஐயனே இந்தச் சிறுமிக்கு அமைதிவேண்டும்"

கௌதமர் அசையவில்லை.

"எனக்கு வாழ்வு வேண்டும். போலிப் பூச்சுகள் வேண்டாம். அழகு என்ற விருது வேண்டாம். ஏழைக் குடிலில் நிலவும் அற்ப மகிழ்வையே நான் யாசிக்கின்றேன்... எனக்கு வாழ்வு வேண்டும், ஐயனே எனக்கு வாழ்வு வேண்டும்"

அம்பபாலி விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள்.

கௌதமரின் வலதுகை அபய முத்திரையுடன் அவளது தலையை நோக்கிப் பதிகின்றது. அம்பபாலி கூப்பிய கரங்களோடு அவரின் பாதங்களிலிருந்து நிமிர்கின்றாள்.

" மகளே ! "

அம்பபாலி தன்னை மறந்தாள். கணீரென்ற அந்தக் குரலின் முதல் ஒலியில், அவள் நெஞ்சம் சித்தார்த்தனின் பாதாரவிந்தங்களில் அடைக்கலம் புகுந்து கொண்டது. அம்பபாலியின் பசுமையற்ற வெறு நெஞ்சிலே 'மகளே' என்ற அந்த வார்த்தை கலகலத்துப் பாய்கின்றது. மனப் பாலையின் கொதிப்பையெல்லாம் அந்தக் குளுமையான சொல் ஜீவ நதியாகி உறிஞ்சிக்கொள்ளுகின்றது. அவளது வாழ்க்கையில் இன்றைக்குத்தான் நிறைவு ததும்பி வழிகின்றது. இந்த உலகில் முதன்முதலில் அவளை அழைக்கும் அன்புக் குரலில் அவள் நெகிழ்ந்து கசிகின்றாள்.

"ஐய ... னே !"

அவளின் கண்ணீர், சித்தார்த்தனின் கால்களை நனைக்கின்றது. அவள் மனதுள் அவளே பேசுகின்றாள்.

'இந்தச் சொல் ஒன்றிற்காகத்தான் எனது மனம் வேட்கையுற்றுத் தவித்தது. ஆ... என் நெஞ்சினுள் அது என்றுமே வர்ஷித்துக்கொண்டிருக்கட்டும்.'

வானிற்கும் மண்ணிற்குமாய் வளர்ந்த சித்தார்த்த முனிவன் மேலும் அருளுகின்றான்.

"மகளே, நீ அமைதியையும் வாழ்வையும் யாசிக்கின்றாய். நிலையற்ற உலகில் அமைதியும் வாழ்வும் உனக்கு எப்படிக் கிட்டப்போகின்றன? அவை பொய்மயமானவை; துன்பமயமானவை. மகளே, துக்கமான இவ்வுலகிலே சாந்தி நிலவ வேண்டின் ஆசைகள் ஒழிக்கப்படவேண்டும். இலையுதிர் காலத்திய தாமரைப் பூவைப் பறிப்பதுபோல உன்னுடைய சுயநலப் பற்றுதலை உனது கையாலேயே அறுத்தெறிந்துவிடு. புத்தர் காட்டிய நிர்வாணத்துக்குரிய சாந்தி வழியைப் போற்றி நடப்பாயாக...."

அவரது ஒவ்வொரு சொல்லும், அவளின் நெஞ்சினுள்ளே தீபங்களாய் ஒளியேற்றுகின்றன. கீதமயமான அந்த உபதேசங்களைப் பருகும் விடாயில் அவளின் கண்கள் இமை மூடியிருந்தன.

அவளுக்குள்ளேயே அவளின் சிந்தனைகள் அலையாகியுருள்கின்றன. அவளை ஆட்டிவைத்த நிருத்யமும், கீதங்களும்; அவளையே வட்டமிட்ட காமக் கண்ணர்களின் போலி மொழிகளும் உபசாரங்களும்...

நீரிலே போட்ட உப்பான நினைவுகளென அவை.

'அமைதியா? வாழ்வா? சாந்தியா?'

அம்பபாலி நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டாள். அவளின் உடலையும், உயிரையும் வருத்திய வெம்மை அந்த ஒலியில் அழிந்தது.

# தோழமையென்றொரு சொல்

"தம்பி உன்ரை காசு இந்தா..."

ஐயாத்துரையிடம் இரண்டு கைகளையும் நீட்டிக் காசை வாங்கி மடிக்குள் வைத்தான் நாகலிங்கம். ஐயாத்துரையோடு, நாகலிங்கமும் கருவாடு விற்பதற்குச் சென்றிருந்தான். இன்றுதான் அவர்களிருவரும் மீண்டும் வீட்டுக்குத் திரும்புகிறார்கள்.

"தம்பி எண்ணிப்பாரும்..."

நாகலிங்கம் மடியை உள்ளாய்ச் செருகியபடியே சிரித்தான்.

"தேவேல்லை. நீங்கென்ன வேறையாளே?"

நாகலிங்கம் தன்னுடைய கலியாணத்திற்கென இருநூறு ரூபாவரை சேமித்து வைத்திருந்தான். அவனுடைய கலியாணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன் ஐயாத்துரை அவனிடம் ஓடிவந்து, தன்னுடைய காணியைக் கோயில் முகாமைக்காரரிடம் ஈடு வைத்ததாயும், அவர் காணியை உடனே மீளும்படி சொன்னதாகவும் கூறிவிட்டு நாகலிங்கத்தைப் பார்த்த பார்வையில் அவன் கூறமுயன்ற மிகுதிச் சொற்கள் ஒலித்தன.

நாகலிங்கம் யோசித்தான். பிறகு உள்ளே சென்று தைலாப் பெட்டியுள் தாளாயும், சில்லறையுமாயிருந்த காசில் நூற்றைம்பது ரூபாவை எடுத்துக்கொண்டு வந்து ஐயாத்துரையின் கையிற் கொடுத்தான்.

அவனும் ஐயாத்துரையும் சின்ன வயதில் தூண்டில் போட்டு மீன்பிடிக்கத் தொடங்கிய நாளிலிருந்து இன்றுவரை ஒன்றாகவே திரிந்தனர். ஐயாத்துரையோடு மீன்

பிடிக்க வள்ளத்திற் பல வருஷங்களாக நாகலிங்கம் 'கூடி'ச் சென்று வருகின்றான்.

யோசனையோடு வந்த நாகலிங்கத்தின் முதுகில் ஐயாத் துரை செல்லமாகத் தட்டினான்.

"வீடு கிட்டக்கிட்ட மனிசியின்ரை நினைவுதான், தம் பின்ரை மண்டேக்கை.... சரியடப்பா ரேட்டைக் கவன மாப் பாத்துப்போ..."

"இல்லையண்ணை"

நாகலிங்கத்தின் முகத்தில் அசடுவழிந்தது.

** ** **

"எவள நேரமெண்டு காத்தண்டிருக்கிறன்..."

கண்களின் களிப்போடு அவள் அவனெதிரே வந்தாள். முழுகிய தலைமயிர், படியாமல் பிரிபிரியாய்ச் சிலிர்த்து அவளின் முதுகிலும், தோட்களிலுமாய் வழிந்துகிடந்தது.

அவன் உள்ளே சென்று திண்ணையில் இருந்தான். அவனுக்குக் கலியாணமாகி இன்னும் ஒரு கிழமைகூட ஆக வில்லை. சிறிது நேரத்திற்குள் பாக்கியம் அங்கு வந்து, அவனிருந்த திண்ணையில் அவனுக்காகக் கிண்டி வைத்தி ருந்த களியை வைத்துவிட்டு ஒட்டில் இருந்தாள்.

நாகலிங்கம் களியைத் தின்றுகொண்டிருக்க, இரண்டு நாட்களாக மனதுள் புதைத்து வைத்திருந்த கதைகளை யெல்லாம், ஒன்றன்பின் ஒன்றாக அவளுக்கேயுரிய பாவனை யில், அவள் நாகலிங்கத்திற்குச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

கதைத்துக்கொண்டிருந்த பாக்கியம் இடையில் சிறிது நிறுத்தி யோசித்துவிட்டு அவனைப் பார்த்தாள்.

"ஒண்டு சொல்லுவன் கோவிப்பியளே?"

"என்ன? என்னெண்டு சொல்லுமன்?"

"நீர் கோவிக்கமாட்டீர்தானே?"

"ஓம் கோவிக்கன். சொல்லும்"

"உம்மடை அடுக்குப்பெட்டிக்குள்ளை தாளா ஐஞ்சு ரூவா வைச்சிருந்தனீரெல்லோ..."

"ஓ, வைச்சிருந்தனான். சொல்லும்"

அவளின் தயக்கம் சிறிதுசிறிதாய் குறைய, தெளிந்த கடலின் மெதுவான அலை புரளல்போல அவள் ஆறுதலா கின்றாள்.

"அந்தக் காசை பொன்னம்மாக்காட்டைக் குடுத்திட்டன். அவ பிள்ளைக்குச் சன்னியெண்டு ஓடித்திரிஞ்சா. கந்தையரும் அவ காசுக்குப் போக நாயைச் சூக்காட்டி விட்டிட்டாராம். அவவைப் பாக்க எனக்கு மனவருத்தம் வந்திட்டுது. எடுத்துக் குடுத்திட்டன். நீங்கள் கோவிக்கிறியளே...? என்ன செய்யிற அவவும் எங்களைப்போல கஷ்டப்பர்றவதான். பாவம். ஏழையளுக்கு ஏழையள் உதவாமை... என்ன நான் சொல்லுறன் நீங்க பேசாமலிருக்கிறீங்க"

அவள், நாகலிங்கத்தைப் பார்த்தாள். நாகலிங்கத்திற்கு தன்னுடைய மனைவி இவ்வளவு பேசுவாள் என்று இன்றைக்குத்தான் தெரியும். அவளின் இரக்க குணம் அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்த, அவளை அப்படியே தாவி அணைத்து..... அவனின் பிடியுள் அவள் இறுகி முனகினாள்.

பாரைமீன் போல அவனது உணர்வு துள்ளிக்குதித்தது. ஓட்டிமீனைப்போல வழுவழுப்பான அவளின் உடலோடு, அவனுக்கு என்ன மூர்க்கம்!

மத்தியானப் பொழுதிலும் அவளின் அணைப்போடு குழைந்து... எத்தனை களிப்பு!

வெளியே யாரோ அழைப்பது கேட்கின்றது.

'முகத்தினில் முத்திட்ட வேர்வையைக்கூடத் துடைக்க நேரமற்ற இன்பப் பொழுதை, கடூர அழைப்பால் குழப்பி விட்டவனைக் காலால் நசித்து, தரையோடு அரைத்தால் என்ன ?'

நாகலிங்கத்தின் முகத்தில் ரௌத்ரம் பொங்கியது.

அவன் பாயிலிருந்து எழ, அவள் சீலையை அவசரமாக அள்ளி உடுத்தினாள்.

படலை கிறீச்சிட்டு அவன் கையோடு எற்றுண்டது. எத்தனை ஆத்திரத்துடன் அவன் படலையை அவிழ்த்தான். ஈச்சங்கம்பு பிளக்கும் சத்தகம் கையில் இருந்தால், எதிரே வருபவனைக் கொலை செய்துவிடுவான் என்று நினைக்கத் தூண்டிய அவனின் கோபம் பொங்கிய தோற்றம், வெளியே நின்றவரைப் பார்த்ததும் கணவாய் முட்டைகள் கடல் நீருள் உடைந்தழிவது போல உருவற்று அவனுள்ளேயே அழிந்து அமுங்கி விட்டது.

வெளியே அலப்பற் படலையோரமாக, சங்கிலியால் கட்டிய நாயைப் பிடித்தபடியே நின்றவர் கந்தையர். அவன் குடியிருக்கும் காணியின் சொந்தக்காரர். அவனும் ஐயாத்துரையும் மீன்பிடிக்கும் கடற்காணிக்கும் சொந்தக்காரர் அவர்தான்.

"வாருங்க வாருங்க..."

அவன் சால்வைத் துண்டைக் கக்கத்துள் வைத்துக் கொண்டு குரலோடு மசுந்துகின்றான்.

"எத்தனை நேரமெண்டடா உன்னைக் கூப்பிர்ற... ஆ?"

அவரோடு நாயுங்குரைத்தது. ஆங்காரமும் திமிரும் குடிகொண்ட அந்தக் குரலினை மோதியெறிய வலுவின்றி

நாகலிங்கம் குனிந்து நின்றான். அந்த உழைப்பினில் திமிர்ந்த தேகம், பண்பாடற்ற காட்டுமிராண்டித் தனமான அச் சொற்களில் கூழைக் கும்பிடிட்டு நின்றது.

“சரிசரி இப்ப அதொண்டுமில்லை. நீயென்ன இஞ்சை குத்தகைக்கிருக்கிறியோ, அல்லாட்டிச் சொந்தக்காணி யெண்டு எண்ணியிட்டியோ? பாரன் தென்னம்பிள்ளைய ளெல்லாம் கருகிப்போகுது... இஞ்சை இந்தக்காணியொ ருபக்கம்... அங்கை கடற்காணி ஒருபக்கம்... ஒரு கிழமையா எங்களுக்கு கறிக்கும் வழியில்லை. உனக்குக் கலியாணமெண்டாப்போலை எங்களுக்கென்ன? நீ எத்த பொறுப்பைச் செய்யாதனி...... ஓ நீங்க இப்ப பெரிய ஆக்களெல்லோ? அவன் ஐயாத்துரை யெண்டவன், ஒரு பொறுக்கி...”

கந்தையரின் குரல் உச்சத்தில் ஏறிவிட்டது. ஐயாத் துரையைப் பொறுக்கி என்று சொன்னபொழுது நாகலிங் கத்திற்கு மனதினுள் கோபம் குபீரிட்டது. ஆனாலும் அவன் மௌனித்தே நின்றான். கந்தையர் ஓயவில்லை.

“டே நாகலிங்கம்... அவன் ஐயாத்துரையெண்ட வடுவாவுக்குஞ் சொல்லு... இனி என்ரை கடற்காணிப் பக்கம் தலைவைச்சும் படுக்கப்படா ஓம். சொல்லிப்போட்டன் நீயும் இண்டைக்கே காணியை விட்டு வெளிக்கிட்டிடு”

“என்ன?”

நாகலிங்கத்தின் உள்ளம் இடிய அதிர்வின் பெருமூச் சுச் சிறி அழிந்தது. கடலின் உள்ளே வாய்விரித்துக் கிடந் தபடியே, பிராணியையோ, ஆட்களின் காலையே தன்னில் பட்டதாய் உணர்ந்து கொண்டதும் கவ்விக்கொள்ளும் ஆர்க்கைப்போல அவனது நெஞ்சைக் கந்தையரின் ஒலி

கடித்து இழுத்து வெளியே போட்டுக் குதறிக்கொண்டிருந்தது.

“நீங்க இப்பிடிச் சொன்னு? ஊருக்குப் பெரிய நீங்க எங்கடை பிழையளுக்கெல்லாம் கோவிக்கலாமே?”

“டே பரதேசி நாயே, பொத்தடா வாயை...”

அவர் குரல் முடியவில்லை. மண்டாவின் வேகத்தோடு பாக்கியம் அங்கே குமுறிக்கொண்டு வந்தாள்:

“கதைக்கிறதை மட்டுமரியாதையோடை கதையுங்க. நாங்க அப்பிடி வழியத்த பரதேசியளில்லை...”

கந்தையர் திடுக்கிட்டார். இப்படி அவரை எதிர்த்தவர்கள் யாருமில்லை. அவள்தான் முதல்.

நாகலிங்கத்திற்கு ‘முழி’ பிதுங்கியது.

கந்தையர் நாயின் சங்கிலியைக் கைவிட்டார்.

“என்னடி தேவடியாள் நீ சொல்லிருய்?”

அவர் குரலின் மூர்க்கத்தை அவளின் குளறல் சன்னமாய்ப் பாய்ந்து துளைத்தது.

“எணை பொன்னம்மாக்கோ இஞ்சை வந்து பாரணை இந்த வீட்டை நடக்கிற கொடுமையளை...”

மீண்டும் மீண்டும் அவள் அதையே ஒலித்தாள். அதற்குள் அவளின் வீட்டில் இருந்த எல்லாப் பொருட்களையும் கந்தையர் வெளியே தூக்கி எறிந்துவிட்டார்.

கந்தையர் ஒவ்வொரு பொருளையும் தூக்கி வெளியில் எறியும் பொழுது நாகலிங்கம் கெஞ்சும் சண்களுடன் அவர் முன்னுகப் போய் நின்ருன்; இடையிடையே கெஞ்சியும் பார்த்தான். ஆனுல், கந்தையர் அவனைப் பார்க்கவுமில்லை.

"எந்தக் கொடுவினையிலே போவான்ரை அநியாயமடி இது"

பொன்னம்மா கந்தையரைக் காணுமலே கேட்டாள். அதற்குள் பாக்கியம் ஓடிவந்து பொன்னம்மாவின் மார்பினுள் அடைக்கலம் தேடிக்கொண்டு விக்கினுள்.

"என்ரை செல்லம். என்ன நடந்ததடி சொல்லன்?"

அதற்குள் நாகலிங்கம் சொன்னுன்:

"அக்கா அதுகளைப் பிறகுகதைப்பம். இப்ப இந்தச் சாமான்களை எங்கையெண்டாலும் கொண்டு போகோணும்"

"என்னடா தம்பி, என்ன நடந்தெண்டு சொல்லன்?"

"அங்கை வாருன் பொரிவான்"

பாக்கியத்தின் குரலோடு கையும் குறிகாட்டி நீண்டது. நாகலிங்கம் பாக்கியத்தை அதட்டினுன்:

"பாக்கியம் வாய் பொத்தோணும். கண்ட கதையள் கதைக்கப்படா"

பாக்கியம் மௌனமாளுள்.

கந்தையர் பொன்னம்மாவுக்கு முன்னுல் வந்து நின்று விஷயத்தைச் சொன்னுர். குரலிலே மாபெரும் சாதனையைச் சாதித்த பெருமிதம்.

பொன்னம்மாவிடம் அவ்வளவு குரலிருக்கும் என்று யாருக்கும் அன்றுவரை தெரிந்திருக்காது. ஒல்லியாய், விழிகள் உள்பிதுங்கி மௌனமாய் திரிந்த பொன்னம்மாவுக்கு வேகாரம் கொடுத்த அந்தச் சக்தி எதுவோ?

"பறப்பான். டே தம்பி, பிள்ளை வெளிக்கிடுங்க. இந் பறப்பான்ரை உத்தரியந் தாங்கேலாமைப்போச்சு. அண்டைக்குக் காசு கொண்டுபோக நாயைச் சூக்காட்டின

அரக்கன் இவன்... ஊரை அபகரிக்கிற இவையின்ரை தலையிலை எப்ப வெள்ளிடி விழுமோ? இந்த அறுவாருக்கு அழிவில்லையோ?"

பொன்னம்மா பிடிமண் அள்ளி எறிந்து திட்டினாள். கந்தையர் பேசவில்லை. ஆனால் கண்களில் வன்மம் பொங்கிக் குமுறிற்று.

** ** **

"தம்பி ஏழையளுக்கு வாற கஷ்ட நஷ்டமெல்லாம் ஏழையளுக்குத்தான் தெரியும். நீ ஒண்டுக்கும் யோசியாமை எழும்பிப்போய் பாக்கவேண்டிய அலுவலுகளைப் பார்"

நாகலிங்கம் திண்ணையிலேயே குத்துண்ட நங்கூரம் போல இருந்தான். அவனுக்குள் பலவிதயோசனைகள் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தன. அவனுக்குக் கலியாண மாகி ஒரு கிழமையாவதற்குள் அவனது வாழ்க்கைக்கு இருந்த ஆதாரங்கள் எல்லாமே போய்விட்டன. அவனது தாய் தகப்பன் வசித்த குத்தகைக் காணியில் இருந்து அவன் வெளியேற்றப்பட்டுவிட்டான். சின்ன வட்டனாக இருந்த காலத்திலிருந்தே அவன் தவழ்ந்து, நடந்து, உறங்கி மகிழ்ந்த மண் அது. அவன் சின்னவனாக இருந்தபொழுது அந்தக் காணி நெருஞ்சிப் பற்றையாக இருந்தது. நாக தாளியும், இக்கிரியும், தூதுவளையுமே அடர்ந்து காடாகிக் கிடந்த அந்தக் காணியை அவனும் அவனது தாயும் தகப் பனும்தான் செம்மைப்படுத்தியிருக்கிறார்கள். அவன் கை வலிக்க வலிக்க உழவாரத்தால் காட்டுச் சூரியகாந்தியைச் செதுக்கி அழித்திருக்கிறான்.

"நீங்க என் இப்பிடி இருக்கிறியள்... என்னிலை கோவமா? என்னாலைதான் எல்லாம் வந்தது. நான் சனியன் மூதேசி. விறுத்தியில்லாதவள்."

பாக்கியத்தின் சொற்களால், அவன் எற்றுண்டான்.

"பாக்கியம்!"

அவன் குரல் அவளை உறுக்கியது. நாகலிங்கம் அவளைக் கடுமையாகப் பார்த்தான். அவளின் கண்களில் கண்ணீர் துளும்பி உடைந்தது.

"பாக்கியம், இப்ப என்னத்துக்கு நீ அழுகிறாய்?"

அவளிடமிருந்து சட்டென்று பதில் வந்தது:

"பின்னையென்ன நீங்க சாப்பிடாமை இருந்தா நான் அழாமைப் பின்னையென்ன? என்னிலை அன்பெண்டா சாப்பிடோணும். அல்லாட்டில் நானும் கிடந்து காய்வன்"

'பாக்கியம்!... பாக்கியம்!'

அவனின் துன்பத்திற்குள்ளும் அவளின் இதமான, பரிவான சொற்கள் அவனின் மனதினுள் மகிழ்வைக் கெம்ப வைத்தன. அவன் எழுந்து அவளிற்குப் பக்கத்தில் சென்றான். அவனுக்காகக் காத்திருந்தவள்போல பாக்கியம் அவனது நெஞ்சினுள் அணைந்து அடங்கினாள்.

அவன் அவளது தலையைக் கோதிவிட்டான்.

"பாக்கியம் எல்லாம் விதிப்படி நடக்குது. என்ன போனாலும் நான் உன்னை ஒரு நாளும் கோவிக்க மாட்டன். பாக்கியம் நீ இல்லாட்டி... நீ இல்லாட்டி... நான் என்ன பாடுபடுவன் எண்டு எனக்கே சொல்லத் தெரியாது"

அவனது குரல் திக்கியது. அவள் அவனை நோக்கி நிமிர்ந்தாள். அவனது கண்களில் கண்ணீர் பனித்திருந்தது. அவள் அவனையே வாஞ்சையோடு பார்த்தாள்.

"என்னை அழப்படாதெண்டிட்டு நீங்க என் அழுறியள்?"

அவளின் குரலில் செல்லமும், கேலியும் சேர்ந்தொலித்தன.

“நீ சரியான வாய்க்காறியடி...”

அவன் அவளினை வாய் பேசாதவாறு முத்தமிட்டுக் கொண்டிருந்தான.

அவர்கள் நின்ற நிலையில் பொன்னம்மா தன்னுடைய உட்பிதுங்கிய விழிகளை மூடிக்கொண்டு மறுபக்கம் திரும்பிச் சென்றாள்.

நாகலிங்கம், பாக்கியத்தின் சின்ன நெற்றியில் அரும்பிய வியர்வையைத் துடைத்துவிட்டான். நெற்றியின் இடதுபுற ஓரமாக அவளின் தலைமயிர் சிலும்பி முன்சரிந்து கிடந்தது. அவள் இடது கையினால் நெற்றியை வருடி மயிரிழைகளைச் சரியாக்கிக்கொண்டாள்.

“என்னை விடுங்கோ சுகமில்லாத பிள்ளைக்குக் கஞ்சி குடுக்கோணும்”

** ** **

கடலுக்கு எதிர்த்தாற்போல வீதியோரமாக மண்ணோடு அடிசாய்ந்து பிறகு குத்திட்டு நிமிர்ந்து இலைகளைச் சடைபரப்பி, இருப்பதற்கு அமைக்கப்பட்ட வாங்கு போல நிற்கிறது அந்தப் பூவரசு மரம். அதற்குப் பக்கத்தில் சாதாழைகள் கும்பமாய் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பூவரசிற்குக் கிழக்காக சிறிது தள்ளி இறங்குதுறை தெரிகின்றது.

நாகலிங்கம் தன்னுடைய சாதாழைக் கும்பத்தையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு அந்தப் பூவரச மரத்தடியில் கடலைப்பார்த்தவாறே அமர்கின்றான்.

சற்று அடங்கியிருந்த மனவேதனை மீண்டும் புகை போலத் தோன்றுகின்றது.

நீண்ட கடலின் முடிவும், வானமும் தொடுக்கும் இடம் போல காட்சிதரும் பொருத்திலே மணற் திட்டுகளும், தீவுப்பச்சையும், கலங்கரை விளக்கமும் தெரிகின்றன. நீலக் கடல் நடுவில் மிதந்து தெரியும் வெண்மணற் திட்டுகள் சில, பாய்கட்டி ஓடும் வள்ளங்களைப்போலக் காட்சி தரு கின்றன. அப்படித் தெரியும் மணற் திட்டு ஒன்றிலே தான்—கல்முனை மணற் திட்டில் தும்பங்காய் நிறைந்திருக் கின்றது. பாக்கியம் தும்பங்காயில் வெகு விருப்பம் வைத் திருந்தாள்.

அந்த நினைவிடையே, கந்தையர் நாகலிங்கத்தின் மன தில் தோன்றினர். தடித்த சொண்டும், சிவந்த வெறிக் கண்களும் கந்தையரை நினைக்கையில், அவன் முன் காட்சி யளித்தன. வயதறியாக் காலத்தில் இருந்து வாழ்ந்த காணி யில் இருந்து அகற்றப்பட்டு பொன்னம்மா வீட்டில் தஞ் சம் புகுந்தபொழுதும், கடற்காணியில் போகும் உரிமை தடுக்கப்பட்ட பொழுதும் அவனுக்குக் கோபம் வரவில்லை. வருத்தந்தான் மேலோங்கியது.

நாகலிங்கம் கடலின்மேல், பார்வையைக் கடற் கொக் காய் பறக்கவிடுகின்றான். பூவரச மரத்திற்கு அருகாக ஓடும் வீதியில் கேட்கும் தேங்காய் ஏற்றிச் செல்லும் மாட்டு வண்டியின் சில்லுச் சத்தமோ, பாண் வண்டிக்காரனின் பிலாக்கண ஒலியோ அவனுக்குக் கேட்கவில்லை, தென்னோலை ஊறப்போடுவதற்குக் கடலினுள் இறக்கி நட்டிருக்கும் கட் டையைப் போல அவனது எண்ணமெல்லாம், அவன் மீன் பிடித்து வந்த கடற்காணியிலேயே இறுகி ஊன்றிவிட்டது.

கடலினைக் கூடப் பணபலம் படைத்தவர்கள் காணி களாகப் பிரித்து வைத்துவிட்டார்கள். வரம்புகள் கட்டாத குறை ஒன்றுதான்.

பழைய நாட்களில் மீன்பிடிப்பதற்குக் கடலினுள் சென்ற வசதி படைத்தவர்கள் தம்முள் உடன்பட்டு, கடலில் குறித்த குறித்த இடங்களில் மீன் பிடிப்பதற்கென ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பிறகு பரம்பரை பரம்பரையாக அந்த இடங்களில் மீன் பிடித்துவந்து, எல்லோருக்கும் பொதுவான கடலைத் தாங்கள் நிரந்தரமாக்கிக் காலப்போக்கில் அந்த எல்லைகளுக்குட்பட்ட கடற்பரப்பு தமக்கே உரியதென்றும், அதில் தாமே மீன்பிடிக்கலாமென்றும் கூறி, தாம் கடலிற்குப் போகாது அரசாங்க உத்தியோகங்களைச் செய்துகொண்டு அந்தக் கடற் காணியில் மீன்பிடிக்கச் சிலரை நியமித்தார்கள். அதில் மீன் பிடிப்பவன் கடற்காணியின் சொந்தக்காரருக்கு வாடிக்கையாக கறியும், குத்தகைக் காசும் கொடுக்கவேண்டும். நாகலிங்கமும் ஐயாத்துரையும் கந்தையரின் கடற் காணியிலேதான் மீன் பிடித்தார்கள். எத்தனையோ நாள் சுறுவோடும், கலவாயோடும், திருக்கையோடும் அவர்கள் போராடியிருக்கின்றார்கள்.

'அந்தக் கடற் காணியிலை நாங்க உசிரையும் வெறுத்து முறிஞ்சிருக்கிறம். அப்படியிருந்தும் எங்கடை கையிலை சல்லிக் காசுகூட மிஞ்சிறேல்லை. மீன் பறியோடை கரையிலை இறங்கி ருத்தலிலை அதைக் கொண்டுபோய் வித்திட்டு, ஒரு ரூவாக்கு பத்துச்சேம் தீர்வையைக் குத்தகைக்காறன் கையிலை குடுத்திட்டு வீட்டுக்கு வருந்தனைக்கும் கையிலை காசு புழங்குது. பிறகு பாத்தால் கடன்...கடன்...கடன்'

நாகலிங்கத்திற்கு மண்டை சிதறிவிடும்போல இருந்தது. அவன் பூவரச மரத்திலிருந்து எழுந்து ஐயாத்துரையின் வீட்டை நோக்கி நடந்தான்.

** ** **

ஐயாத்துரையின், வரிச்சுகள் அறுந்த கிடுகுப்படலையை மிதத்தித் தூக்கித் திறந்துகொண்டு நாகலிங்கம் வளவிற்குள் இறங்கினன். ஐயாத்துரையின் மனைவி தங்கம்மா நாகலிங்கத்தைக் கண்டதும் திண்ணையில் இருந்தவள் எழுந்து உள்ளே போனுள். அவள் போய் சிறிது நேரத்தில் ஐயாத்துரை கண்களைக் கசக்கிக்கொண்டு வெளியில் வந்தான்.

"வா... மாப்பிளை...வா இண்டைக்குத்தான் பூனரிக்கு ஒரு அலுவலாய்ப் போட்டு வந்திருக்கிறன்... தங்கம்மா, மாப்பிளைக்கு கொஞ்சம் பாலைப்பழம் கொண்டா!"

ஐயாத்துரை கப்போடு சாய்ந்து சாக்குள் சுருட்டியிருந்த புகையிலையொன்றை எடுத்துப் பிரித்து சுருட்டுக்குத் தக்கதாய்க் கிழித்து அடுக்கி, வார்புகையிலையைக் கிள்ளி வாயில் நனைத்துச் சுருட்டுத் தயார் செய்துகொண்டிருந்தான்.

"மாப்பிளை மதியம் மேற்காலை போட்டுது. வந்த விஷயம் என்ன? என்னடாப்பா கலியாணம் முடிச்சோண்ணை நீ ஒரேயடியா வாடிப்போயிருக்கிறு... கலியாணம் முடிச்சிட்டா — இனி உசாராத்திரியோணும்."

ஐயாத்துரைக்கு கடற்காணி பறிபோன விஷயம் இதுவரை தெரியாது என்பதை அவனின் பேச்சிலிருந்து நாகலிங்கம் ஊகித்துக் கொண்டான்.

"அண்ணை உங்களிட்டை ஒரு அவசரமான விஷயம் சொல்லோணுமெண்டு வந்தனன்."

ஐயாத்துரை சுருட்டை விரலில் இடுக்கிக் கொண்டு நாகலிங்கத்தைப் பார்த்தான். தயக்கமான அவன் முகம், எதற்கும் கோபம் காட்டாத அவன் கண்கள், எல்லாவற்றுள்ளும் மப்பு மூடியிருந்தது.

"அதுதான் என்னண்டு சொல்லு?"

நாகலிங்கம் ஓரே மூச்சில் சொன்னான்.

"கடற் காணியிலே இனி எங்களைப் போ'வேணுமாம்"

ஐயாத்துரையின் கையிலிருந்த சுருட்டு அவன் அதைப் பில் கையிலிருந்து எகிற, அவன் திண்ணையிலிருந்து கீழே இறங்கினான்.

"ஆரப்படிச் சொன்னவன்? ஆரு சொன்னவன்?"

நாகலிங்கம் முழங்கையைச் சொறிந்தான்.

"வேறை ஆர் கந்தையர்தான்!"

"ஒ..."

நாகலிங்கம் நடந்ததெல்லாவற்றையும் ஐயாத்துரைக்குச் சொன்னான். சிறிதுநேரம் ஐயாத்துரை யோசித்துவிட்டுத் தனக்குள் தானே கந்தையரின் செயல்களுக்குரிய காரணங்களை உணர்ந்துகொண்டான்.

நாகலிங்கத்திற்குக் கலியாணமாகி மூன்றாம் நாளன்று கந்தையரின் மகன் வீட்டுப் படலையில் நின்று ஐயாத்துரையைக் கூப்பிட்டான். ஐயாத்துரை படலையடிக்கு வந்தான். கந்தையரின் மகன், தன்னுடைய தகப்பன் அன்று பின்னேரம் இருவரையும் வேலியடைக்க வரும்படி சொல்லிவிடச் சொன்னதாகச் சொன்னான். அவன் சொன்ன வேளையில், ஐயாத்துரைக்கு நெஞ்சினுள் ஆத்திரம் குழறியது. தனக்குள் அதை அடக்கிக்கொண்டான். கலியாணமாகி மூன்று நாட்களும் ஆகவில்லை. அதற்குள் நாகலிங்கத்தையும் வேலியடைக்கக் கூட்டிக்கொண்டு வரச்சொன்ன கந்தையரின் முதலாளித் திமிர் அவனுக்குப் பிடிக்கவில்லை. நாகலிங்கம் கந்தையர் கூப்பிட்டால் போய்விடுவான் என்று ஐயாத்துரைக்குத் தெரியும். அவன் எதற்கும் வளையும்

மெதுமையானவன். ஐயாத்துரை கந்தையரின் மகனுக்குச் சொல்லிவிட்டான்: "இப்ப நேரமில்லே. ஒரு கிழமை கழிச்சு வாறம்" அந்தச் சொற்களுக்காக வன்மம் தீர்க்கவே இந்த முயற்சிகள் என்பது ஐயாத்துரைக்கு விளங்கிவிட்டது.

ஐயாத்துரை நாகலிங்கத்தைப் பார்த்தான். வழக்கமாகவே சோர்ந்து காணப்படும் அவன், இப்பொழுது எல்லாமிழந்த அநாதைபோல நின்றான். ஐயாத்துரைக்கு அவனின் மனம் விளங்கும். எதிலும் நாகலிங்கம் நியாயம் நீதிக்குக் கட்டுப்பட்டவன். யாருக்கும் விசுவாசமானவன். அவன் தான் இப்பொழுது நிராதரவாய் நிற்கின்றான். நினைக்க நினைக்க ஐயாத்துரைக்கு ஆத்திரம் கூடிக்கொண்டிருந்தது. சண்டிக்கட்டை மடித்துக் கட்டிக்கொண்டான்.

"கண்டறியாமயிர். ஒரு நாளெண்டான்ன தன்ரை காணி எதெண்டு அறியாதவன். நாங்க இவள நாளா முறியிறம்... அது எங்கடை தாய்மாரி, டே நா'லிங்கம் எவனடா சொன்னவன் எங்களை அதிலை மீன் பிடிக்கப்படாதெண்டு... டே இஞ்சைபார்... இஞ்சாலைபார் நாளைக்கு... நாளைக்கு வெள்ளி... அப்பநாளேண்டைக்கு நான் அந்தக் காணிக்கைதான் பறிபோட்டு பறி எடுக்கப்போறன். நீ என்னோடை வா... எங்களை ஒருதனும் அசைக்கேலா!"

ஐயாத்துரையின் குரல் ஆத்திரத்தினில் உச்சமாகி ஒலித்தது. அவனது சத்தத்தில் அயலில் உள்ளவர்கள் அவனது முற்றத்திற்கு வந்துவிட்டார்கள். ஆட்களைக் கண்டதும் அவனுக்குக் கோபம் மேலும் கூடிவிட்டது. கந்தையரை நேருக்கு நேர் நின்று பேசுவது போன்ற ஆத்திரத்தில் அவன் சத்தமிட்டான்.

"முந்தியைப்போலை எங்களை ஏமாத்தேலாது. காணிக்காறன் வேணுமெண்டாப் போய் தன்ரை நாயத்தைக்

கோட்டிலே சொல்லட்டுக்கும்... தம்பி நா'லிங்கம் நீ ஒண்டுக்கும் யோசியாதை. நாங்க இப்பிடிக் கனபேரைக் கண்டிருக்கிறம். இண்டைக்கும் நாளைக்கும் போகட்டும். நாளேண்டைக்கு நாங்க கடலுக்குப் போய்க் காட்டுவம்!"

நாகலிங்கம் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றான்.

"நீ போ தம்பி நான் கொஞ்சத்தால பூவரசடிக்கு வாறன்... நாங்க இருக்கேக்கை ஒண்டுக்கும் யோசியாதை போ..."

** ** **

நாகலிங்கம் திண்ணையில் யோசித்துக்கொண்டிருக்க, பாக்கியம் திண்ணைக்குக் கீழ் உள்ள ஒட்டில் அவனுக்கு அருகாகப் போயிருந்தாள். அவனுக்கு யோசனையெல்லாம் சனிக்கிழமையைப்பற்றி.

"என்னத்துக்கு நெடுக நீங்க இப்பிடி இருக்கிறியள்?"

பாக்கியம் வாஞ்சையோடு கேட்டாள். பாக்கியத்தின் குடும்பப் பொறுப்புத் தெரியாத தன்மைக்காக நாகலிங்கத்தின் மனதினுள் லேசான வருத்தம் நிழலாடி மறைந்தது. வேண்டுமென்று சிரித்த சிரிப்புடன் அவளைப் பார்க்கின்றான்.

"இப்பிடி நான் ஒரிடேம் போகாட்டில் காசென்னென்டு வெரும்?"

பாக்கியம் அவன் கேள்வியில் ஒட்டின் விழிம்பைச் சுரண்டினாள். பிறகு அவளுக்குள் நினைத்தாள்.

'பொன்னம்மாக்கா சொன்னவ. இந்த ஊருக்கை வாடைக் காத்திலைதான் ஆம்பிளையள் உழைப்பினை. சோளகத்திலையெண்டா மழையும் புசலும் கடலுக்குப்போகேலா... அப்ப பெண்டுகளின்ரை உழைப்புத்தான். அவையள்தான்

மட்டைக் கடலுக்கை போய் மட்டை அள்ளியந்து, தும் பாக்கி கயிறுவிடுவினை. அந்தக் காலத்திலை ஒ'ருத்தல் கயிறு அறுவே எழுவேசேமெண்டுபோம்''

பாக்கியம், நினைவுகளை முறித்துக்கொண்டு கேட்டாள்:

"எப்ப சோளகம் பேரும்?"

நாகலிங்கம் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான். தான் எதையோ சொல்ல, அவள் ஏதோ கேட்கின்ருளே என்ற எண்ணம் அவனுள்.

"என் பாக்கியம் என் கேட்டனீர்?"

நாகலிங்கத்தின் கேள்விக்கு அவள் பதில் சொல்ல வில்லை. அவளுக்குள்ளேயே திட்டங்கள் வளர்கின்றன என் பதை அவளின் சின்ன நெற்றியில் கீறும் கோடுகள் காட்டு கின்றன.

"முதல்லை நீங்க சொல்லுங்கோ? எப்ப சோளகம்?"

"அதுக்குக் கனநாள் கிடக்கு."

அவனது பதிலில் அவளது முகம் சாம்பி, கேட்ட துருதுருப்பு முகத்தில் சப்பளிகிறது. அவளின் முக வாட் டம் நாகலிங்கத்தின் மனதில் காய்வினை உண்டாக்கியது. அவளைப் பிடித்து தனக்கருகாகத் திண்ணையில் இருத்தினன். அவள், தோளோடு தலைசாய்த்திருந்தாள்.

"பாக்கியம் 'டக்'கெண்டேன் உம்மடை முகம் வாடின?"

அவளது கன்னத்திற்குக் கையைக்கொடுத்து, தன்முகத் திற்கு நேராக நாகலிங்கம் திருப்பினன். அவளுடைய கன் னங்களில் கரி லேசாய்ப் பூசிக்கிடந்தது.

"சொல்லும்... என்னெண்டு சொல்லனை... எங்கை... ஆ... வாய்திறக்குது... ஆ..."

"போங்க. என்னைக்கேக்கப்படா. எனக்குப் பகிடிவிடா தேங்க"

நாகலிங்கத்தின் சொற்களில் அவளுக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டுதான் பதிலும்வந்தது. நாகலிங்கம் பொய்க் கோபத்துடன் திண்ணையிலிருந்து எழுந்தான்.

"அப்ப நான் போறன்."

அவள், அவன் பின்னாலேயே போனாள்.

"சொல்லுறன்"

அவன் நின்றான்.

"நான் மட்டைக் கடலுக்குப் போப்போறன்"

"அடியடா புறப்படலே எண்டாலும்..."

நாகலிங்கத்தின் குரல் துள்ளியெழ, அவளின் கைகளை எட்டிப் பிடித்தான். அவள் திமிறினாள். அவன் குரலில், அவனது முகத்தை ஏறிடவே அவளுக்கு வெட்கம்.

"என்ரை மனிசி உழைக்கப்போறா... பொன்னம்மாக்கா... இஞ்சை வாவெனெணை..."

நாகலிங்கம் அவளைப் பிடித்தபிடியை விடவில்லை; அவள் முகத்திற்கு நெருங்கி, அடங்கிக் கனிந்த குரலில் சொன்னான்:

"பாக்கியம் நான் என்ன உடம்பிலே பெலமில்லாதவன் அல்லாட்டில் வலது குறைஞ்சவனெண்டு நெச்சிரே... மற்றவங்களைப் போலையில்லை... உம்மை நான் ஒரு நாளெண்டாலும் கஷ்டப்படுத்தன். ஆளே ஈக்குக்குச்சிபோலை உம்மாலே தக்கை தூக்கி மட்டையடிக்கேலுமே? வெறும் விசர்ப்பெட்டை. சொல்லக்கிடேலை கோவமெண்டா மூக்குக்கை அவேக்கு வந்திடும்."

பொறுப்போடு அவன் கூறிய அன்பான, வாத்ஸல்யம் நிறைந்த குரலில், அவள் அவனது தோளில் புதைய எண்ணினாள். என்னவோ கண்களில் துளிரும் கண்ணீரையும் அவள் துடைக்கவில்லை.

** ** **

கடலுக்கு எதிர்த்தாற்போல வீதியோரமாக அடி சாய்ந்து, பிறகு குத்திட்டு நிமிர்ந்து இலைகளைச் சடை பரப்பி இருப்பதற்கு அமைக்கப்பட்ட வாங்குபோல நிற்கிறது அந்தப் பூவரச மரம். பச்சை இலைகளிடையே மஞ்சட் பூக்கள் சொரிவாய்க் கிடக்கின்றன. மரத்தடியில், உதிர்ந்து வாடிய கபிலநிறப் பூவரசம் பூக்கள்.

வாடிக் கிடந்த பூவொன்றைக் கையில் எடுத்துக் கசக்கிக் கொண்டு நின்றான் ஐயாத்துரை. அம்மன்கோயிலடியிலிருந்து வந்துகொண்டிருக்கும் முருகரையும், வேலாயுதரையும் அவன் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.

“அண்ணை கோயிலடியாலை வாறம். சந்தணம் திருநீறிலை கொஞ்சம் எடன்”

“ஓந்தம்பி, உங்களைத்தான் பாத்தண்டு நிக்கிறன். வெள்ளிக்கிழமை நாத்து இண்டைக்கு கோயிலுக்கும் போகேல்லை”

“என்னண்ணை என்ன விஷயம்?”

ஐயாத்துரை சண்டிக்கட்டை மடித்துக் கட்டிக் கொண்டான்.

“தம்பி நான் சொல்லுறதைக் கவனமாக் கேக்கோணும். கந்தைய்யர் எங்களுக்குச் செய்த வேலை தெரியுமே?”

வேலாயுதர் தலையை ஆட்டிக்கொண்டார். தெரியும் என்ற அர்த்தம் அதில் தொனித்தது. பூவரசமரத்தடியில்

புதிதாகக் கம்புக் கட்டோடு தம்பிராசாவும் வந்து சேர்ந்து கொண்டான்.

"தம்பி முந்தியைப்போலை எங்களை ஏமாத்தேலா. கந்தையர் வேணுமெண்டா கோட்டடிக்குப் போகட்டு. போய், தன்ரை காணியின்ரை எல்லையைக் கோட்டடியிலை சொல்லட்டு... எப்பிடியடா சொல்லுற.... அங்கைபார் நாகலிங்கமும் வாறான்... அவனைப் பாருங்க, கலியாணம் முடிச்சு ஒரு கிழமை முடியமுந்தி கந்தையருக்கு சேவகம் பண்ணுததிலை காணியில்லை... பூமியில்லை... கடனுமில்லை. தம்பி வேலாயுதம் நீ சொல்லு? நாங்க என்ன எல்லாருக்கும் சின்னுகளே... அல்லா வேலைகாறரெண்டு எங்களைத் தாரைவார்த்திருக்கே?"

ஐயாத்துரை இடையில் நிறுத்திவிட்டுக் கடலை நோக்கித் திரும்பினான்.

"எங்களைப்போலை இவங்கள் வள்ளத்திலை ஒருநாளுக்கெண்டாலென்ன வந்திருக்கிறுங்களாடா? நாங்க முறிமுறியெண்டு முறிய அவையள் காலாட்டிக்கொண்டு வீட்டிலை இருந்திட்டு இப்ப சண்டித்தனம் பேசிறேண்டா முடியுமே? முறியிறவங்களை இனிமே முந்தியைப்போலை வெருட்டேலாதடா... வெருட்டேலாது"

ஐயாத்துரையின் உறுதியேறிய குரலில், நாகலிங்கத்தின் உடல் சிலிர்த்தது. அவனின் உள்ளத்துள் வாடைக் காலக்கடல் அலைகளாய் ஐயாத்துரையின் சொற்களே அடித்துப் புரண்டு ஒலித்துக்கொண்டிருந்தன. வேலாயுதரும், முருகரும், நாகலிங்கமும் ஐயாத்துரை சொன்னதை ஏற்றுக் கொண்டனர். தப்பிராசா முகத்தைக் கோணிக்கொண்டு ஒருமாதிரி நின்றுவிட்டு கப்புக் கட்டைக் கீழே போட்டான்.

"எண்டாலும் அண்ணை நீங்க செய்த பிழையான வேலைதானே?"

"என்ன, என்னெண்டு?"

ஐயாத்துரை கேள்வியோடு தம்பிராசாவைப் பார்த்தான். பருக்கள் நிறைந்த தம்பிராசாவின் முகம் நிச்சயமான முடிவோடிருந்தது. ஐயாத்துரையைக் கவனியாதவன் போல அவன் தொடர்ந்தான்.

"எவ்வளேண்டாலும் அந்தாளின்ரை காணிக்கை நிண்டுகொண்டு நா'லிங்கமும் பெஞ்சாதியும் அந்தாளை மட்டு மரியாதையில்லாமைப் பேசியிருக்கப்படா"

தம்பிராசா பிடரியைத் தடவியவாறு வேலாயுதரைப் பார்த்தான்.

'நான் சொல்வது சரியா' என்ற மௌனமான கேள்வி அவனது முகத்தில் எழுத்துக்கூட்டியிருந்தது. பார்வையில் வேலாயுதர் தலைகுனிந்தார்.

"அந்தாளின்ரை உதவியில்லாட்டி நா'லிங்கம், நீங்கெல்லாம் கஞ்சி குடிக்கேலுமே..."

ஐயாத்துரைக்கு ஆத்திரம் குபீரிட்டது. வார்த்தைகள் வெடித்துப் பொரிந்தன.

"தம்பிராசா உப்பிடி வேறுரெண்டான்ன கதைச்சிருந்தா இப்ப வேளா முள்ளு மறுமொழி சொல்லிருக்கும்... உங்களைப்போலை நாங்கொண்டும் மற்றவைக்குக் கால் கழுவுறேல்ல"

ஐயாத்துரையின் கோபம் எங்கே வந்து முடியுமென்று வேலாயுதர் அறிவார். அவர் ஐயாத்துரையைப் பல கதைகளைச் சொல்லி இறங்குதுறையடிக்கு கூட்டிச் சென்றார். தம்பிராசா பேசாமல் கம்புக்கட்டைக் கொண்டுபோய் கட

லுள் போட்டுவிட்டு ஐயாத்துரை போன திக்கை நோக்கி ஏளனத்துடன் சிரித்தான்.

'விடியக் கலாதிப்பட்டினையெண்டா வீணுக் கோட்டடியிலைதான் போய் நிப்பினை. தாறதை வாங்கிக்கொண்டு பணிவிடை செய்யிறதை விட்டிட்டு பேய்த்தனமா அந்தப் பெரியாளோடை கொழுவலுக்கு நிக்கினை'

** ** **

அதிகாலை.

ஊர் கடற்கரையில் நின்றது.

ஐயாத்துரை சொன்ன சொற்கள் ஊரின் இதயத்துள் நிறைந்து பரபரப்பூட்டிவிட்டது. கடற்காணிக்காரன் வெள்ளாப்பு நேரத்தில் ஆள்வைத்து அடிப்பிக்கலாம் என்ற குசுகுசுப்பு எங்கும் மார்கழி வெள்ளமாய்ப் பரவிவிட்டது.

ஐயாத்துரையும், நாகலிங்கமும் கைகளில் சாமான்களுடன் கம்பீரமாக நடந்துவந்தனர். ஐயாத்துரையின் வலது தோளில் இரண்டு மரக் கோல்கள், ஒரு மண்டா ஆகியனவும், இடது கையில் சவளுமிருந்தது. நாகலிங்கம், பழந்தண்ணீர்க் குடுவையையும், பறிக் கூட்டையும், ஈக்கில் கோர்வையையும் கையிற் கொண்டுவந்தான். பாக்கியத்தை சமாதானப்படுத்தி வீட்டிற்குள்ளிருக்கும்படி செய்ததில் நாகலிங்கத்திற்கு சிறிது நேரம் போய்விட்டது.

பூவரச மரத்தடியில் இருவரும் தங்கள் சாமான்களை வைத்துவிட்டு துண்டை எடுத்து தலையில் வரிந்துகட்டிக் கொண்டனர். அதே நேரத்தில் இறங்குதுறையடிப் பக்கமாக நாய் குரைத்துக்கேட்டது. அதோடு பேச்சுக்குரல்களும் கேட்டன. கரையில் நின்றவர்களிடையே குசுகுசுப்புக் கிளம்பியது: "கந்தையர் ஆக்களோடை வாருர்!"

தம்பிராசா தன்னுள் முணுமுணுத்தான்.

"இண்டைக்கு வாற அமந்தறையோடை இவையள் துலையப்போகினை. இதெல்லாம் அழியிற புத்திதான்."

வள்ளத்தில் பறி, மரக்கோல்கள், சவள் ஆகிய யாவும் ஏற்றியாகிவிட்டன. கஞ்சிக் குடுவையைப் பத்திரமாகச் சவளோரமாக வைத்து விட்டு, கட்டுக்கல்லை ஐயாத்துரை வள்ளத்துள் தூக்கிப்போட்டான்.

"டே...!"

கடற்கரையெங்கும் அந்தக் கட்டைக்குரல் மௌனத்தைக் கிழித்துக்கொண்டு ஒலித்தது.

நாலு தடியர்கள் மண்டாக்களைத் தூக்கிக்கொண்டு முன்னுக்கு வந்தனர். அவர்களுக்குப் பின்னால் நாயும், கந்தையரும்.

கடற்கரையில் நின்றவர்கள் குரலோடு திரும்பினர். சொல்ல முடியாதமௌனம்.

"ஆரடா அவன் ஐயாத்துரை?"

பதிலேதுமற்ற பயங்கரம். அலைகளின் சலசலப்பு மட்டும் கேட்கின்றது. கந்தையரே வாய்திறக்கின்றார்.

"வள்ளத்தடியிலை நிக்கினை போலை..."

கிழக்கின் வெளிறலில் பரவும் மெல்லியவெளிச்சம். அதில் உருவங்கள் கண்ணுக்கு தெளிவாகிக்கொண்டிருக்கின்றன.

"எளிய கூலிக்காற நாயள்... எவனடா அவன்?"

திமிர்த்தனமான அந்தத் தடியனின் குரலை, ஐயாத்துரையின் குரல் மோதிவிழுத்தியது.

"டேய் நாங்களொண்டும் கூலிக்காற நாயளில்லையடா.. தொழிலாளியடா... தொழிலாளியள்...!"

இடையில் கந்தையரின் கனைப்புக் கேட்டது. அதற்குள் வள்ளத்தில் ஏறி நின்ற நாகலிங்கம் நீரினுள் தொப்பென்று குதித்தான்.

"நான்தான்ரா ஐயாத்துரை, இப்ப என்ன செய்யப் போறியள்? செய்யிறதைச் செய்யுங்க பாப்பம்"

வள்ளத்துள் நின்ற ஐயாத்துரை பதைபதைக்க, நாகலிங்கம் கரையை நோக்கி நிமிர்வுடன் நடந்தான்.

முன்னே வந்த அவனை நோக்கி மும்முனை மண்டா சீறிக்கிளம்ப, அவன் குனிய, அது மண்ணினுள் சக்கென்று புதைய, கரையின் இதயத்துள் பெருமூச்சு நடுங்கியது.

"அவையள் செய்யிற தொழிலுக்கை அவையளுக்கொரு சண்டித்தனம்... மடைநாயள்... வழியத்த பரதேசியள்...!"

கந்தையரின் திமிர்க்குரலில் ஏளனம் மேவியது.

நாகலிங்கத்தின் மனதினுள் புதியதொரு மனிதன் தோன்றிவிட்டான். அவனுள் காலையின் தோற்றம் புதிய எண்ணங்களைக் கொடுத்துவிட்டது. அவன் தொழிலாளி; மீனவன். அவனது தொழிலை யாரும் தடுக்கமுடியாது. ஐயாத்துரை சொன்ன சொற்கள் மீண்டும் அவன் காதோடு ஒலித்தன:

'எங்களைப்போலை இவங்கள் வள்ளத்திலை ஒருநாளைக் கெண்டான்ன வந்திருக்கிறுங்களாடா? நாங்க முறிமுறியெண்டு முறிய அவையள் காலாட்டிக்கொண்டு வீட்டிலை இருந்திட்டு இப்ப சண்டித்தனம் பேசிறேண்டா முடியுமே? முறியிறவங்களை இனிமே முந்தியைப்போலை வெருட்டேலாதடா... வெருட்டேலாது...'

"அடியுங்கடா...!"

கந்தையரின் குரல் துரிதத்திற்காக ஓங்கியது. அதே வேளையில் நாகலிங்கத்தின் பக்கமாக ஐயாத்துரை குதித் தோடிவந்தான். கையில் சின்ன மரக்கோல்.

"நாகலிங்கம் இனியோசிக்கேலாது... வாறவன் வரட் டும்... எங்களை நாயளெண்டா நாங்க கடிச்சுத்தான் தீரு வம்..."

அவன்குரல் ஓயவில்லை. அதற்குள், சீறிவந்த மண்டா அவனது தோளில் குத்த, அவன் அலறிக்கொண்டு கையைப் பொத்தியபடியே கடற்கரை மண்ணில் விழுந்தான். ரத்தம் சேருய் வழிந்தது.

இதுவரை, நட்ட களங்கண்டித்தடிபோல் நின்ற தம்பி ராசாவின் மனதினுள் அவனையறியாமலே ஒரு வேகம் ஏற்பட்டது. தன்னுடைய தோளில் காயம்பட்டது போன்ற துடிப்பில் அவன் தனது தோளைப் பொத்திக் கொண்டான். வேலாயுதரும் இன்னும் சிலரும் கொடுக்குக் கட்டுவதும் அவனுக்குத் தெரிந்தது.

ஐயாத்துரைக்குப் பக்கத்தில் போய் நின்றுகொண்டே நாகலிங்கம் வெறியனுய்க் கத்தினுன்:

"ஐயாத்துரையண்ணரையும், என்னையும் சாகவிடப் போறியளோ?"

அவன்குரல் ஓயமுன், இன்னெரு குரல் கூவியது:

"பொன்னம்மாக்கான்ரை வீட்டை எரிச்சுப்போட் டாங்கள்...! என்ரை ராசா...!"

ஐயாத்துரை தோளைப் பொத்திக்கொண்டு நிலத்தி லிருந்து எழுந்தான். கூவியவள், நாகலிங்கத்தின் மனைவி பாக்கியம். மயிர் அவிழ்ந்து புரள, கிழிந்த சேலையுடன், பிதுங்கிய-பயம் நிறைந்த கண்களுடன் நடுங்கியபடியே

அவள் கதறிக் கொண்டு ஓடிப்போய் ஐயாத்துரைக்குப் பக்கத்தில் நின்ற நாகலிங்கத்தின் காலடியில் தொப்பென்று விழுந்தாள்.

ஐயாத்துரையின் குரல் கரையினை நோக்கி மீண்டும் குளறியது.

"அண்ணை... இனியும் பாக்கவேபோறியள்? நாங்க சாகிறதைப் பாக்கவே நிக்கிறியள்? இண்டைக்கு வீடெரியுது. நாளைக்கு எங்களை எரிப்பாங்கள்... எங்கள்ளை கனபேர்... அவங்கள்ளை நாலுபேர்... பேந்தும் நாங்கதான் அடிவாங்குறம்"

ஐயாத்துரையின் குரல் ஓயமுன், இரண்டு தடியர்கள் அவனை நோக்கிப்பாய...

"டே... அவையள்ளை ஒருதனும் கைவைக்கப்படா... வைக்கிறவன்ரை சவந்தான் இதிலை விழும்"

தம்பிராசா ஐயாத்துரைக்கு முன்னால் போய் நின்றான். குஞ்சைக்காக்கும் கோழிபோல, அவன் ஐயாத்துரையை மறைத்து நின்றான். கண்களில் மிதக்கும் நட்புறவுடன் ஐயாத்துரை தம்பிராசாவைப் பார்த்தான். நேற்றைய தம்பிராசா செத்து, இன்று புதுத் தம்பிராசா தோன்றியிருக்கின்றான்.

"அண்ணை தொர்றவன் தொடட்டும் பாப்பம்... நாங்கள்ளாம் ஒண்டு. இனி எங்கள்ளை மிளகா அரைக்கேலா..."

தம்பிராசா முஷ்டியை உயர்த்திக் காட்டியபடியே கரையைப் பார்த்தான். வேலாயுதர், முருகர், முத்தர் எல்லோரும் கொடுக்கை வரிந்து கட்டிக்கொண்டு அவனை நோக்கி தோழமையுணர்வுடன் வந்தனர். கரையில் நின்ற முழுப் பேரும், ஐயாத்துரையையும், நாகலிங்கத்தையும் சுற்றிவர நின்ற காட்சியில், கந்தையரின் நாய் குரைத்தது.

"முறியிறவங்களை முந்தியைப்போலை வெருட்டேலா..."

நாகலிங்கம் ஓங்கிய குரலிற் சொல்ல, சுற்றி நின்றவர்களின் தலைகள் தாளுகவே அசைந்தன. கரையில் நின்ற நாலுதடியர்களும், கூட்டாய் முஷ்டியை உயர்த்தி நிற்கும் தொழிலாளிகளையும், கைசோர்ந்த தங்கள் முதலாளியையும் பார்த்தனர். தனித்து நின்ற தொழிலாளியொருவன் கூட்டான அணியினளுகியது அவர்களுக்கு ஆச்சரியத்தையும் திகிலையும் கொடுத்தது.

மண்டாவை எடுக்காமல் அவர்கள் அங்கிருந்து தலையைக் குனிந்தபடி நடந்தனர். எல்லாம் இழந்த நடை.

கடற்கரையில் தனியனுய்நின்ற கந்தையர் பார்ப்பதற்கு பார்வையற்றவராகித் தலை கவிழ்ந்து நடந்தாலும் மனதினுள் நிறைந்த பழைய திமிரும், பழைய வன்மமும் இம்மியளவும் குறையவில்லை.

முருகர், கந்தையர் போகும் திசையை நோக்கிக் காறியுமிழ்ந்துவிட்டு முணுமுணுத்தார்.

"நாங்கெல்லாம் ஒண்டெண்டு இவருக்கு இனியெண்டான்ன தெரியட்டு!"

# நிறங்கள்

சூரியனின் ஒளிக்கீற்றுக்கள் கசிந்து பெருகும் காலை வேளை. பனித்திரை கிழிந்து கொண்டு அழிய வீதியில் ஆர வாரக்குரல் சுவடு பதிக்கின்றது.

வழக்கம்போல, பொன்னி கண்களை இடுக்கிக் கொண்டு உலகத்தில் திரண்டிருக்கும் சோகங்களையெல்லாம் தன் முகத்தில் பூசியபடியே அந்த வேப்பமரத்தின் கீழ் இருக் கின்றாள். அவளின் பக்கத்தில் உழைப்பிற்கு மூலதனமான அவளின் கறுப்பி, ஒருசாக்கில் ஒருக்களித்துப் படுத்துக் கிடக்கின்றாள்.

கறுப்பியின் முன்விரித்துக்கிடக்கும் சீலையில் முதன் முதலாக ஐந்து சதம் விழுந்தது. பொன்னி அதை வெறித்துப் பார்க்கின்றாள். அவள் கண்களிற் கசிந்த கண் ணீர் வாயிதழ்களில் பட்டுக் கரிக்கின்றது.

** ** **

கறுப்பி — துன்பத்தில் துன்பமாகிவிட்ட துன்பம். அவர்களிருவரின் முன்பும் குரல்கள் அனுதாபத்தைச் சிந் திக்கொண்டு காற்றோடு தவழ்ந்து போகின்றன.

"பாவம் இது எப்பிடித்தான் சீவிக்குமோ?"

"அம்மா இவ்வளோ பெரிய தலைக்கு இம்மட்டுச் சதுர மோணை?"

"ஐயோ ... இந்தச்சின்னக் குச்சித் தேகத்திற்கு இவ் வளோ பெரிசிலை மண்டையோ?"

அனுதாபம் எழுப்பும் குரல்கள் எல்லாம் கறுப்பியின் நெஞ்சில் மூண்டெரியும் அனலைப் பற்றியெரிய வைக்கும்

சுழகாய் விசிறுகின்றன. மெல்லிய சுடர் ஒன்று தார்வீதி யின் கருமையிலிருந்து கிளம்பிப் பறப்பது போல அவள் கண்மணிப் பாவையுள் மனம் திரை விரிக்கின்றது. அந்தச் சுடரிலேதான் எத்தனை வர்ணவரிகள் !

அதன் கண்ணிமைக்கும் மென்னொளிவிற்தான் எத் தனை இன்பத்தின் கதிர்கள் !

மனம் பழைய நிகழ்ச்சிச் சுவடுகளில் காலடி வைத்து முனகுகின்றது. வழிப்பாதையெல்லாம் தேய்ந்து அழிந்த அரை குறைத்தடங்கள்.

ஆனாலும் —

தார் வீதியிலிருந்து — அதன் கருமைப் பின்னணி யில் கிளம்பிப் பறக்கும் சுடரின் வர்ணங்களை கறுப்பி மறக் கவில்லை.

** ** **

அழிந்து கொண்டு எரியும் மெழுகுதிரியை ஒருக் களித்துக் கிடந்தபடியே பார்த்துக் கொண்டிருக்கிறாள் கறுப்பி. ஒரு தகரமூடியின் பீடத்தில், பீடச்சக்தியின் அந் திவார முனைவில் சக்கை வழிந்து ஒட்டுகின்றது. எரியும் மெழுகுதிரியின் நாற்திரியின் கருமுனையில், அவளின் கண் கள் சல்லடம் கவிழ்ந்திருக்கின்றன. அந்தக் கருகிய நாலின் முனைச் செந்தணலிலேதான் அவளோடு நித்திய மும் ஊமை ரகசியம் பேசும் உயிர்கள் நிறைந்து மறை கின்றன.

“டாங்.....டாங்.....டாண்...ண்”

கறுப்பியின் மனம் சிலிர்ந்து ஊமைக்குரலில் அலறு கின்றது: “முருகா! வேலா!”

ஆலயமணியும், சங்கொலியும் நெஞ்சுள் நிறைகின்றன.

இரவு முழுவதும் தனியளாய் அவள் அங்கேயே கிடக்கவேண்டும். மனத்தை நினைவுகளின் அசை போடலி லிருந்து தள்ளி விழுத்திவிட்டு கனவுகளில் ஆழ்த்தவேண் டும். வேப்பம் பூக்கள் காதுக்குள் விழுந்து 'கிச்சுக்கிச்சு' மூட்ட முயலும் பொழுதெல்லாம் அவள், அவளாயில்லா மல் மகிழ்வினில் சிறகு நெய்து கட்டி, எங்கோ மானசிகத் தில் பறப்பாள்.

அந்த உலகிலே அவள் கண்கள் முன் எல்லாம் சின் னச்சின்ன வட்டங்கள்... நிறப்பூக்கள்... கரிய தலைமயிர் சுருள்சுருளாய் வேப்பிலைக் கொத்துப் பருமனில் மடிப்பு மடிப்பாய் திரண்டு பறக்கும்... நிறஒளிகள்... நிறவீதி... நிறம் நிறமான அனற்கொட்டாவிகள்...... அவளுடைய உலகத்திலே எல்லோரும் ஓடி ஓடித் திரிவார்கள்... பறப் பார்கள்...

அவள் மனதிற்குள் மனமே சிரிக்கும். ஒரே சிரிப் புத்தான்.

தொலைவில் எங்கோ யாரோ பாடுவது கேட்கிறது.

அவள் தன்னுடைய பெரிய தலையை ஒருமுறை நினை த்துப் பார்க்கிறாள்.

பிறகு தன்னுடைய சூம்பிய கைகால்களில் கண்களை மேய்ச்சலுக்கு விரட்டுகிறாள். அந்தக் கருமை உடலில் கண் கள் ஊரும் பொழுது, மனதிற்குள் அருவருப்பு அறுகு படர்த்தும். மனமும், நினைவும் எல்லையற்ற வேதனைத் ததும் பலில் வீழ்ந்து புரள்கின்றது. பீழையின் அயறை உருத் திக் கொண்டு இடுங்கிய கண்களிலிருந்து கண்ணீர் சாறு கிறது. மெழுகுதிரி உருகிவழிந்து, வெண்சக்கை மிஞ்ச செத்துவிட்ட ஒளியில், கண்கள் விழிப்பின் வேகம்குன்றி அரைகுறையாய் மூடுகின்றன.

பனித்துளிகள் மெல்லரவாக வெப்பம் பூக்களோடு சேர்ந்து சொரிகின்றன.

கண்களின் இமை மடல் வளையத்துள் சிவப்புநிறக் கோடுகள் தெறித்துப் பறக்கின்றன.

இரவிலும், பகலிலும், பனியிலும், வெய்யிலிலும், கண் மடல்களுள் வட்டமிடும் நிறங்களும், கோளக்கோடுகளும், மயிற்கற்றைகளும் தோன்றி உதயமான அந்தக் கணவேளை அவள் நெஞ்சிலே அரும்பித்துளிர்த்த பொழுது அவளுக்கு எப்பொழுதுதான் தோன்றியதோ?

** ** **

பொன்னி படுக்கையிலிருந்து எழுந்து நெளிந்தாள். முதலில் அவளை, அவளின் சின்னஞ்சிறு சிசுதான் குரலிட்டு வரவேற்றது. அவள் தன்னுடைய குழந்தையை ஆசையோடு தூக்கி மடியிற் கிடத்தினுள். நாசின் சதப்பலுள் பால் பீறிடும் பொழுது அவளின் உடலில் மதமதர்ப்புக் கொழுவி முறுகும். அவள் அந்தக் குழந்தையின் தலையை ஆசையோடு வருடுகிருள்.

இன்னெரு குழந்தை வாயால் வீணீர் கொடிகட்டி வழிய அவள் முன்னே வந்து நின்றது. மணிவாழைப்பூவின் இதழ்களைப் போன்ற மங்கிய மஞ்சள் நிறம். அனுங்கலில் வயிற்றின் வெறுமை வெளியாகிற்று.

"அம்மாச்சி..."

தலையைச் சொறிந்துகொண்டு மோகினி நின்ருள்.

"என்னடி குஞ்சு... மோகினிக்கு என்னணை வேணும்?"

குரலின் ஆறுதலே, மனதிலிருந்த இன்னெரு குரல் கல்லெறிந்து நெகிழ்த்துகின்றது.

மோகினியும் — கறுப்பியும்.

ஒளியும் இருளுமா?

அவள் மனதிற்குள் குமைந்தாள்.

இருவரும் பிள்ளைகள். உயிர்கள்.

கறுப்பியைப் பெண் என்று சொல்லலாமா?

கறுப்பியின் உருவம் கண்களில் தோன்றுகின்றது. தலைமயிரே அற்ற அந்தப் பெரிய தலையும், அதில் புகையிலை நிறத்தில் மடித்து ஒட்டிய இதழ்களும், இருள்போலக் கிடக்கும் முகமும், நல்லெண்ணைக் கறுப்பில் அழுந்திக் கிடக்கும் சின்னஞ்சிறு குச்சிக் கையும், நோஞ்சல் உடம்பும்.

பொன்னி தீர்மானித்துவிட்டாள்.

பழைய சோற்றைச் சட்டியில் அள்ளிப்போட்டுக் கொண்டு, தன் குழந்தைகளுக்குச் சாப்பாடு கொடுத்து, முத்திவிட்டு அவள் 'அம்மா' வாய்க் கிளம்பிவிட்டாள்.

நெஞ்சம், கருக்கிருட்டு ஒழுங்கையில் சிக்கிய மாலைக் கண்ணாகிவிட்டது.

** ** **

ஒளியைத் தாங்கி நிற்கும் விளக்காகக் கறுப்பியின் சாய்ந்து ஒருக்களித்துக் கிடந்த உருவம் பொன்னிக்குத் தெரிந்தது. அதுவே காற்கட்டாகவும் பொன்னிக்குத் தோற்றுவதுண்டு.

"அம்மா வந்திட்டியா இண்டைக்கு சரியாய்ப் பசிக்குது"

வாயின் நீருமிழலில் சொற்கள் அரைந்து கேட்கின்றன. வெண்சோற்றை, கண்கள் மடிவிரித்து பார்வைக்குள் ஏந்துகின்றன.

வேப்பமரம் சிலிர்க்கின்றது.

ஒருக்களித்துக்கிடந்த உடலில் தெம்பு பிறக்க, கண்கள் வேப்பமரத்தின் அடியிலிருந்து எக்கத்தை ஏணியாகக் கொண்டு மேலே எழும்புகின்றன. அது ஒரு களிப்புத் தான். இன்றைக்கு ஒரு புதிய படம் வேம்பில் ஒட்டப் பட்டிருக்கின்றது. ஒரு அழகிய பெண் சிரித்தபடியே உடலை நெளித்துக்கொண்டு படத்தில் நிற்கின்றாள். எவ்வளவு அழகிய உருவம்!

அவளின் தலைமயிர் தன் கண்களுள் சிக்குண்டு இழு படுவதைப்போல, கறுப்பி தவிக்கின்றாள்.

கால்களைச் செம்மையாக வைத்துக்கொண்டு நிறங்களை யெல்லாம் தன் உடலில் பூசிக்கொண்டு எங்கோ பறக்கத் தயாரானவள்போல அந்த நடிகை நின்றாள்.

கறுப்பியின் கண்கள் குவிந்தன. அவள் சாக, அவ ளிலிருந்து முளைத்த கறுப்பி, வேம்பை நோக்கி நடந்தாள். பொன்னி தன் முன்பு உள்ள சிலையிற் கண் பதித்திருந்தாள். நெஞ்சத் திரையில் பழைய காட்சிகள் ஓடின.

இருவர் நினைவுகளும் சதுராடின.

கறுப்பியின் மூடுண்ட கண்களுள் நிறக்கோடுகள் வட்டமிட்டன. குரல்களும், கோடுகளோடு ஒளித்தும், மறைந்தும் ஒலித்தன.

பொன்னி நினைவில் அழுதாள்.

கறுப்பி நினைத்துச் சிரித்தாள்.

கறுப்பிக்கு எல்லாமே நிறக் கீறல்கள்; சுழல் வளையங் களாடும் உருவெளியின் வரிகள்.

இரவிலும், பகலிலும், பனியிலும் வெய்யிலிலும் கண் மடல்களுள் வட்டமிடும் நிறங்களும், கோளக் கோடுகளும், மயிர்க் கற்றைகளும் தோன்றி உதயமான அந்தக் கண

வேளை, அவள் நெஞ்சில் அரும்பித் துளிர்த்தபொழுது அவளுக்கு எப்பொழுதுதான் தோன்றியதோ?

** ** **

பொன்னிக்கு அது தெளிவாகவே தெரியும். ஆனால் கறுப்பிக்குத் தெரியாது.

ஐந்தாண்டுக்கு முன்னால் கறுப்பியைக் கரங்களில் ஏந்திய பொழுதே, அவள் மனச்சாட்சியை மனதிலிருந்து பிடுங்கி வெளியே எறிந்துவிட்டாள்.

அவள் வைத்த ஒவ்வொரு அடியும் துன்பத்தின் நெருஞ்சிவிதை சொரிந்த இடங்களாய் மாறிப் பின்னேடின. அவள் பின்னே நின்ற ஒரு உயிரும் அவளைப் பின் தொடராமல் இருமிக்கொண்டு, முன்னே ஓடிய நெஞ்சைத் தன்னேடு இழுத்துக்கொண்டு பின்னே நடந்தது.

அதே ஆண்டுதான் பொன்னிக்கு மோகினி பிறந்தாள். வேப்பமர நிழலில் சாக்கை விரித்து, அதன்மேல் கறுப்பியை வளர்த்திவிட்டு முகத்தில் துன்ப விழுது படர்த்திப் பொன்னி அரற்றுவாள்:

"ஐயோணே நாச்சியார்... ஒரே ஒரு புள்ளை... அதுவும் இப்பிடியாப்போச்சு. இந்தக் கறுமத்துக்கிரங்கி உங்கடை தர்மக் கையாலே பிச்சை போடுங்க..."

அவளின் குரலொலியில் நெஞ்சு தாழ்ந்து, கண்கள் தலைபெருத்த அந்த விசித்திர ரூபத்தில் படிய சேலையில் சில்லறைகள் குவியும்...

ஆனால் இனி?

இன்று இரவோடு அந்தக் கதை முடிகின்றது.

"அம்மாச்சி..."

பொன்னி அசையாத சிந்தனையில் இருந்தாள்.

... "அம்மாச்சி... அம்ம்..."

பொன்னியின் சிறற் சொண்டு ஒலிப்பில் விரிந்தது. கனிவோடு குரல் இழைந்தது.

"என்னம்மா மோகினி?"

வேப்பம் பூக்கள் காற்றோடு சிந்தின.

கறுப்பி திகைத்தாள். கண்களில் கேள்வி கூடுகட்டியது.

"அம்மாச்சி..... மோகினியா? மோகினியெண்டா ஆர்?"

பொன்னி, பொன்னியாகி மண்ணிற்கு வந்தாள். கண்களிலே துவேஷம் அக்கினித்தது. மனதிற்குள் கோபம் கால்சுழட்டி வெறியாடிற்று.

"அம்மாச்சி..."

பொன்னி அவளையே வெறித்துப் பார்த்தாள். சினம், நெஞ்சின் தாய்மையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டுக் கெப்பிக் கூத்தாடியது. அவள் பேயானாள்...

"யாரையடி அம்மாச்சியெண்டனி... இனி இப்படிச் சொல்லுவியாடி... சொல்லு...வியா...டீ...சொ...ல்..."

பொன்னி கறுப்பியை அடி அடியென்று அடித்தாள். ஊசியால் குத்துண்ட புழுவாய், கறுப்பி துடித்துக் கொண்டு கேவினாள் :

"அம்மாவெண்டன் என்னை அடியாதை...என்...னை... இல்லை இனிச் சொல்லேல்லை...அம்... இல்லை ... என்ரை நாச்சியார்..... என்னை.... ஐயோ அடியாதை முருகா..... க்க்...வ்..."

பொன்னி ஓயவில்லை.

"சொல்லுவியாடி... நான் உனக்கு அம்மாச்சியாடீ... பரதேசி நாயே... அம்மாச்சியாடீ..."

கறுப்பி, அவளின் சொற்களில் கிழிந்தாள்.

அவள் அழவில்லை.

அசையவில்லை.

வேப்பமரம் முறிந்ததா?

ஒரே குரல் மட்டும் அவளைத் தன்னுடைய ஒலியால் குத்திக் கிழித்துக்கொண்டிருந்தது. 'சொல்லுவியாடீ நான் உனக்கு அம்மாச்சியாடீ... பரதேசி நாயே... அம்மாச்சியாடீ...?'

** ** **

பொன்னி புறப்பட்டுவிட்டாள்.

வேப்பமரத்தடியில் கறுப்பி கனவில் ஆழ்ந்துகிடந்தாள்.

அவள் கனவில் சிவப்புக் கோடுகள் சதுரமிட்டன.

அதைத் தொடர்ந்து...

அவளின் உள்மன முனைவு, வெடித்துத் தெளிய–இரவிலும், பகலிலும், பனியிலும், வெய்யிலிலும், கண் மடல் களுக்குள் வட்டமிடும் நிறங்களும், கோளக் கோடுகளும் தோன்றி உதயமான அந்தக் கனவை அவள் நெஞ்சினில் அரும்பித் துளிர்த்தபொழுது, தோன்றிய நாள் அவளின் மனதுள் பிரகாசித்தது.

காலை எட்டு மணி.

ஒருக்களித்துச் சாய்ந்து கிடக்கும் அவளின்முன் மூன்று சிறுமிகள் நிற்கிறார்கள். மூவரின் சட்டைகளும் பல வர்ணங்களைக் கோடிட்டு அசைகின்றன.

அவர்களின் அழகிய கருவிழிகளின் சுழற்சியும், அடர்ந்து பிரிந்து இரட்டைப் பின்னலாய் பின்னப் பட்டிருக்கும் கூந்தலும்.—

கறுப்பிக்குக் கண்களில் தவிப்பு.

மூன்று சிறுமிகளில் ஒருத்தி சொல்லுகிருள்: "ஐயோ..... இதைப் பார்க்கப் பாவமாருக்கு...... நான் என்னட்டையிருக்கிற சிவப்பு இனிப்பை இதுக்கு குடுக்கப்போறன்..."

"ஓமக்கா. என்னட்டேம் ஒரு இனிப்பிருக்கு. இந்த அக்காவுக்கு நானுங் குடுக்கிறன்..."

இரண்டு சிவப்பு இனிப்புகள் கறுப்பியின் சீலையில் விழுந்தன. அவர்களை அந்த வேளையில், கறுப்பியின் நெஞ்சம் ஒற்றுத்தாளாகி ஒற்றிக்கொண்டது.

கறுப்பி அவர்களுக்காகவே காத்திருந்தாள். காணும் நிறங்கள் எல்லாம் அவளுக்கு அவர்களின் நிறங்கள்தான்.

அந்தச் சிறுமிகள், தன்னை அக்கா, அக்கா என்று அழைத்த ஒலி இன்னமும் கறுப்பிக்குக் கேட்கிறது. அதே குரல்களை நெஞ்சினுள் ஏந்தி நின்ற தாபமே, அது காணுத விரக்தியால் அவர்களின் நினைவான நிறங்களிலும், அவள் காணும் நிறங்களிலும் அவர்களை அவளுக்கு நினைவூட்டு கின்றது.

ஒரு நாள், கறுப்பி பொன்னியிடம் தனக்கு ஒரு தங்கச்சி வேண்டுமென்று கேட்டாள். அப்பொழுது பொன்னி கலகலவென்று சிரித்தாள்; "எடி புள்ளை எனக்கு நீதானேயடி ஒரு குஞ்சு..." அப்படிச் சொல்லும்பொழுது மோகினியையும், தன்னுடைய நாலுமாதச் சிசுவையும் அவள் வேண்டுமென்று ஏன்தான் மறைத்தாளோ?

அரைகுறையாகக் கறுப்பி கண்விழித்தாள். கண் ஓரத்தில் கசிந்து ஒட்டிய ரத்தத்தை அவளால் துடைக்க முடியவில்லை. கண்கள், ஆவலில் எற்றுண்டு மேலே தாண்டின.

அந்த அழகிய மங்கை...

அவளைப்போல கைகளை வீசிக்கொண்டு கறுப்பி நடக்க முடியாதா?

அவளைப்போல கைவீசி நடந்து, ஓடிச் சென்று — கனவில் பறப்பதுபோலப் பறந்துசென்று அந்தச் சிவப்பு நிறத் தங்கச்சிகளை அழைத்துக்கொண்டு ஓடிவர முடியாதா?

தன் சக்தியால் முடியாதாயினும் குச்சிக் கைகளைச் சாய்வில் ஊன்றி, மனமளித்த உணர்வு பலத்தினுல் திடீரென்று எழ முயற்சித்த அவள், கண்கள் பீதியாய் விரிய வீரிட்டு அலறினுள். ஏதோ நிறக் கலவைகள் கிழிந்தன. கிலங்கிலமாய் கண்ணுள் காட்சிகள் கிழியுண்டு தொங்கின.

** ** **

வேப்பிலிருந்து படத்தை இழுத்துக் கிழித்த பொன்னி கறுப்பியின் அலறலில் நெஞ்சதிரப் பதைத்துத் திருப்பினுள்.

கறுப்பி, இன்ருேடு பொன்னியின் நிழலிலிருந்து முற்ருகத் தூக்கியெறியப்படும்முன் நிகழ்ச்சியானது அந்த அலறலில் அதிர்ந்து உதிர எண்ணியது.

கறுப்பியை மூடியிருந்த அந்த வெள்ளைச் சீலையை எடுத்துவிட்டு, அவளை அந்த வேம்பிலிருந்து கிழித்த கடுதாசியால் போர்வையிட்டுச் செல்லவே அவள் அங்கு வந்தாள். அவள் ஐந்தாண்டு மூலதனமாய் இட்டுச் செய்து வந்த உழைப்பு இன்ருேடு முடியப்போகிறது.

'எத்தினை நாளைக்கு இந்த வாழ்வு?'

பொன்னி கறுப்பியைக் குனிந்து பார்த்தாள்.

கறுப்பி அலங்கோலித்துக் கிடந்தாள்.

பொன்னிக்கு நெஞ்சுள் ஏதோ குத்தியது. ஊமைக் குரலொன்று அந்தப் பிரதேசம் முழுவதுமே ஒலிக்கும் உணர்வில் அவளின் எண்ணங்கள் சிக்கின.

“கடைசிவரையிலும் என்ரை பிள்ளையைக் கைவிட்டு விடாதை... கைவிட்டுவிடாதை...”

அது லெட்சுமியின் குரல்தான், நினைவிற்குள் அதுவே சுழல்காற்றடிக்கின்றது.

** ** **

அலங்கோலமான பெரிய தலையுடன் விசித்திரமாகப் பிறந்தாள் கறுப்பி. சூம்பிச் செயலற்றுப்போன அவளது கால்களும், உயிரைப் பிணித்திருக்கும் எலும்புக் கூடும், அவள்மேல் பிறருக்கு இரக்கத்தையே அள்ளித் தூவின. அந்த விசித்திரப் பிறவியைப் பொன்னி லெட்சுமியிடம் இரண்டு ரூபா நோட்டைக் கொடுத்துவிட்டு வாங்கினாள். இருட்டின் மறைப்புள், கணப்பொழுதில் உழைத்த அந்த இரண்டு ரூபா, பொன்னிக்கு நல்லதொரு மூலதனம் பெற உதவியாயிற்று. லெட்சுமி, வறுமையின் கொடுமையால் பிள்ளைப் பாசத்தைக் கொன்றுவிட்டாள்.

பிறந்த வீட்டிலே சாகாமல் ஐந்தாண்டு காலமாய் நெஞ்சில் துன்பத்தையும், நினைப்பில் கனவுகளையும், கண்களில் வேறுபட்ட வண்ணங்களையும், வரிக்கோடுகளையும் தாங்கிக்கொண்டு கறுப்பி வேப்பமர நிழலிலே கிடந்தாள். பனியா, வெய்யிலா, குளிரா எல்லாம் அவளிற்கு ஒன்றுதான்.

அவளை வைத்துக்கொண்டு பொன்னி பணஞ் சம்பாதித்தாள்: “அம்மா... நாச்சியார்... இது குறைப் பிறவி

யணை ... இது என்ரை ஓரே புள்ளை. நாச்சியார் இது உங்கடை புள்ளையைப்போலை... இதுக்கு உதவுங்கோ...?"

'ஐஞ்சு வருஷம். ஒரு வருஷத்திலை முன்னூற்றிச் சொச்ச நாள்...... ஒரு நாளிலை ரெண்டு ரூவா...... அப்ப ரெண்டை முன்னூற்றிச் சொச்சத்தாலை பெருக்கி, பிறகு ஐஞ்சாலை பெருக்கினல்......'

பொன்னியின் மனஉண்டியலில், சில்லறைக்குத்திகள் குலுங்கின.

இனி அவள் அங்கேயிருக்கமாட்டாள். அவள் இவ்வளவு நாளும் சேர்த்த பணத்தைக் கொண்டுபோய் வேறெங்காவது கடைகண்ணியை வைத்துவாழ்வாள்.

வெள்ளைச் சீலையைக் கரங்களால் எடுத்துக்கொண்டு பொன்னி எழுந்தாள்.

கறுப்பி மெல்ல மெல்ல அனுங்கினாள்.

" அம்மாச்சி ...... நீதான் எனக்குச் சொன்னனி எடி புள்ளை நீதான் எனக்கொரு மோளெண்டு... நீ... இனி நான் அம்மாச்சியெண்டு சொல்லன் அடியாதை ... என்ரை முருக ... ஐயோ..."

நெளியும் அவளின் உடலை, கறுப்பி காணமுடியாமல் கண்ணீர் திரைவிரித்தது.

அவள் திரும்பிப் பார்க்காமலே நடந்தாள்.

** ** **

முடிந்தது.

ஆயாசத்துடன் ஒரு குழந்தையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, மோகினியைப் பின்வரவிட்டு மூட்டைகளுடன் பொன்னி கிளம்பிவிட்டாள்.

வழியெல்லாம் பெய்த இருளிடையே மின்சாரவிளக்குகள் பறக்காத மின்மினிப் பூச்சிகளாகி இருளிற்கு கண்ணறைகள் குத்திக் கொண்டிருந்தன.

நிறங்களைப்போல, குரல்கள் நெஞ்செங்கும் கோடு கிழித்தன.

எத்தனை குரல்கள்! எத்தனை நிறங்கள்!

எல்லாம் ஒரு நெஞ்சுக்குள்ளே......

பூவிற்குள் இருக்கும் மகரந்தவீரியத்தை பூவின் உருவத்தைப்பார்த்துக்கூற முடியுமா? சாந்தமான முகத்திற்குள் விஷமான எண்ணங்கள் ...... மெல்லிய வார்த்தைக்குள் புயலான சூழ்ச்சிகள்......

கறுப்பி நெட்டுயிர்த்தாள்.

"எடி புள்ளை எனக்கு நீதானே ஒரு மோள்......"

"ஒரே ஒரு புள்ளை...... அதுகும் இப்பிடி ... நாச்சியார் இது உங்கடை சிவனைப் போலை..."

பொன்னியின் மூளைக்குள் கறுப்பி ஒளிந்தவள்போல், நெஞ்செங்கும் பொன்னிக்கு அவள்குரல்.

"ஆரடி அம்மாச்சி ... அப்பிடிசொல்லுவியாடி ...... அப்பிடிச் சொல் ...... லுவி ...... யா?"

"நான் உனக்கு ஆரடிநாயே ...... அம்மாச்சியாடீ"

பொன்னி மீண்டும் வேப்பமரத்தடிக்குத் திரும்புகிறாள். அதற்கு அர்த்தமற்ற அர்த்தமே காரணம்.

** ** **

கறுப்பி, சிலிர்த்த அவியல் நெல்லாய்க் கிடந்தாள்.

பொன்னி மௌனமாய் தலைகுனிந்தாள். முன்பு அவள் அழைத்துவராத மோகினி இப்பொழுது அவளின் பின்னே நின்றாள்.

கறுப்பியின் அரற்றல் தடம் புரண்டு கேட்கிறது.

"அம்மாச்சி ... இல்லே நாச்சியார் ... இல்லேயணே... எனக்கு நீதாணேயணே அம்மாச்சி... எனக்குத் தங்கச்சி... சிவப்புத் தங்கச்சி ... நான் கைவீசிக்கொண்டு ... நிறம் பூசிக்கொண்டு ... சடைபோட்டுக்கொண்டு—"

கறுப்பியின் அடிமனக் குமுறல்கள் சொல்லலேகளாய் கழன்று அடித்துப் புரண்டன.

பொன்னியின் மனதுள் நினைவுகள் படைபடையாய்க் கிளம்பின.

மோகினி கறுப்பியின் பக்கத்திற் சென்றாள். பிறகு தன்னுடைய பிஞ்சுவிரல்களாற் கறுப்பியின் பெரிய தலேயைத் தொட்டுத் தடவினாள். கறுப்பி அலுப்புடன் விழித்துக் கொண்டாள்.

கறுப்பியின் கண்கள் இருட்டில் நட்சத்திரங்களாய் மினுங்கின.

திடீரென்று கண்டதால் மோகினியில், கறுப்பி— அவள் தேடிய ஆறுதல்களேயே கண்டாள். அவசரவேகத்தில் வார்த் தைகள் எழ, மோகினி அவளுள் கணத்திலே உறவானாள்.

"அம்மாச் ... தங்கச்சி ... நீ ... நீ..."

அவளின் ஆவியே கரங்களாகி மோகினியை அணேக் கத் துடித்தது.

மோகினி அசையாமல் நின்றாள்.

தனக்கு நிழலாக அவளேயே எண்ணி அறுதியிட்டு, தன்துயர்களே தன் ஒத்தவளுக்கே கறுப்பி ஒப்புவித்தாள்.

"தங்கச்சி... எனக்கு அம்மாச்சி இல்லே ... நாச்சி யாரும் தன்னே என்ரை அம்மா இல்லேயெண்டிட்டா...

எனக்குப் பசிக்குது... சோறு கொண்டுவந்து தாறியா? நீ நல்லோ சிவப்பு தங்கச்சி..."

கறுப்பியின் கண்கள் படபடக்க, நெஞ்சம் கெதியில் அடிக்க —

மோகினி மழலையோடு தத்தினள்.

"அக்கா நீ இக்குட்டி அக்கா... நீ என்னோடைவா... நீ என்னோடை வா ... என்ரை அம்மாச்சியோடை வா... வா ..."

மோகினியின் பிஞ்சுக்கரங்கள் அவளை எழுப்ப விரைய, கண்கள் பலத்தின் நிறைந்த துடிப்பினில் விரிய, இதழ்கள் பாரத்தைத் தூக்கும் கனத்தில் மடிந்தன.

"அக்கா நீ என்னோடை வா..."

"அக்கா ... நீ"

"அக்கா ... நீ என்னோடை ஓடியந்திரு..."

வா ... வா ...

'அக்கா ... அக்கா ... அக்கா ...'

முன்பு கேட்ட அதே குரல்கள்போல இப்பொழுதும். குரலைக்கேட்டதும் கண்கள் தன்னிச்சையாக நொடிப்பொழுதில் நிறத்தைத்தேடி ஏமாந்தன.

தேடியது, கைக்கு மேலாகத் தொங்குவதுபோல கறுப்பிக்கு மனதுள் தென்பட்டது. தன்னுடைய கனவுகளெல்லாம் உருப்பூண்ட உருவமாக, மோகினி நிற்பதாய் கறுப்பியின் சின்ன நெஞ்சம் நினைத்து, மகிழ்வின் பூரிப்பில் பொங்கி எழ, அவளையறியாமலே அவளின் வாயிலிருந்து வார்த்தைகள் கொட்டுண்டன :

"தங்கச்சி ... நீ ஓடிப்போய் என்ரை நாச்சியாரிட்டை சொல்லியிட்டுவா ... நான் உன்னோடை ஓடியாறன்"

தவிப்பில் குதித்த கறுப்பியின் வார்த்தைகளில் பொன்னி தூசானாள். அவளிற்கு முன்னே கறுப்பி விசுவ ரூபமெடுத்து நின்றாற்போல ...

பொன்னி தன்னைமறந்து தன்னுணர்வுகளின் தன் முனைப்பை இழந்து உயிராகி, உணர்வாகிப் பிறந்த குர லிலே கூவினாள் :

"ஐயோ மகளே !"

மோகினி திடுக்கிட்டாள்.

கறுப்பி ஒருக்களித்துச் சாய்ந்தாள்.

பொன்னி ஓயவில்லை :

"எடியே புள்ளை ... என்ரைராசாத்தி ... நீ என்ரை செல்லமணை என்ரை தவமணை ... என்ரை செல்லக்குட்டி யணை ..."

தாய்மையின் குரல், அந்தப் பிரதேசம் முழுவதிலும் ஓயாமலே ஒலித்தது.

# நாதங்கள் எத்தனையோ

விரிவானம் உலகை மூடிக்கவிந்து விரிந்திருக்கின்றதாம். காற்று, தோன்றி அழிந்து தோன்றித் தோன்றி எங்கேயோ நிறைந்து போகின்றதாம். அப்படியானால் மண்ணில் ஜனித்து குரல்களையெல்லாம் தன்னோடு தானாக்கி நீருள் நீராய்ச் சங்கமித்துக் கொள்ளும் காற்று, தன் கருப்பத்தினுள் ஏந்திய குரலுயிர்த்துளிகளை மீண்டும் தனித் தனியாய்ப் பிரித்துக் கொடுக்கமுடியுமா?

இதைக்கேட்கையில், வானம்பார்த்து நாமிருந்த புதுத் தம்பதி நாட்களின் வேளை, கமலம் நான் உனக்கு ஆசையோடு எனைமறந்து சொன்ன ருதுஸம்ஹார சுலோகங்கள் நினைவிற்கு வருகின்றன. 'அஞ்சனக்குவியல் போன்ற வானமும், செம்பருத்தி மலர்களின் மகரந்தம் படிந்து விளங்கும் பூமியும், பழுத்துச் சாய்ந்த தானியக் கதிர் நிறைந்த வயல்களும் சேர்ந்து, எந்த இளைஞன் மனத்தில் தான் காதலின் இனிமையை பருகுவிக்காதிருக்கும்?' இப்பொழுதுமென்ன? அதேவானும், பூமியுந்தான். ஆனால் சுலோகங்கள்...'

படைபடையாய் அடுக்குண்டு கிடக்கும் முகிற் திரளுக் கூடாக என் கண்களை நெம்பு கோலாக நுழைத்துப் புரட்டிப் படையின் பிரிதளங்களைத் தனியாய் கண்டு, அதற்குள் ஒளிந்திருக்கும் உன்னைத் தேடிக் கண்டுபிடிக்க நான் முயலுகின்றேன்.

கிளுக் கிக் கிக்...

கிளுக் கிங்...

எடி நீ பகுடியா பண்ணுகிறாய்?

"சீ! என்ன குளிர் காற்று?"

இந்தக் கிழவனுக்கு இருக்கும் ஆசையைப் பார்த்து, யன்னலோடு ஊஞ்சற்பலகை ஊன்றி உதையும் காற்றுச் சிறுவனின் எற்றுதலில் நீ உனது குரலைக் காட்டுகின்றாயா? போ... போ... காற்றில் சாம்பலாய்க் கலந்தழிந்துவிட்டு, மீண்டும் உனது வீணையின் தந்தியை ஓயாது மீட்டிக் கொண்டிருக்க என் தலைமேல் ஒருத்தியை நீங்காத சுமையாய் இருத்திவிட்டு, கால இருட்டினுள் நீ போயே விட்டாய்.

தாள சுத்தம் தவறாது பொங்கிவரும் இசையை இடையிலே முறியப்பண்ணிய அபஸ்வர வாத்தியமாய்...

கமலம்... கமலம்...

நான் கிழவன்; அறளை.

நீ அபஸ்வரமல்லடி. நீ வீணையின் நாதமாய், தாளத்தின் ஒழுங்காய், குரலின் இன்னிசையாய், நாட்டியத்தின் அபிநயமாய், கீதத்தின் கீதமாய், எல்லாவற்றுள்ளும் நிறைவாய் நிறைந்திருக்கின்றாய். மதர்த்துச் சுழலும் நயனங்களை இமைமூடி, நெஞ்சினிற்குள் உலக உணர்வுகளையவிந்து, நீ உன்னுடைய விரல்களில் உயிரைத் தேக்கி, நளினமாக தம்புராவில் சுருதி மீட்டுவாய். அது திக்கெல்லாம் கமழும். எலும்பினுள் தடவிச் சில்லென்று இதயத்தை எங்கெங்கெல்லாம், எங்கெங்கெல்லாம் அது கொண்டு செல்லுமடி.... அப்படியான உன்னையா இந்த அறளை பெயர்ந்தவன் அபஸ்வரம் என்றேன்.

மனவாய், நினவுச்'சுயிங்க'த்தை
அதக்கி உமிழ்கின்றது.

"இவருக்கெண்டா சொல்லைக்கு முன்னை மூக்கிலை

கோவம்" உன்னுடைய சொற்கள், என்னுடைய நாக்கை நூல்கொண்டு கிழண்ணத்தோடு இறுக்கி வரிகின்றன. வெண்ணிற ஒளிப்பரப்பில் பதித்த கருமையைச் சுழல் விளக்காய்ச் சுழற்றி, இதயத்தினைக் கொழுவி இழுத்து அபிநயிப்பதைத் தில்லானாவோடு நீ மறந்துவிடவில்லை. ஆனால் அரங்கிலிருந்து, சலங்கைக விலங்குகளிடமிருந்து விடுதலை பெற்று இறங்கியபொழுதில் உன்னுடைய 'கருமாபிளப் போளை'க் கண்கள் என் இருதயக் கதவுகளைத் திறந்து கொண்டே என்னுடைய மன அந்தரங்கத்தைத் துளாவுவது போல நான் உன் பார்வையின் கூர்மையில் உணர்ந்து, உன்னைப் பார்க்காமலே தலைகுனிவேன்.

இப்பொழுது கண்களைப் பார்க்க
நிமிருகின்றேன். மணிக்கூண்டு
க்கு மேலே உன்னுடைய படம்.

புகைப்படத்திலும் உன்னுடைய மாபிள் போளைக் கண்கள் மினுங்கியபடி. கண்களில், பாவத்தை விளக்கிப் பேசும் நிலை. பாவத்தின் உயிரே கண்களிற்தான். நிறம் பூசிய படத்தில், உதடுகள் செவ்வரத்தை நிறத்தில் ஈரம் நனைந்த தோற்றம்.

இந்தப் படம் எடுத்தது நல்ல நினைப்பு. மார்கழியிற் தான் ஸ்ருடியோவிற்குப் போய் இந்தப் படத்தை எடுத்தோம். பனியில் வெடித்த உன் உதடுகளை ஈரம் பூசிப் பூசி, கமெராவின் கண் சிமிட்டலுள் நீ படமாகிவிட்டு எழுந்தபோது — நான் மிகவும் விரும்பிய காளிதாஸனின் ஹேமந்த ருதுகால சுலோகமொன்றை மனதிலிருந்து

வாசிக்க, நீ அதை என்னிடம் கேட்டு மனனிக்கவில்லையா? நீ இந்தப் படத்திற்கு நன்கு சிரிக்காததின் காரணமும் பனியால் வெடித்த உதடுகள்தானே? 'காதலனோடு களிக்கும் இந்தப் பெண்களின் இதழ்கள் பனியால் வெடித்திருக்கின்றன. அதனால் இவர்கள் சிரிக்கவேண்டிய சமயத்தில் கூட வாய்விட்டுச் சிரிப்பதில்லை' இப்படிச் சொல்கையில் உன் வாயுள் சிரிப்பும் சிறி எழும். இது, இந்தப் படத்தைப் பார்க்கையில் எப்பொழுதும் நிகழ்வது.

ஐயோ கமலம்...

லளித் கலைகளின் அணைப்பிற்குள்ளே அணைந்த நீ, அபிநயம் பிடிக்கும் பொழுதும், ஊழிக்கூத்தை ஆடும் பொழுதும், புயலாகி, பிரளயமாகி, தீயாகி, ரௌத்ரகாரமாகி கூடுபாயும் நீ என்றாவது என்னோடு சினந்திருக்கின்றாயா? முகத்தை முறைப்பினில் கோணிக்கொண்டிருக்கின்றாயா? இல்லை, நீ ஸ்வாதீனபதிகா.

"அந்தாளின்ரை கோவத்தை அந்தச் சிமாட்டி எப்பிடித்தான் சமாளிக்குது. அவரெண்டால் கண்டறியாத வாகடகாறன். கமல மெண்டா மிதிச்ச இடத்திலும் புல்லுச் சாகாத பதுமையெல்லோ!"

அண்டை வீடுகளின் குரலில் நான் மனம் நனைவேன். நீ எப்பொழுதும் என்னை உன் வசத்திலேயே, பிரேமையால் அணைத்து வைத்திருந்தாய். ஆனால் அந்தக்குரல்களெல்லாம் காற்றோடு அழிந்தவை. தீக்குச்சியின் நுனியிலுள்ள மருந்து எரிந்தபின் யாராவது அந்தத் தீக்குச்சியை நெருப்புப் பெட்டிக்குள் வைத்திருப்பார்களா? கமலம், நீ என்னிலிருந்துபறக்கும் மூச்சுக்காற்றாய், என்னிலிருந்து பிரிந்து சென்ற பொழுதும் எனடி இந்த உலகத்தில் இறைவன் என்னை உலவவைத்து வேடிக்கை பார்க்கின்றான்?

## 2

நாட்டிய அரங்கம்.

வட்ட நிறக்குவியங்கள் அரங்கில் சவர்க்காரநுரைக் குமிழிகள் போல மாறிமாறித் தோன்றியுடைந்துகொண் டிருக்கின்றன. கோணங்களிலிருந்து நிறவட்ட ஒளிப்புகைகள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு குவிந்தும், மழுங்கியும், பாய்ந்து கொண்டும் நீ போகும் பக்கமாக, உன்னுடைய 'சிலிங்சிலிங்' சலங்கையொலியோடு விரைகின்றன. ஒலியும், ஒளியும் உன்னோடு ஒன்றிய உன்னையாட்டும் தாளத்திற்குப்பதம் பிடிக்கின்றன.

கமலம், நீ இவ்வளவு அழகாடீ!

தாய் யசோதாவிடம் கண்ணனைப்பற்றி முறையிடும் கோபிகாஸ்திரியாகின்றாய் நீ.

நான் காலங்களை என்னிலிருந்து உதறியெறிகின்றேன். முதிர்வைத் துளாவி முக்குளித்து இளமையின் உதயப்பருவத்தில் கால்தட்டி நான் நிற்பேன். அந்த வேளையில் கடற்கரையின் சொருசொருத்த வெண்மணலாய் நினைவுகள் விரியும்... எத்தனை நினைவுத்திவலைகள்! மனத்தாமரையிலே ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருவில் உருண்டு புரண்டு...... உன்னோடு பூவரசம் இலைத்துணுக்குளைக் கறியாக்கி, வெண்மணலைச் சோறாக்கி சிரட்டையில் போட்டு சிற்றடிசில் செய்து அதை உண்பது போல பாவனை காட்டி, கோபித்து, உன்னுடைய தலையிலே செங்குட்டுக்குட்டிய நாட்கள்...... மாமர நிழலிலே உன்னுடைய புன்னகைக்கும் சின்னஞ்சிறு இதழ்களைத் திறந்து என்னுடைய இளநெஞ்சைப் பிழிந்து உருக்கிய கீதங்களை நீ பாடி, என்னைக் கீதவலையுள் சிறையிட நான் என்னைமறந்த பரவசலயிப்பில் கேட்டுக்கொண் டிருந்த அந்தக்கிறக்கமான வேளைகள்......

அலுமாரியில் இருக்கும் வீணையை எடுத்து, அதன் தந்திகளை மீட்டி ஓசையெழுப்பின், அந்த ஓசையில் நீ நித்திய அரவமாய் நிலைத்து, உஷத்கால வருகையாய் மன துள் இனிமையை மடைகட்டி நிரப்புவாயோ? அழகும் உணர்வும் பொங்கித்ததும்பும் அந்தக் கன்னங்கரிய கண் கள், மோகக்கிறக்கத்தினில் இமைமடல்கள் மூடுண, கரங் கள், உயிரின் பிளப்பு வெள்ளமான இசையை நாக அலைக ளாய் எழுந்து மடிமடியாய் உயரப்பண்ண, அந்த இனி மையின் உயர்ந்த உச்சநிலையிலே நீயும் நானும் தவழ்ந்து வாழ்வின் அழியாத சிரஞ்சீவித்துவம் பெற்ற மகிழ்விலே மூழ்கி அங்கேயே நித்திய இன்பமென்ற தனியுலகை மாய வடிவில் கட்டியெழுப்புவோமா...

நான் என் இதயோரமாக நீ வருவதாய், காற்றின் முண்டுதலில் உணர்ந்தேன்.

"சீ! என்ன குளிர் காற்று, யன்னல்
மூடவும் ஒருவரில்லை? திலகம், நீ
எங்கை போட்டாய்?"

(இறப்பு நினைவில், நாட்டிய அரங்கடி)

உன் முகம்... இங்கிருந்து பார்க்கும்பொழுது அதற் குள் எவ்வளவு நாணமின்னல். எனது இதயம் ஐஸ்நீருள் நனையும் பிரமை பெறுகின்றது. ஒருவருக்குள் ஒருவர் தானா? உன்னை உரித்துப் பார்த்தால் நீ உருஉருவாய் பெருகுவாயா?

யாரோ நெஞ்சக் கூட்டினுள் புலம்புவது எனக்குப் பெருமூச்சாய் கேட்கின்றது. பெருமூச்சொலி மனதை அலைக்கழிக்க, நான் எனது கண்களை நடுமாடப்பக்கமாக இறங்கி நடக்க விடுகின்றேன். பூஞ்சணப் பார்வைக்குள் நூலேணி கட்டுவது நிருத்யதிலகா.

"கமலம் இங்கைபார் நிருத்யதிலகா செய்யிறதை. தீதாள் இல்லாமை ஊசியாலே தையல் தைக்குது. கையிலை ஊசி குத்திறு."

நிருத்யதிலகா விழுந்து விழுந்து சிரிப்பாள். அவளும் நீ தான். நீயும் அவள் தான். அம்மாவின் பிள்ளை அம்மா வோடு சிரிப்பாள். உன் சிரிப்பும், அவள் சிரிப்பும் கன்னங் குழியச் சிரிப்பு. தக்காளி நிறச் செழுமைச்சதைக் கன்னப் புடைப்பில் உனக்கு சிறுமச்சம்.

அம்மாவின் மகளாம்...

அம்மா... அம்மா...

அவள், மனதை நிர்வாணமாக்கி துன்பக் குளிரில் சாம்ப வைத்ததுபோல, அவள் எனக்குள் நித்தியமே துன்ப விதைகளைத் தூவுகிறாளடி.

கமலம்.

அதோபாரடி என்ன நெஞ்சழுத்தம் அவளுக்கு. உன் னுடைய அலுமாரியண்டை நிற்க அவளுக்கு என்ன துணிச் சலடி.

"திலகா, இதென்ன அலுமாரிய
டியிலை என்னத்தைத் தடவுறாய்?"

என்னுடைய வார்த்தைகளை அவளின் நெஞ்சுரலில் இரும்புலக்கையின் கனத்தோடு அழுத்திக் குற்றுகிறேன். வட்ட முகத்தில் பொட்டுப்பொட்டாய் அரும்பி வடிவழி யும் வியர்வையின் வழிதலில் உதடுகள் நனையவும், அவ ளின் வாய், ஒலிக்கு அசையவில்லை.

திறந்த அலுமாரியினுள் அவள் தடவுவது எதை யென்று எனக்குத்தெரியும்.

"போ... அங்காலை போ, இந்த
அலுமாரி இனித்திறபட்டுதெண்
டா, திற—"

நீ மீட்டிய வீணையும், நீ கட்டிய ஆடையும் உன்னோடேயே வந்துவிட்டன. பிறகு நிருத்யதிலகாவிற்கு அது சொந்தமாவதில்லை. உன்னது உன்னதுதான்.

திலகாவை நான் திட்டுகின்றேன்.

"போ நாசமாய்ப்போ"

முதுகுத்தண்டில் செடில்குத்தி என்நினைவை நீ சுண்டியிழுக்க நான் நிமிருகின்றேன்.

மணிக்கூண்டுக்கு மேலே சதுரத்துள் படமாய் நீ.
கீழே உதரத்துக் கொதிப்பினில் நான்.

இடையே —

"திலகா, நீ எங்கை துலைஞ்சு
போனாய்?"

3

அமைதிக்கு வழியென்ன? மரணக்குழியுள் உடலைத் தோய்த்து அமுக்கி, உயிர்ச்சாற்றை அதற்குட் பிழிந்தால் சாந்தி கிடைக்குமா? என் முன்பு சுலோகங்கள். என்னுள்ளே அமைதியை நெய்ய அவை முயலுகின்றன. அட்சர விளைவுகளில் அர்த்தங்கள் அர்த்தமறுகின்றன.

முதுமையில் என்னுள் முதிர்வது முதிர்ந்த மனமுறிவுதான்.

பூஞ்சணக் கண்களை, கண்ணாடித் துண்டங்கள் ஒளி ரசம் பூசி மினுங்கவைக்கின்றன. கண்களை எழுத்தில் ஒட்டுகின்றேன்.

இது என்ன?

ஓ!

ஸீதா ஸீதா...

ராமா ராமா...

வால்மீகியின் இராமாயணத்துள் ஆழும் என்னை, மீண்டும் பாரசூட் கட்டி, மேலே— வான்நிமிரும் நினைவுகளிலே நீ மிதக்க வைக்கிறாய்.

என் உயிரை உருக்கி, காற்றினால் நீ இசையினைக் கரைய வைக்கின்றாய். என்னுள்ளும் உன்னுள்ளும் மூச்சசமற்ற மோகன முகிழ்ப்பு. மிதவையில் எங்கெங்கோ பறக்கும் நிலையில் நீயும், நானும் உயிரறுந்து பறந்தோம்.

அஃறிணையும், உயர்திணையும் ஓரேலயிப்பில் ஒன்றையொன்று கொழுவிமுறுகி இசையினைக் குழைக்கின்றன. வீணையை மீட்டும் நீ, குரலுள் அதன் ஒலியைக் கூழின் திரவமாக்கிறாய். ஆணியுங் கரைந்து, இரும்புக் குழம்பாய் வழியும் போல உடலையே உருக்கி இழைந்து ஓடும் நாத வெள்ளம்... என்ன இசையடி ! உடலின் தசையும், எலும்புங் கரைந்து, மெழுகாய்க் கலந்து கலங்கி நீயற்று.... நானற்று... நரம்புகளின் மேனியை நக்கியெழும் விரல்கள் கன்றிவிட... ஐயோ... ஸீதா...

"ஸீதா ..."

சட்டென்று எல்லாமே வுறுந்துவிட— என்து இதயம் வெடித்த பலூனாய் நெஞ்சக்கூட்டுக்குள் விழுந்து நழுவி விழுந்து உடைந்த துணுக்குகளாய் சிதறிப்பறக்கின்றது.

"ஐயோ ஸீதா"

என் உறுப்புகள் உணர்விழக்கின்றன.

உன்னைப்பார்க்க முடியவில்லை,

நீ பிரசவித்த இசைக்குழந்தையின் மென்னியைக் கசக்கிக் கொன்றவன் நானல்ல.

உன் பார்வையுள், உன் பார்வையைமீட்டு.

உன் பார்வையுள் இன்றுதான் கனல்; மாபிட்தணல்.

"ஆரை நினைச்சியள்... ஆரை... ஸீ... ஸீதாவா?"

பதறிக் கிழியும் உனது குரலில், எனது இதயம்— வெடித்த இதயம் கணப் பொழுதில் ஒட்டுண்டு விடுகின்றது.

உன் முகம் காற்றுப்போன 'பிளடர்' போலச் சுருங்கி விட்டதை நான் அவதானிக்கின்றேன்.

வீணையின் தந்திக்கம்பிகளில் நீ தலைசாய்ந்து கவிழ, தந்தி எழுப்பும் டங்காரம் என்னுள் எறிகல்லு வீசியும், விளங்கிய எனக்கு அது எறிகல்லு அல்ல; பஞ்சுப்பந்து.

"கமலம் என்ன இது?"

என்குரலில் நீ நிமிரவில்லை. குரலோடு குலுங்கி அழுகின்றாய். தளதளக்கும் கூந்தல் தோகையாய் முன்மூடிக் கிடக்கின்றது. நான் முன்குவிந்த தோகை மயிரை அள்ளிப் பின்னே தள்ளி, உனது முகத்தை நிமிர்த்தி எனது இரண்டு கைகளிலும் ஏந்திக்கொள்ளுகின்றேன்.

"கமலம்... கமலம்..."

எனக்கும் உனக்குமிடையிலுள்ள வீணையில், முத்து முத்தாய், நீருள் உருப்பெறும் மெழுகுதிரியின் உருக்கற் சிறுபொட்டாய் கண்ணீர் மணிகள்.

இருவரும் மௌனிகள். இருவரும் இருவருள் நிறைகின்றோம். நான் உன்னை என்னுட் பின்னிக் கொண்டு, குரலில் பலவிதமான உணர்வுகளைப் பிணிக்கின்றேன்.

கமலா நீ ஸீதாபதே என்ற கீர்த்தனையைப் பாட அதில் நான் அழுந்தி, என்னுள் என்னை அழிந்தமன அவசஹழ்கலுள் உன்னை ஸீதாவென —

ஸீதா எங்கேயடி ஓடுகின்றாய்?

நில்... ஓ! நில்லடி நில்.

நான், உன்னை விட்டுத் தனித்த வீணையில் கசிந்த கண்ணீர்த்துளிகளை விரலால் ஒற்றி எடுக்கின்றேன். பிறகு என்னை நீ ஸீதாபதே என உன்னை நான் ஸீதா என...

பொய்யடி, எல்லாம் பொய்யடி. இல்லாவிட்டால் இந்த வீணையை அலுமாரியில் தூசுபடிய விட்டுச் செல்வாயா? ஸீதா... ஸீதா.

நான் வாசவதத்தையின் கோஷாவதி வீணையைக்கண்ட உதயணனுகி நித்தமும் புலம்புகின்றேன்.

புலம்பலில் புலம்புவதெல்லாம் உன்நினைவோ, கறையான் அரிக்கும் என்னுடைய புத்தகங்களைத் துடைக்க எனக்கு அவகாசமில்லை. அவற்றைப்போல, இந்தத் தசைத் தடிப்பைக் கறையான்கள் அரித்து எச்சத்தில் எலும்புகளை நிறுத்தி விட்டாலும் துன்பப் புற்றுகள் நெஞ்சுள் எழாது தகர்ந்துவிடுமே.

"உங்களுக்கென்ன சமஸ்கிருதப் பேராசிரியர். சதா காளிதாசனும் பாசனும், வால்மீகியும், பாணபட்டரும், வேதங்களுந்தான் உங்கள் பாராயணம்."

நீ சொன்னபடியா கமலம் இங்கே நான் இருக்கிறேன். மணிக்கூட்டுக்கு மேலுள்ள படத்தில் உறைந்து விட்ட உனக்கு இது தெரியாததா? கிரௌஞ்சப் பறவையொன்று, மரக்கொம்பரிலிருந்து தீனஸ்வரமாகப் புலம்புவது கேட்கிறதா? படபடக்கும் அதன் மென்னிறகுகளிலிருந்து, தன் துணையைப் பிரிந்துவிட்ட ஆற்று வேதனை அணு அணுவாகப் புலப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மனத்தனற் கட்டியிலிருந்து, எழும் ஒரே புகைநாலும் மேலே மேலே வளையவந்து உன்னிலேயே சுருக்குதடம் கட்டிக் கெளவி இறுக்குகின்றது.

எனக்கெதனை ஆறுதல் என்றாய்? என்ன காவியங்களைப் படித்தடி நான் ஆறுதலடைவேன்? என் முன்பு புரளும் வால்மீகி ராமாயணத்தைப்பார்!

நீ கண்ணடியுள்!

இராமனின் தாபம், எனது தாபமாய் அந்த எழுத்துக்களில் முனகுகின்றது. பார்க்கவே தோன்றுகிறதடி, பார்த்தாலும் அதனுள் நீதான். 'அழகிய இலைகளும் பூக்களும் அடர்ந்த இந்த மரங்களைப் பார்க்கப்பார்க்க எனக்குப் பைத்தியம் பிடிக்கும்போல இருக்கின்றது. இதோ மான்கள் பெடைகளோடு இன்புற்றுத் திரிகின்றன. நான் மருண்டமானின் கண்களையுடைய சிதை இல்லாமல் தனித்திருக்கின்றேன்' அஷ்வகோஷரும், பாஸனும், வால்மீகியும், காளிதாசனும் என்னுள் இன்பந்தந்ததும்... துன்பம்...

இல்லையடி! நீ ஸ்வாதீன பதிகா.

நான் நிமிர்வதில் உனக்குக் கவலையில்லையா?

கணவனை வசீகரித்து, அவனைப் பிரேமையில் ஆழ்த்தி இனியவளாய் வாழ்ந்த உருவம். முகத்தின் சாந்திமை. செவ்வரத்தைச் சொண்டு.

உன்னுடைய படத்திலேயே ஓயாது என் கண்கள். இந்தக்கதிரையுள்ளேயே என் சிந்தனை.

4

புளியம்பழத்தைத் தின்று கோணும் வாயைப்பார்த்து எனது மனம் கோதுடைந்து புத்திளமை பெறுகின்றது. நீ ஆயாசத்துடன் கட்டிலில் இருந்தபடியே, கண்களைச் சாய்த்து முகட்டின் விளிம்பில் குளவி கட்டியிருக்கும் சிறு

களிமண் கூட்டைப் பார்த்து, எதை எதையோ அதனுள் தேடுகிறாய் போல வாயங்கலாய்த்து கனவு மயக்கத்தினில் சிரிக்க, நான் எனது குருத்தெலும்புகளால் மகிழ்வுக் குதிர்ப்பு சினைப்பதாய் உணருகின்றேன். அக்கூட்டை யுடைக்கக் கூடாதென்றது நீகதையால் காக்கும் சருப் பத்து சிசுவை எண்ணித்தான். கூட்டுப்புழுவையும் உன் னோடு சமனாக்கிக் கொண்டது, தாய்மையின் கனிவை முன் னதாகவே — சிசுவின் பிறப்புத்துளியை ஏந்தியபொழுதே நீ அதைப் புளியம் பழத்தோடு சேர்த்து உமிழ்நீரோடு விழுங்கிக் கொண்டமையினாற்தானோ?

நீ நடப்பது எவ்வளவு வேடிக்கையாயிருந்தது. தசைப் பந்தை வயிற்றில் கட்டிக்கொண்டு சார்மனையில் அரை குறை மயக்கத்தினில் நீ சாய்ந்து கொண்டிருப்பாய். பிறக் கும் உயிருக்கு தொப்பி பின்ன முயன்று, களைப்பிலோ — கண்ணை மூடிக்கொண்டு வயிற்றுள் புரள்வதோடு மான சீகமாகக் குரல்கொடுத்துப் பேசிக்கொண்டிருக்கும் தாய்மை முனைப்பிலோ, மடியினில் இளஞ்சிவப்பு நூற் திரணை களி களியாய்க் குலைந்து கிடக்க மறுபுறத்தில் இரண்டு பின்ன லூசிகளும், நூலின் இழையினில் உருவமற்ற தொப்பியை பின்னமாய்க் கொண்டிருக்க அதையே நான் பார்த்துக் கொண்டு நிற்பேன்.

உன்னை நானும், என்னை நீயும் புரிந்து கொண்ட தற்குக் கற்பிக்கும் அர்த்தந்தான் எங்கள் இல்லற வெற்றி. உன் நெஞ்சை நானும், என் நெஞ்சை நீயுமாய் உரிமை கொண்ட பின்பு வாழ்விலே நிறைவுதான். புரியாதவர்க ளைப் புரியாதவர்கள் புரியாமலிருக்கட்டும். புரிந்தவர்கள் பிணைப்புண்டவர்கள்.

"ஸீதா உனக்குக் கூர்வயிறு. நிச்சயம் லவகுசர்..."

"ஹூக் ஹூம்..."

நீ நெளிந்து எழுந்து, காலடி எடுக்க, உன்னைநான் மோகவேட்கையுடன் எட்டித்தாவி—

வெளியே கதவைத்தட்டுகிறார்கள். மடைச் சென்மங்கள் நினைத்தும் நிம்மதி பெறஏலாது. திலகா... திலகா இதென்ன தலையிழுக்காமல் நீ உள்ளே போ...

இதுக்கென்ன நெடுகிலும் இந்தக் கோலம். ஒரு ஒழுங்கோ துப்பரவோ? தலைமயிரைச் சடைக்காளியாய் விரிச்சுக்கொண்டு, விசரியளைப்போல.

அறுப்பு, அறுந்தவன் கதவைத்தட்டுறது போதாதெண்டு மணியையும் போட்டு அடிக்கிறான். இழவு, இழவு... கதிரையும் முறியப்போகுது ஏடாடுதே.

தபாற்காரனா?

புதினந்தான். இதாருக்குத்தவால். எனக்கு, எனக்குத்தான். பேராசிரியர் திரு. இராமச்சந்திரன்....

பூஞ்சணக் கண்கள் எழுத்துக்களை நெருடித் தடவுகின்றன.

ஸீதா, உன்னுடைய ராமச்சந்திரனுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்களடி. ஏனெண்டு தெரியுமா? உன்ரை நினைவிலை நடக்கிற விழாவிலை என்னைப் பேச வரட்டாமடி. என்னை —

5

"சரி உம்மடை புறியம்போலை. எனக்கென்னவோ இப்பிடியெண்டா..."

புரிந்ததால், புரியும்படி உனக்குச் சொல்லுகின்றேன். என்னுடைய குரலில் நான் உன்னைவிட மேலானவன் என்றருங்கிதான் மேலோங்கி நிற்கின்றது.

"நீங்க விருப்பமில்லாட்டி நான் போகேல்லே..."

நீ எனக்கு நேராகக் கண்களை வைத்துக் கொண்டு சொல்லுகின்றாய், அந்தக்குரலுள் சொல்ல முடியாத தவிப்பும் இறுகியிருப்பதை உணருகின்றேன். என்னுள் என்னையே மோதவிடுகின்றேன். என்னுடைய அதட்டலுள் நீ நீருண்டு நெருப்பாவது உண்மையே. ஆனாலும் நிமிர்கின்ற பொழுது, வாய்க்குள் பிறக்கத் துடித்த அதட்டல் ஒலி, பிண்டமாய் உருவற்றுச் சிதைந்துவிடுகிறது. பிடிவாதக் காரியான உன்னுடைய குரலிழைவு மனநொருங்கலிற் சுருதி மீட்டுகிறாற் போலவே நான் உணர்வடைந்தேன்.

நீ நின்ற நிலையில் நிற்கின்றாய்.

"இல்லை கமலம் நீ போகலாம்"

"இல்லை உங்களுக்கு விருப்பமில்லாட்டில் விடுங்கோ நான் போகேல்லே..."

அப்படிச் சொல்கையில், உன்னுடைய வேண்டுதலுக்கு என்னை வசியப்படுத்தும் இறைஞ்சுதலே அக்குரலின் பின்னால் நிற்கிறது. நீ ஸ்வாதீன பதிகா.

உன்முகத்தை ஏனோ ஊடுருவுகின்றேன். பெரியகரு விழிகளுள் எவ்விதசலனமுமில்லை. அவை வழக்கம்போலவே இமையின் படபடப்பினுள், மோகனஞ் சிந்திக்கொண்டு அடங்கிக்கிடக்கின்றன. அந்தவேளையில் நீ அழுது, கண்ணீர் சிந்தவேண்டுமென்றுதான் நான் விரும்பினேன். நீயோ?

கமலம் உனக்கு கலக்கமென்று இருந்ததை நான் வாழ்விலே என்றுதானடி கண்டிருக்கிறேன். எதிலும் ஒருமிடுக்கு, படபடமின்மை, என்து உணர்ச்சி வசப்பாட்டின் முன் கோபத்துள்ளல்களிலே, நீ எவ்வித சினத்தையும், காண்பியாது மிக அமைதியாக என்னைப் பார்த்து இதழோரமாகச் சிறு புன்னகையைத் தவழவிடுவாய். மரத்தின் கீழே

சாய்ந்து குவிந்து கிடக்கும் சருகுகள் அம்பாரங்கட்டி-மலையாய் தெரியினும் அது கனமற்ற குவியல்தான். அது போலவே உணர்ச்சி வசப்பட்டு நான் தள்ளும் துள்ளல்களையெல்லாம் நீ உனதுமன அரங்கில் வெறும் கனமற்ற சருகுகளாய் குவித்து, கடைசியில் அவற்றையெல்லாம் எரித்து சாம்பராக்கி மனதுள் புன்னகைத்துக் கொண்டாய்.

நாங்கள் இருவரும் திருமணமான புதிதில், சிநேகிதர் ஒருவர் அழைத்திருந்த விருந்துக்கு செல்லுகின்றோம்.

நீ எனக்குப் பின்னுக தலை குனிந்துகொண்டு வருகின்றாய். புதுச்சிலையின் மடமடப்புமட்டுந்தான் என்பின்னால் நீ வருவதை உணர்த்துகின்றது. மனதுள் என்ன எண்ணச்சுழற்சியோ, கீழே துருத்திக்கொண்டு நிற்கும் கல்லையும் கவனியாது மூட்டப்போன உன்னை, நான் என்னோடு இழுத்துக்கொள்ள, நீ முகம்நிமிர்த்தி என்னைப் பார்த்த அந்தப் பார்வையிலே நான் யோகமாகி, உன்னுடைய காதோடு சரஸ ரகசியப்பேச, நீ உடலைவளைந்து கொள்ள... அந்தக் கணப்பொழுதின் வெடிப்பிற்குள் எங்கிருந்தோ காற்றோடு மிதந்து வந்த கானமொன்றைக் கேட்டதும் நீ என்னுடைய பிடியிலிருந்து உன்னைப் பறித்து, நட்டமரமாய் அந்த இசையையே குடிப்பவளாய் நின்றபொழுது நான் என்னுளே, உன்னைத்திட்டாத திட்டெல்லாம் திட்டிக்கொண்டேன். விருந்துக்குச் சென்ற அதேநினைவு, என்னுள் சிலடித்துக் கிடக்கின்றது. விருந்து வீட்டிலே வானொலியில் கச்சேரியொன்று நடந்து கொண்டிருந்தது. என்னோடு அந்த வீட்டிற்குள் வந்த நீ, என்னோடு வராத தனியள்போல, வானொலியின் பக்கத்திற் சென்று, அந்தக் கச்சேரியையே கேட்டுக்கொண்டிருக்க, நான் அடுத்தடுத்துவரும் கொட்டாவிகளையெல்லாம் தாங்காத சினத்துடன், பல்லையிறுக்கி நெரித்துக்கொண்டு வாய்க்குள்ளேயே அடைத்துக் கொண்

டேன். உனக்கு ஒன்றும் தெரிந்தாற்போலில்லை. என்னை நீ என்னவென்றும் கேட்காது எழுந்து விருந்துண்டதும், எதையோ எங்கோ வைத்துவிட்டு வந்தவள்போல சிந்தனையில் ஆழ்ந்து, சலசலப்பின்றி அமைதியாக வீட்டிற்கு வந்ததும் —

" அப்போதை கேட்டியளே அந்தக்கச்சேரியிலை ... ஆ என்ன அற்புதமாக அவள் பாடினுள். அந்த இசையிலை நான் என்னையே மறந்திட்டன் ".

" கமலம் "

நான் அதட்டற் குரலிடுகின்றேன்.

" போன இடத்திலை போய் விருந்து சாப்பிட்டிட்டு வாறதோ, பாட்டுக் கேக்கிறதோ ? எத்தினை நேரமெண்டு நீர் ரேடியோவோடை இருக்க, நான் அவையளோடை மனச்சாட்டுக்கு கதைச்சுக்கொண்டிருக்கிற. பாக்கிறவை இதைப்பற்றி என்ன நினைப்பினை... அதையோசிக்காமை..."

கூஞ்சிக்குரலின் தாக்கத்தில், கமலம் நீ என்னை நிமிர்ந்து பார்க்கின்ருய். முகத்தில் சிறுசலனம் நடுங்கியோடினும் கணத்தினில் அமைதியே உனது முகத்தினில் பொலிகின்றது.

" என்னை மன்னிச்சிடுங்கோ "

ஒருகுரல்தான். உன்னிடமிருந்து விம்மலையும், அழுகையையும் எதிர்பார்த்து ஆறுவதற்கு கிளம்பிய என்னுடைய ஆத்திரம், உன்னுடைய ஒரு சொல்லை பெற்ருேலாய் எந்திக் காங்கைபரப்பி எரிகின்றது.

அருந்ததி வெள்ளியை வானத்தில் பார்ப்பதில் உனக்குத் தனிவெறி. சப்தரிஷி மண்டலத்து நட்சத்திரங்களை கண்ணினுள் போட்டு, அவற்றின் கதைகளை மனதுள் அசையிடுவதில் நீ மகா வீரீ.

அருந்ததி வெள்ளியைப்பார்!
பொட்டுப்பொட்டான தணற் சிந்தலிடையே,
நீலவானில் அதுவும் ஒரு சிறுவெள்ளி.
அதற்குத் தள்ளி நிற்கும் மறுவெள்ளிதான்
அருந்ததியின் கணவன் வஸிஷ்டர்.

அருந்ததியின் கதையை எத்தனை தடவைகள் என்னிடம் நீ சொல்லியிருக்கின்றாய். அதை அன்று நீ நினைத்துப் பார்க்கவில்லை; மறந்துவிட்டாய்.

கணவனின் திரும்பி வருகைக்காக காலங்காலமாகக் காத்திருந்து, ஜீவமூச்சிலெல்லாம் அவனது நாமமே அணு அணுவாய் பாராயணப்பட, அசையாதிருந்த அருந்ததியும்—

அவளும் நீயும் ஒன்று கமலா?

(நினைவுகள் தட்டுண்டு வெடித்து, பிரிந்தபொருத்திலேயே மீண்டும் பொருந்தி ஒட்டுகின்றன.)

"என்னை மன்னிச்சிடுங்கோ" ஒருகுரலின் உறுதியினால் நீ உன்னையே மாற்றிக்கொண்டு, கடைசிவரையிலும் அந்த வழியிலேயே நின்று பிரிந்தாயேடீ...

என்னை விழுங்கும் கண்கள்.
இதழின் மடிவுள் கலாமய
மான மெல்லிய புன்னகை.
அதுவும் அபிநய முத்திரை.
சின்ன மூக்கு. மூக்கின் ஓரம்
சிறு பரு.

தீயின் நுனிக் கொழுந்தைப்போல, உன்னுடைய கண்களே எனது நெஞ்சினுள் அசைந்து படபடக்கின்றன. இதோ என்முன்பு, மணிக்கூண்டுக்குமேலே தூங்கும் படத்திலேதான் அந்தமாயமெல்லாம்.

நிறக்குவியங்கள் ஒன்றுள் ஒன்று துளைந்து நுழைவது போல, நினைவுகளும் ஒன்றிலொன்று கொழுவி மீண்டும் பின்னமடைகின்றன. இதயத்திலிருந்து எழும் எல்லாச் சிந்தனைகளிலும் கமறுவது நீயே.

"இல்லை கமலம் ... நீ போகலாம். நானும் கட்டாயம் வாறன்."

என்னுடைய குரலில் கனிவினைத் ததும்பி வழியவைத்துக்கொண்டு உன்னைப் பார்த்தேன். நீ அமைதியாகத் திரும்பி நடக்கின்றாய். குதியமற்ற கால்கள், பரபரப்பைக் காட்டாது வழமையான நினைவுகளில் அடியெடுக்கின்றன. நாட்டியக் கச்சேரிக்கு போகட்டுமா என நீ என்னை முதலில் கேட்டபொழுது நான்மறுக்க, நீ மீண்டும் கேட்க, நான் சம்மதிக்க முதலிலும், முடிவிலும் ஒரேவிதமான முகபாவந் தான்.

கமலம், உனக்குள் உணர்ச்சிகள் என்பவை என் தெறித்து வெளிக் கிளப்புவதில்லை. சாகும்பொழுதுகூட சலனமற்ற புன்னகைதான், குத்துவிளக்கின் ஒளியலைவுக்குள் என் கண்களிலே நிறைந்து, என் கண்களை மிழகாய்த் தாள் உண்டதுபோல கலங்கிக் கசியவைத்தது. தேங்கா யெண்ணெயை உறிஞ்சி, வெளிச்சமூற்றும் திரியின் கருமை முனைப்பையே, உனது சலனம் அற்று வெளிறும் முகத்திலிருந்து நான் எனது இதயத்திற்குள் வடித்தெடுத்து ஊற்றிக்கொண்டேன். ஆடாமல் அசையாமல் நிம்மதிக்குள்ளேயே தலையைச் சாய்த்துக்கொண்டு, அழுது வடியும் எங்களைப் பரிவுடன் பார்த்திருந்த அந்தவேளையில் மட்டுமே உன் விழியோரத்தில் கண்ணீர் உருண்டு இரு புறமும் கோடிழுத்துக் காதோடு ஓடிவழிய நான் கண்டிருக்கின்றேன். அதற்குள்ளேயே, அந்த நீர்க் குளிசைகளுக்குள்ளேயே நீ எல்லாத் துன்பங்களையும் திரட்டிக் குழைத்து

வைத்துவிட்டாய். ஆனால் அதைத்தான் நான் நெஞ்சச் சிரட்டைக்குள்ளே நிதமும் உரைத்தபடி இருக்கின்றேன்.

உன்னுடைய பிறைவடிவ நெற்றியில், சுருக்கங்கள் கீறு கின்றன. இதழ்க்கடையோரம், நெஞ்சுள் தினவெடுக்கும் மாணவஸ்தையில் அழுந்தி நசுங்கும் உணர்வினில் சுழித் துக் கொள்ளுகின்றது. அத்தனை தவிப்பிடையேயும், உன் னுடைய சோர்ந்த கரம் மேலெழுந்து அபயமுத்திரையில் நிருத்யதிலகாவிற்கும் எனக்கும் முன்னதாக அசைகின்றது. திலகா, உன்னுடைய கைகளைத் தனது முகத்தோடு புதைத் துக்கொண்டு வெடித்து விசும்புகின்றாள். நீ அவளது முகத் தோடு கண்களை வெட்டிச் சரிக்கின்றாய். உதடுகளை, நுனி நாக்கால் தடவி எச்சிற்படுத்திக்கொண்டு வார்த்தைகளை இடறலில் வெளிக்கொணர்ந்தாய்: "திலகா எதுக்கணை அழுகிறாய்... நிருத்யம் சாந்தியாயும், கீதம் அதன் சாரமு மாயிருக்க அதனுள் அழுந்திய நீ அழலாமா? எதுக் கெண்டாலும் ஒருநாளும் கண்ணைக் கசக்கப்படாது..."

நான் தனியன், நீதான் எனக்குக் கூட்டாயிருந்தாய். ஈரச்சிலையை இறுக்கி முறுக்கிப் பிழிவதுபோல என்னெஞ்சை யும் உனது நினைவுக் கரங்கள் விஸ்வரூபமெடுத்துக் கசக்கிப் பிழிகின்றன.

"சாப்பாடு ஆயித்தம்"

உணர்ச்சி நெகிழ்வற்ற குரலில் அழைப்பவள் திலகா தான்.

## 6

நிருத்யதிலகா கட்டிலிலேயே இருக்கின்றாள். இன்றோடு அவளுக்கு இருபது வயது. சிலும்பிய தலைமயிரினூடாக, விரல்களை நீவிக்கொண்டு அவள் பேன் பொறுக்கிக்கொண்

டிருக்கின்றாள். இழை இழையான தலைமயிரைப்போல, கற்றை கற்றையான நினைவுகள் முறுக்குப் பலகாரமாய் பின்னுண்டு, வளையங்களை அடுக்கலிற் கொழுவிக்கொண்டு நெஞ்சத்தெளிவை முக்காடிட்டு மறைத்து ஐந்துவருடங்கள்; ஆயிரத்தெண்ணூற்றி இருபத்தாறு நாட்கள.

அவள், வீட்டைவிட்டு வெளியுலகின் சஞ்சார ஒலிகளில் மனதை மையலுறுத்தி, அதிலே கால் பதித்து எழும் கனவுகளில் தன்னுள்தானே சிலிர்ப்புண்டு பூரித்த பூரிப்பை இழந்து இன்றோடு ஆயிரத்தெண்ணூற்றி இருபத்தாறு நாட்களும்...

இப்பொழுது எத்தனை மணி?

மணி சொல்லி வைத்து அடிக்கின்றது.

பன்னிரெண்டு!

பன்னிரெண்டிற்குப் பசிக்கும் வயிற்றுக்குப் பசியில்லை. சுண்ணாம்புக் காளவாயின் வெம்மையினுட் பொசுங்கினாற் போன்ற வெளிறிய உடலும்— அலுப்பில் களைத்து கட்டில் மெத்தையுள் உடலைத் தொய்த்து விழும்— இவைதான் அவள். அதைவிட அவளில் வேறில்லை. அவளின் உடலுள் உணர்வு, உருக்குலையின் அடர்வெந்தீயில் பொசுங்குண்டு இதயமேயற்று வெற்றுச் சூனியத்தையே, நெஞ்சிற் கொண்டாற்போல அவளது வெறும் முகமும்; மங்கற் கண்களுந் தெரிகின்றன.

எல்லாஞ் சூனியந்தான்.

சூனியத்தைத் திரையாய் அவள் பிரிக்கின்றாள். அதுவும் சுருண்டு சுருண்டு கண்களைப் பின்புறமாய் தள்ளி— கால இடைவெளி காட்டி பின்னூரியும் திரைகளில் நாலிழுத்தல் செய்ய, கடைசியிலே போய்நிற்பது—

அவள் மணிக்கூண்டைப்பார்க்க நிமிருகின்றாள்.

மணி பன்னிரெண்டு ஒரு நிமிஷம்.

கடைசியில் போய்நிற்பது ஆயிரத்தெண்ணூற்றி இருபத்தாறு நாள் ஒரு நிமிஷத்தின்பின்பு.

'ஆயிரத்தெண்ணூற்றி இருவத்தாறை எத்திணையாலை பிரிக்கலாம். பிரிப்பம், தொளாயிரத்துப் பதிமூண்டு. பிறகு அது ஒற்றை, பிரிபடாது. பாப்பம். மூண்டாலை எண்டா மூண்டு சைவர் மிச்சம் வருகுது.'

குகையுள் விரியும் ஒற்றையடியின் படிக்கற்களைத் துளாவி வளையினும், அந்தரங்கம் புரியாத மனமுடிச்சைக் காண்பதே முடியவில்லை.

நினைவு அருவியின் போக்கு உருமறந்த குரலில் [இதோ கேட்கும் குரலில் அல்ல; இறந்தகுரலில்] மணல் தட்டிப் பிரிக்கின்றது.

"பிள்ளை இதென்னெணை வெக்கம். இதேன் அழுகிறாய்? என்ன செய்வம்... ம்ம்... அம்மாவின்ரை நினைவிலையோ? பிள்ளை அழாதேங்கோ. ஐயோணை இப்பமட்டிலும் அந்தச்சீமாட்டி இருந்தாவெண்டா..."

பிஞ்சுக் கத்தரிக்காய்ப் பொரியலும், பச்சைமுட்டையும், நல்லெண்ணையும் வயிறுகொள்ள வேண்டிய பெரியநாள் நேற்றெனினும், ஒரு நாளுக்குள் அவளுக்குள், அவ்வளவு துன்பம் சுமையிறக்கிவிட்டது. அவளுடைய அம்மா கமலம் இறந்து ஆண்டுத்திவசம் வர இன்னம் ஏழரை மாதம் போகவேண்டியிருந்தது.

நிருத்யதிலகா, தீதாள் போடப்படாத தன்னுடைய விரலைப் பார்க்கின்றாள். பிறகு விரல்களைப் பொத்திக்கொள்வதுபோல மடித்து, முகத்தோடு விரல் நகங்களில் கண்க

ளைத் துளாவுகின்றுள். பிறைவடிவ நகங்களின் முனைப்பில், சதைக்கும், முனைப்புக்குமிடையே கருங்கோடிட்டு அடைந்து கிடப்பவை அழுக்குத்துகள்கள். அவள் அதை ஊசியாலேயே தட்டி எடுக்கின்றுள். பீறிடும்மனக்கதிரின் ஊடுருவலாலோ பெருவிரலால் மறுவிரலைத் தட்டித்தாளம் போடுகிறற்போல அவள் உணருகின்றுள். தொண்டைக்குள் கம்மி வெளிவரத் துடித்து அவதிப்படும் தயிர்க்கட்டி போன்ற குளிருணர்வு, உடலோடு பரவக் கைகளும், கால்களும் தாளம் போட, உறுப்புகள், எழாது நெஞ்சுள் எழுந்து ஒலிக்கும் ஒலிக்குப் பதம் பிடிக்க முனைவதும்—

எழுந்து, அலுமாரியை நாட மனம் அவாவுகின்றது. தவிப்பின் மூர்க்கமான கெந்தல், புரிபுரியாய் கண்டிப்புகளை அறுத்தெறிந்து விடுகின்றது. நொண்டும் நினைவுகளுக்கு கவடுகள் கட்டி, எழுந்து நேர்த்தடத்தில் வழுக்கலின்றி நடக்கவைக்கும் ஜீவரகசியமே, அந்த அலுமாரியுள் ததும்பி நிறைந்திருப்பதுபோல நிருத்ய திலகாவிற்கு உணர்வு தட்டுகின்றது. எழுந்துசென்று அந்த அலுமாரியைத் திறந்து, அதற்குள்கிடக்கும் நாட்டிய அணிகளை அணிந்து கொண்டு, மனவெளியில் அமைந்த பக்கவாத்திய அரங்கிலிருந்து லயங்குன்றுமல் வரும் இன்னிசைப்பின்னணியினை மானசீகமாக ஏற்று, அந்த ஒலி, உடலினுள் புகுந்து மயிர்க்கூச்சலோடு நிருத்ய மோகத்தினையும் ஏற்படுத்த, கீழே நிலத்தினில் கோடுகோடாய் இழுவுண்டிருக்கும் பூக்கோலக் கோடுகளின் முகையரும்புகளிடையே நின்று, தவிப்பை வாந்தியெடுக்க, நிருத்யம் மேற்கொள்ள வெறிவெறிக்கின்றது.

எத்தனை நாட்கள் நினைவோடு மல்லிடுவது ?
மன உறியில், அழுந்தல் நினைவுகளை எத்தனை
நாட்களுக்குச் சுமையாகத் தாங்கிநிற்பது ?

நினைவுகளை, 'வரிச்சுக்கட்டி' மனமேட்டினுள் நுழையாதவாறு தடுக்கும் எல்லா முயற்சிகளிலும் அவளுக்குத் தோல்விதான்.

பதனமடையாத இளமனது சூழல் வெக்கையில் வெம்பி, பழமென்றநினைவை வெளியே எழுப்பினும், உள்ளே மூளைக்கப் பயன்படாத வெறும் வித்துத்தான். காலம் முந்திக் கனிந்த கனிவுதான், எதிலுமே பற்றற்ற வெறுப்புத்தன்மையை விரக்தி வடிவினில் அவளுடைய நெஞ்சினில் தூதுவளங்கொடிபோல தொய்ந்த உருவினில் நிற்கச் செய்திருக்க வேண்டும்.

'ஒவ்வொருவரும் ஒவ்வொரு அதிர்விலிருந்து திசை மாறிவிடுகின்றார்கள். என்னுள்ளே எத்தனை அதிர்வுகள். ஜியோமட்றியும், அல்ஜிப்ராவும், மற்சும் அப்பாவின் வற்புறுத்தலால் என்மூளைக்குள் தம்மை நிறைத்துத் தையல் போட்டுக்கொண்டன. எனக்குள்ளே அம்மாவின் கலைகள் நின்று சுழன்றன. 'மெரிகோறவுண்ட்' சுழற்சிபோல, என்னுடைய மூளை அச்சின் தாங்கல் நுனியில், இந்தத்துறைகள் எல்லாமே நின்று சுழன்று ... கடைசியில் என்ன ... எல்லாமென்றால் எல்லாமில்லை. எல்லாமில்லை என்றால் எல்லாமிருக்கின்றன. வெண் சுவரில், கைப்பொத்தலுள் நிரம்பிக் கிடக்கும் நிறப் பொடிகளை வாரிவாரி வீசி, நிறக் குப்பையால் சுவரைக் காணமுடியாத நிலையில், கண்களுள்ளே நிறச் சிறுவாணம் உற்பவிக்கும் தன்மையினை ஏற்படுத்துகிறாற் போலத்தான் என்னுளுமா ?'

நீ சிரிக்கிறாய். உன் நெற்றிப்
பரப்பில் குங்குமப் பொட்டு.
சுமங்கலப் புன்னகை.

மேலே தூங்கும் படத்தின் கனி
வான புன்னகை, மனத் தணற்
சட்டியில் விழுந்து, புகை காலி
நெஞ்சுள் அடர்கிறது.

"திலகம் நீ புலிக்குட்டிதானடி. பதின்மூன்று வயதிலே யே உன்ரை நாட்டியம் அற்புதமாயுள்ளதடி. உனக்கு கணக்கிலே மூளை சுழியெண்டாலும் நீ எல்லாத்திலும் சூரிதான். வீணையின் குடம் உன்ரை மடியிலை இருந்திட்டா உன்னை நீயே மறந்து வாசிக்கிறதிலே நான் பரவசமாகிறனடி. திலகா, நிருத்யம் ஒரு சாந்தியடி கீதம் அதன் சாரமடி"

அம்மா இஞ்சைபார்.

அம்மா நீ எனக்குச் சொன்ன சொற்களை, நீ போன வேளையிலிருந்தே என்னுடைய நெஞ்சினிற்குள் இருந்து அள்ளிச் சென்றுவிட்டாய். நீ இறந்தபின்பு அப்பா முற்றிலுமே மாறிவிட்டார். என்னைப் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டாமென்று தடுத்து நிறுத்தியதோடு, நான் விரும்பும் எல்லாவற்றையும் என்னிடமிருந்து பிரித்து அழித்துவிட முனைகின்றார்.

வீட்டு விட்டத்தில் சிலந்தி வலைகள். ஒழுங்குகுலைந்து சில நூல்கள் இழைவிட்டு தொங்கி அசைகின்றன. என் தலையிலும் அவற்றின் சில நூலிழைகள்.

எனக்குத் தனிமை; இருண்ட மாடத்தின் நடு மையத்திடையே, அப்பாவின் வெஞ்சொற்புயலிடையே நான் நாணலாய் மனம் வளைந்து, உன் நினைவின் இதத்தில் மீண்டும் உயிர்த்து நிமிருகின்றேன்.

நிருத்யமும் கீதமும் சாந்தியா அம்மா?

"எடீ திலகம் எடீ எடீ எ..."

அப்பா என் பின்னால். அலுமாரி திறக்கவில்லை. அதற்குள் அவர் என் பின்னால். பிடரிப்புறம் கிண்ணென, கண்

களின் கருவளையநுனி மையத்திலிருந்து அதிர்ச்சிப் பொறிகள் ஒளிவட்டங்கள் கட்டி சடசடவென்று மூலைமுகட்டிற்குச் சிறியெழ, நான் எதுவும் செய்யமுடியாது உடலை வளைத்து முன்குப்புறவாய்ச் சுருண்டு கவிழ்ந்து விழுகின்றேன்.

"அம்மா ... அம்மா ... என்ரை
அம்மோ ..."

மூக்கோடு கொழுகொழுக்கும் ஈரம், திரவமாய், கஞ்சி நீராய் முகம் முழுவதும் ஒட்டிப் பூசுகின்றபொழுதும், என்னால் எதுவும்செய்ய முடியவில்லை. நெடுஞ்சாண்கிடை விம்மலில் உயிரில்லை.

"அம்மா... அம்மா... அம்... ம்..."

நான் அழுவது அடிக்கல்ல.

சாந்திக்கு; சாந்திக்கு; சாந்திக்கு.

## 7

வீணையை எடுத்து மடியினில் வைத்து, தந்தியினை மீட்டிக்கொண்டே நீ நடராசருக்கு முன்னால் இசையைப் புனல்விக்கின்றாய். கண்களிலிருந்து மன அந்தர வெடிப்பினில் வழிந்து கசியும் நீரையுந் துடைக்காது, நீ பாடிப் பாடியுருக பற்றியெரியும் நெருப்பின் செம்மையின் பக்க வாட்டுப்பின்னணியில் அடரும் புகைபோல உன்னை நான் என் கண்களில் ஜோதியாயும், அதைச் சுற்றிய வட்டமாய்...

சேதன, அசேதன நினைவுகள், உணர்வுகள் எல்லாம் புகைமங்கி, பருமட்டான இதயத்தொலிப்புகள் எல்லாம் அறுந்து, இதயமே கரைந்து வழிந்து, எலும்பின் கவச நிலைதகர்ந்து, அவையையும் இசையுறழ்ந்து கௌவுவது போல நான் பரவசனாகி என்ன கூறுகின்றேன் என்று தெரியாது என்னையே மறந்து ஏதோ கூவுகின்றேன்.

"...................................."

எல்லாம் மௌனமாகின்றன. நீ கண்களின் நீர்த் துளும்பலைத் துடைக்காமலே என்னைப்பார்க்கின்றாய். உன் உடலெல்லாம் திடீரென ஆறிய நீர்போல, சலனம் கவியாத முகத்தைத்தான் பார்க்கின்றேன். ஆனால் உன்னுடைய கண்களுள் ஒன்றா, நூறா, ஆயிரமா, லெட்சமா, கோடியா, அதற்கும்மேலா? அந்தச் சலனக் கீறுகளுக்கு எண்களுண்டா? ஆனால் கணத்துள் அவற்றையெல்லாம் சமாளிப்பு உழுவாரங்கொண்டு நீ செதுக்கி எறிந்துவிட்டாய்.

புற்பூவாய் நீ மணமற்று, எழிலற்று, குலுங்காமல் புஷ்பித்துவிட்ட ஒரே வாடாப்பூவும் —

பூவா, எனக்கு வயிற்று நெருப்பு அது!

கழுவிய சின்னஞ்சிறு காட்கிழங்குபோல உனக்கு அழகிய உதடுகள் என்று நீ நிருத்யதிலகாவின் இதழ்களினைப் பார்த்துவிட்டுச் சொல்வாய். இன்று அதை நீ பார்த்தால்...

(ஈயப்பாளங்கள் உரிந்து உரிந்து பட்டடையிலிருந்து படைபடையாய் கிளம்புவதுபோல நினைவுகளும் தொடர்புகளுக்கும் தொடர்பின்மைக்கும் இடையிலான உருக்காட்டிமும்மனப் பிணைப்பைக் கீறிப் பிறிட்டுத் தலைநிமிர்ந்து முண்டஉருவிலும் முடஉருவிலுமாய்........ எத்தனைமாய நினைவுகள்!)

நிருத்யதிலகாவிற்கு நாட்டியம் பயில்விக்கும் பொழுதினில் அவளின் மென்னடையில் உனது கண்கள் தவளையின் தத்தலாய் தொடர்ந்து தாளம் சரிபார்க்கத் தவ்வித் தவ்வித் தொடரும். அடிவைக்கும்முறை பிழைத்தால், குதிக்கால் வழியாக அக்கினி குழிவெட்டித் துவாரமமைத்து துருத்திப்பை அழுத்தத்தால் அமுக்குண்டு காற்றைக் கக்கு

விக்கும் பொழுது பகார் பற்றியெரியும் நெருப்பாய் உனது கண்களுள் சினம் கனல நீ நெற்றியைச் சுருக்குவாய்.

"அம்மா என்னைக் கோவியாதேங்கோ. இனிச் சரியாய் ஆடுவன் ..."

உடன் புண்ணை எரித்து ஆற்றுவதற்கு கட்டப்படும் அயோடின் தூளாய் அந்தவார்த்தை உன்னைத் துளாவி டினும், படிப்படியாய் அந்தவார்த்தைகளே நெஞ்சக்கண் ணுடியில் வெல்வெட்துணி கொண்டு தடவித்துடைப்பதைப் போல இதம் தருகின்றதென்பதை நான் உன்னுடைய முகக் குறிப்பிலிருந்து அறிந்துகொள்வேன்.

"தொண்டையினுல் கீதத்தை ஒலிப்பிக்க வேண்டும் கையினுல் பொருட்களை உருப்படுத்தி, தோற்றுவித்து கண் களுள் அவையே உண்மைவடிவினதாய், பார்ப்பவர்க்கு தெரியும்படி செய்யவேண்டும். கண்களின் சின்னஞ்சிறு வெட் டிமைப்பிலும் பாவமே தோன்றித் துலங்கவைக்க வேண் டும். முகத்தின்மூலம் செய்யும் அபிநயமே மிகவும் முக் கியமானது. அதிலும் விழிகளிலேதான், பாவத்தின் உயிரே— அடிநாதமே காணப்படும்; கண்களே நாட்டிய வெளியீட்டுக் கருவிகளில் உச்சமானதடீ ..."

நீ நட்டுவாங்கம் செய்ததுகூட என்நெஞ்சினின்று கழ ராத காட்சியாகவே உள்ளது.

கமலம் ... உன்னுடைய சொல்லுட்தானே நிருத்ய திலகா அடங்கினுள். எங்கே நிருத்யா என்று கணக்கு வாத் தியார் வீட்டில் வந்து கேட்டால் நீ சொல்லற்ற கண்க ளாலேயே அவருக்கு விடை கொடுப்பாய். நிருத்யாவை கணக்கில் புலி என்று பாராட்டி, அவளது மூளைக்கு அவள் ஒரு பேராசிரியையாக வருவாள் என்று கூறிப் பாடம் சொல்லிக் கொடுக்கவர, கடைசியில் தாயும் மகளுமாய்

சேர்ந்து அவருடைய காற்செருப்புகளைத் தேயவைத்தது தான் கண்ட மிச்சம்.

நான் ஆயாசிக்கின்றேன்.

உன்னிடம் எத்தனை முறை இதைச் சொல்லியிருக்கிறேன். நிருத்யதிலகாவை இப்படி ஒரேயடியாய் இசையுள்ளும் ஆடலுள்ளும் மூழ்க வைத்து அவளுக்கு எதிலுமே கவனமில்லை. யன்னலோரமாகப் போய் நின்று வெளியே வானின் விழிம்பில் அடிவயிறு பிய்ந்து தசைத் துணுக்குகள் கிழியுண்டு ரத்தங் கக்கிக்கொண்டிருக்கும் நிறக்குவியலுள் அவள் தன்னுடைய சிந்தனைகளைத் தாழ்த்தி, அதற்குள் நிரம்பிவழியும் இனிமையில் இசையைக் கண்டு, கண்களால் அவற்றை வழித்தெடுத்துக் கொள்பவள் போல நிற்பாள்.

அவளுக்கு இளமைவயதின் துறுதுறுப்பு அற்றுப் போன மாதிரி. கணக்கு வாத்தியார் கணக்குக் கொடுக்க, அவள் சுவரில் பதித்திருக்கும் சித்திரங்களிலே தான் கணக்குகளை எழுதிக் கூட்டல் செய்து கொண்டிருப்பாள்.

அவளுக்கு எதிலும் மென்மை வேண்டும். சுவரில் ஆணி அடிக்கும்பொழுது, தன்னுடைய நெஞ்சுக்குள்ளேயே ஆணி அடித்து இறுக்கப்படுவது போல கண்களை இறுக்கி உதடுகளைப் பிதுக்கிக்கொண்டு, காதுள் கைவைத்தபடியே அறைக்குள் சென்று விடுவாளே ...

**டங் ... டங் ... டங்ங் ...**

எங்கிருந்து ஒலி?

காலத்துள் மனத்தை அழுத்திய நான் இப்பொழுது பிரக்ஞையடைந்தேன்.

**" திலகம் ... திலகா ..."**

பார், சமலம் அவளின் ஒலிப்புக்கூட இவ்விடத்திலே இல்லை. திலகத்திற்குப் பதிலாய் நீ எனக்கு ஒரு திலகனைத்

தந்திருந்தால் எனக்கு இவ்வளவு துன்பங்கள் வந்திருக்குமா? அவன் எனது சொற்களைக்கேட்டு, இப்பொழுது மற்ஸ்ஸில் சூரனுயிருக்கமாட்டானு? என்னேடு விரிவுரையாளராயிருந்த ஆனந்தநடராசருடைய மகன் இஞ்சினியர். அடுத்தவன் டொக்டர். மகள் சங்கீதபூஷணம். என்னுடைய குடும்பத்தில்? கமலம் உன்னேடு நான் இதையிட்டு எத்தனைநாள் மல்லிட்டிருக்கின்றேன். நீ சம்மதித்தாலும் என்ன? திலகம், அவள் சாதாரண திலகமா, நிருத்ய திலகம்!

பெயர்வைத்த நாளன்றே எனது ஆசைகளை — நான் கனவுகண்ட லவகுசர் ஆசைகள் எல்லாவற்றையுமே என்னுள் கருக்கிக் கொண்டேன்.

"என்னவோ பிறந்தது பெண். என் விருப்பப்படியே வளர்ப்பேன். நிருத்யங்களின் திலகம்; நிருத்யதிலகா!"

நான் என்ன சொல்வேன்?

த்றிச்த்றிச்ட்றிக் ...

பல்லியும் இதே கேள்வியை என்னிடம் கேட்கின்றதா?

கன்னப் புடைப்பில் மச்சம்.
தாலி மொக்கு எவ்வளவு பிர
காசம் அதுள் உனது மனம்.
அதுவும் தங்கப்; நீயும் அதே.

நெடுக உன் புகைப்படம் பார்க்கின்றேன் என்று என்மீது இரக்கமா? உறக்கம் கண்களால் கழன்று எங்கோ இருக்கும் உன்னேடேயே வந்துவிட்டது.

'தூங்காமல் அவதிப்படுகின்றீர்களே நீலாம்பரி ராகத்தில் பாடுகின்றேன்.'

நான் உன் மடியுள் குழந்தையாய் தூங்குகின்றேன். நீ என்னை எங்கெங்கு கொண்டு செல்கின்ருய். என்னைத் தரும்

பார்க்கி வானவெளியில் மிதவையில் நீந்தவிட்டு ... உன் ஒவ்வொரு சொல்லின் மெதுமையும் என்னை வானத்தமராணுக்கி அங்கேயே நிறுத்தி வைக்குமே!

கமலம், நீ வாழ்ந்த காலத்தில் என்னமாயங்களெல்லாம் செய்தாய்? பதில் சொல்வாயா? ஒருநாள் யாரிடமோ அறிந்துகொண்டு வந்து, என்முன் நின்று உனக்கு அரணுக வால்மீகியின் சுலோகங்களைச் சொன்னுய்: "பாத்தீங்களோ! சங்கீதத்தைப்பற்றி வால்மீகி கூடச் சொல்லியிருக்கின்ருர். சக்கரவர்த்தியாவதற்குப் பல கலைகளில் தகுதி வேண்டும்; அவைகளில் சங்கீதக்கலையும் ஒன்று. ராம பிரான் அதில் சிறந்த பயிற்சி உடையவர்' ... இப்ப என்ன சொல்லுறியள்?"

திலகமும், நீயும் சிரித்து என்னை வென்றீர்கள்.

"திலகா, நீ எங்கை நிற்கிருய்?"

## 8

நான் ஆஸ்பத்திரிக் கட்டிலோரமாய் நிற்கின்றேன்.

"பார்த்தீங்களா. லவனுமில்லை, குசனுமில்லை"

கமலம், நீ நிருத்யதிலகாவைப் பிரசவித்த படுக்கையில் கிடந்தபடியே இப்படித்தான் சொன்னுய். நானே மழையை எதிர்பார்த்து வெய்யிலைக் கண்டவனுய் மனஞ்சுழிக்கிறேன்.

திலகாவைப் பூவென்ருய் —

பூத்தானடி, பூத்தான். புற்பூ!

நான் கட்டிலிலிருந்து எழுகின்றேன்.

நிமிர்கையில் எதிரே எதிர்ப்படுவது உன்படந்தான். அமைதியில் மூழ்கிய ஆழ்ந்தகண்களுள் சாகாத ஒளிதான் வீசுகிறது. எனது மனச்சோர்வுகளை உனது குளிர்ந்த கண்களின் நோக்கு தட்டகப்பையாய்ப் பக்கம் மாற்றிப்

போட்டு, என் வெற்றிலைக்காவி படிந்த இதழ்களை என்னை யறியாமலே மலரவைக்கின்றன. நீ என்னையே ஏதோ கேட் கிருய் போல, உன் இதழோரமாய் சிறு அசைவை நான் உன்னித்து நோக்குகிறேன்.

"சொல்லுங்கவன் திலகா கேட்கிருள் சொல்லுங்கவண"

(காலம் இறப்புத்தான். நினைவு இறக்கவில்லை. நீல் கட்டை நூலாய் மனதுள் சுற்றுவதெல்லாம் அவளின் குரலே)

உன்னுடைய உருவப்படத்தின் குரலுக்கு நீ என் னுள்ளேயே 'ரேப்றைக்கோட்டர்' வைத்திருக்கின்ருய்.

"நிறங்கள் எண்டா என்ன?"

"இதென்ன ரெண்டிற்கும் விசரே"

"அப்பாவுக்குத்தெரியேல்லை... சமாளிக்கிருர் கூய்க்... குய்"

திலகா பகிடிபண்ண, நீ கைகொட்டினுய்.

"சொல்லுறன் பொறுங்கோ... திலகா உன்ரை வாட் டக்கல்ர் பெட்டியை எடுத்தெண்டு வா"

தண்ணீர்ச் செம்பை நான் பேணியின் வாயுட் கவிழ் த்து நீர் வார்க்கமுன் திலகா வந்துவிட்டாள்.

"எங்கை பிறஸ்?"

நான் பிறஸ்ஸை எடுத்துத் தண்ணீருள் தோய்த்து மஞ்சளுள் துளைத்து, வர்ணக் குழையலை கடுதாசியிலே தீட்டினேன், இப்படியே பன்னிரெண்டு வர்ணங்களைத்தீட்டி விட்டேன்.

"இப்ப தெரியுதே நிறமெண்டா என்னெண்டு?"

நான் வெற்றியுடன் நிமிர்ந்து அவர்களைப் பார்த் தேன். திலகாவின் முகத்திலோ குழிவிழுந்த விஷமச் சிரிப்பு.

"பொறுங்கோ இதென்ன நிறம்?"

அவள் மஞ்சள் நிறத்துள் பிறஸைத் தளாவி, பச்சையோடு கலந்து புதிய நிறமொன்றைத் தீட்டினுள். இப்படியே அவள் ஒன்ருேடு ஒன்று குழைத்துப் பல குழையல்களைத் தூரிகையில் திரணையாக்கித் தாளில் மின்னவைக்கின்ருள்.

எத்தனை விதமான நிறங்கள்?

பச்சையிலே பல பச்சை.

சிவப்பிலே இரத்தம்போல.

நாகதாளிப் பழக் கூழாய்.
தம்பலப் பூச்சியாய்.
ரோஜாப் பூப்போல.
கமலத்தின் இதழ்களைப்போல.
திலகத்தின் நூரசைப்போல.
சேவலின் சிவப்புக்கொண்டை
யாய்.

"பாத்தீங்களோ? பாத்தீங்களோ?"

நீங்கள் இருவரும் கைகொட்டுகின்றீர்கள்.

என்னுள் என்னவோ.

**"என்ரை அம்மோ!"**

இதென்ன இது? திலகாவா அலறினுள்? திலகாவா?

**"என்ரை மண்டை போச்சே!"**

**கதிரை முச்சிழுக்க அவர் எழ, அவள்**
**அவர் காலினுட் கவிழ.,**

"திலகா... திலகா..."

## 9

திலகா ... திலகா ... திலகா ......

குரலிற் சிலந்தி வலைகள் அறுந்தன.
ஈடாட்டம் கண்ட கதிரை கீச்சிடுகின்
றது.

*திலகா, நிருத்யதில ...*

*இதென்ன கூரை கவிழ்கிற ...*

*திலகா, என்னைப் பிடி ... பிடி ...*

"அரை மணித்தியாலமா இந்தப் புள்ளை அழுகுது?"
"நீ ஏன் புள்ளை அழுகிறுய்? அவர் உம்மடை சின்
னக் காயத்தைக் கண்டோண்ணை அறிவுகெட்டிட்டார்.
இப்படியே கொஞ்ச நேரம் விசிக்கிறு எல்லாஞ் சரி."

*விசிறியின் அலைவாய், திலகத்தின் மனமும். தலையி லுள்ள சிறு காயக் கட்டை இடையிடை தடவும்பொழுது தன் முட்டாள்தனத்திற்காகத் தன்னைத் திட்டும் ஆத்திரம். கிணற்றடியில் சறுக்கி விழுந்தவள், அதைப் பெரிதாய் எண் ணிக் கூவிக்கொண்டு வந்ததாற்தானே இந்தப்பாடு.*

## 10

*எல்லாம் இருளுள்.*
*வாயைக் கட்டிக் கன்னக் குழிவில் செடில் குத்*
*திப் படுக்கவைத்ததுபோல அதைப்புட் கிடப்*
*பதும் ஏதோ கருக்கல் உருவாய்த் தெளிவும்*
*தெளிவுமற்று நெஞ்சுள் உருப்படுகிறது.*

*'நிருத்யாவுக்கு கண்ணிலே தூசும் விழப்படா...'*
*வீணையொலியின் இசை வளையங்கள்; உன்*
*குரலே கமலா. நீயே சொன்னுய். என்ன?*
*நிருத்யாவிற்கா?... நிருத்யா எத்தினை வருஷ*
*மாத் தனியாக இந்தக் குகேக்கை. அவளுக்கு*
*கால் பித்தவெடிப்பு. முத்தத்துக்குக்கூடச்*
*செருப்பில்லாமைப் போகாள்... புறவடிப்பித்த*
*வெடிப்புள் மண் குறுணி போன இள் வேதனை*
*முகத்திலே. உன்ரை முகத்திலே கமலம், தில*
*கமா? புற்பூவிற்கு மணமென்ன? வடிவென்ன?*

நிறமென்ன? ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் தனித் தனி நிறங்களுண்டு என்று நீயா சொன்னாய்? பஞ்சம சாரசம்ஹிதை என்ன சொல்கிறது? ஆறு ராகங்களும், முப்பத்தாறு ராகிணிகளும் தங்கள் சௌந்தர்ய சரீரங்களுடன் பரம்பொரு ளான பிரம்மாவின் உறைவிடத்தில் இருந்து தோன்றிப் பிரம்மாவை ஸ்துதி செய்து வரு கிறார்கள். நீ சீதையல்ல. ராகிணி. நான் ராமன் அல்ல; ராகம். என்னடி சிரிப்பு? நீ அழுதும் பாடினாய். தம்புராவைச் சுருதி மீட்டி, இசையைப் பரவித்துக்கொண்டே, உனை மற ந்து தோடி ராகத்தினைப் பாடிப்பாடி.... மேலே எரிந்துகொண்டிருந்த சிறு விளக்குக்கூட அசை வற்று, தங்கத் திரியாயிட, டக்கென்று பாடிய வள் பாட்டை நிறுத்தி தம்புராவிேனாடு அணைவு தேடியதும்; நீயே சிரிப்பும் அழுகையும்!

விரிவானம் உலகை மூடிக் கவிந்து விரிந்தி ருக்கிறதெண்டா அதற்குள் உன்ரை குரலே? காற்றை வாளால் துண்டு துண்டா வெட்டினா உன் குரல் கிடைக்குமோ? சிவப்பெண்டா சிவப்பு. சரத்கால மலர்போல. லவகுசரெண் டா எனக்கு நல்ல விருப்பம். திலகன் என்றால் நல்லது. திலகா, உனக்கு ஏன் அடிச்சன்? ஏன் கொடுமைப்படுத்தினன். உன்ரை நெத்தி யில் பின்னேர வானம் கிழிந்து வழிவதா? வீணைக்குத்தானா? வீணையின் நாதம் இதயத் தின் சாந்தியா ..... சாந்தியா ..... வீணை ... வீணை ... வீணை ...

" **வீணை** "

" **வீணை** "

(ஐயோ இதென்ன இது!)

என் தலையை வீணையின் குடத்தைத் தடவுவது போலத்

தடவி அழுத்தி, இதென்ன நெத்தியிலே சுடுதண்ணி. நான் அதல பாதாளத்திலிருந்து அலைகளால் எற்றுண்டு மேலே மிதக்கின்றேன்: ஊதற்காற்று.

"......ஐயோ...ஐயோ"

என் தலையில் விழுந்த கனத்தோடு குரலை அமுக்கு பவள்... நான் எவ்வளவு பிரயத்தனப்பட்டுக் கண்களை விழித்தேன்.

வஜ்ஜிரம் கண்மடல்களை இறுக ஒட்டிவிட்டது போல கண்கள் விரிபட முடியாமல் இறுகிக் கிடந்தன. எனது முழுப்பலத்தையும் பிரயோகித்து கண்மடல்களை நானுகவே பிரிக்கின்றேன்.

கண்களை விழித்தேனே இல்லையோ என்மேல் திலகா குமுறிக்கொண்டே விழுந்தாள்.

"என்ன இது எனக்கு என்ன?"

நான் கட்டிலைச் சுற்றி நிற்பவர்களை வெறித்துத் துளா வுகின்றேன். நிருத்யம் எனது நெஞ்சிலிருந்து தன்னுடைய தலையை எடுத்துக் கொள்ளாமலிருக்கின்றுள். நான் நிருத் யாவை நிமிர்த்தி அவளையே பார்த்தேன். மங்கற் தாளில் கிறுக்கிய சித்திரமாய் அவள் உருக்குலைந்து போய் விட்டாள். உட்குழிந்த விழிகளிலிருந்து நீர் சொரிகின் றது. அவளோடு நான் சிறிது நேரத்திற்கு முன்பு தான் கதைத்து மனங்கசிந்து பேசி அழுதது போல உணர்வு என் நெஞ்சினுள் பயிராகி எழுகின்றது. எதோ நினைவி னில் முணுமுணுத்தேன்:

"திலகா நிறமெண்டா என்னெண்டு தெரியுமோ?"

என்னுடைய ஒலியை, வாழையை வாள் கொண்டு வெட்டுவது போல வெட்டி முறிப்பது நிருத்யதிலகாவின்

குரல்தான். ஆனால் என்னுடைய நினைவுகள் எங்கெங்கோ படிவெட்டின.

"நீங்க என்னென்னவோ சொல்லுறியள்"

திலகா எனது தலையை வருடியவாறே சொல்லுகின்றாள். நான் என்னென்ன சொன்னேன். என்னென்னவோ சொன்னதாய் நினைவுண்டா? மாட்டின்குறி சுடலைப்போல எதோ ஒன்று என்மனதுள் குறி சுடப்பட்டுத் தோலுரிந்து ... நான் அதையறியவே துருவலைப்பல்லாகி மனதைச் சுரண்டுகிறேன்.

"நான் என்னென்ன சொன்னேன் ... என்னென்ன?"

"வீணையெண்டீங்கள் ..."

"என்ன ?..."

"........."

"என்ரை ஐயோ ..."

காற்றினூடே மிதக்கும் மிதவையில் நான் உட்கார்ந்து, ஒரு வாளால் காற்றைத் துண்டுதுண்டாய் வெட்டிக்கொண்டிருக்கும்பொழுது, எங்கிருந்தோ ஒலித்த அந்த ஒலியும் தேய்ந்தழிய உணருகின்றேன். ஸீதாபதே - பாட்டோடு இணைந்துவரும் வீணையொலி. அவள்தான் வீணையை மீட்டுகின்றாள். மலையமாருத ராகத்தில் எழும் இசை வெள்ளத்தால் எனக்கு உற்சாகமான கண்விழிப்பு ஏற்படுமென்று கருதியா நீ உன்னை மறைத்து, உன்னை ஒலியாகக் காட்டுகின்றாய்? வீணையின் நாதத்தினில் முகில் கரைந்து மழையாகி - அதுதான் என்னுள்ளும் குளிர் புகுத்திவிட்டதாய் கால் விறைக்கின்றது. கீழே கீழே மீண்டும் வீணையொலி. தீதாள் போடாமல் இதார் வீணை

வாசிக்கிறது ? (முகில் மண்டலத்துள் வாய் ஊமை. குரலில்லாத உலகு. எல்லாம் வெறும் இயக்கம். இயக்கத்தைப் பார்த்தால் நெஞ்சுள் ஒலியென்பது தானகவே எழுந்து நாதம் மீட்டிவிடும்.) இதென்ன ? காளிதாஸனின் மாளவிகையாய் என் முன் கமலம் நீயா வந்து நிற்கிருய் ? பாவமும், ராகமும், தாளமும் உன்னேடேயே உன்னுள், கை போகும் வழியே கண் போக்கும் நாட்டியப் பழக்கம் இன்னுமா ? நிமிர்ந்து பார்த்து என்னேடு பேசு கமலம்.

கமலம், எனக்குப் புஷ்பாஞ்ஜலி செய்கிருய். உன்னிடம் நான் அதையா வேண்டினேன் ? உன் கைகளைப் பதாகம் ஆக்கி என்னுள் உன்னைத் தா, நீ ஸ்வாதீன பதிகா அல்லவா ? தம்பலப் பூச்சிகள் என்னை நோக்கி ஊர்கின்றன. பிறகு அது நிலத்தில் பொட்டுப்பொட்டான ரத்தச் சொட்டுகளாய்..... திலகா...... இது உனது இரத்தத் துளிகள்.

**  **  **

"நான் உங்கடை பக்கத்திலேயே இருக்கிறன்''

திலகாவின் குரல் எனக்குப் பக்கத்திலேயே மிகமிகத் தெளிவாகக் கேட்கின்றது. அக்கினிக் குண்டத்தின் விசிறற் தீக்காங்கையில் உடலை எரிவுக் குளிப்பாட்டியவனைப் போல மேனியெங்கும் அவியல் படர்கின்றது. மடக்கி வெட்டியெறியும் கல்லலைகள் மூளையை அணுஅணுவாய்க் குத்திப் பிளந்து, புகுந்து, ரத்தத்தையும், தசையையும் கலந்து திரவக் கூழாக்கினுற்போல என்னுடைய தலையும், மனமும் சுழல்கின்றன !

"நான் உங்கட பக்கத்திலேதான் இருக்கிறன்"

நான் கண்களை மலர்த்துவதற்கு அவதியுறுகின்றேன்.

சிறுசிறு காலரங்களைத் தொடர்ந்து வழிநடவும் பாலை வனப் பிரயாணியான என்னை மப்புக்கலந்த மண்மாரி இடை யிடை தாக்க நான் அவற்றையும் சகித்துக்கொண்டு பசுந் தரையை நோக்கி மண்ணைக்கால்களால் விருண்டிக் குரு விக் கொண்டே முன்னேறுகின்றேன். அரிப்பெட்டியுள் கொட்டுண்டு அரிபட்டு மெதுமெதுக்கும் மாப்போல, சிக் கல் அடிக்கட்டைகள் அடியில் மண்டிவிட, குழம்பிய சகதி நினைவுகள் தெளிவடைந்து துல்லியமாகின்றன.

"திலகம் அந்த வீணையை எடுத்துவா"
நான்தான் கூறுகின்றேன்.
"திலகா அப்பா வீணையை எடுத்து வரட்டாம்"
"என்ன ... எ ...ன்ன ?"
"திலகா அந்த வீணையை —"

கமலம், அந்தவீணையை— கொம்மாவின்ரை வீணையை எடுத்துவா என்று சொல்லட்டுமா? அந்த வீணையை நீ செத்தபின், நிருத்யதிலகாவை நான் தொடவிடவில்லையே! அவள் தொடுவாளா? வாசிப்பாளா?"

மணி பன்னிரெண்டு காட்ட இரண்டு கம்
பிகளும் ஒன்றின்மேல் ஒன்று ஏறுகின்றன.

மணிக்கூண்டின் மேலேயிருந்து கள்ளப்பிள்ளை சிரிக் கிறீரோ? விடுவனெண்டா நெச்சிர் கட்டாயம் நீர் வீணை வாசிக்கோணும்...

டங்... டங்... டங்ங்ங்...
"திலகா கிட்டப்போனை ஐயா ஏதோ சொல்லுறுர்"
"ஐயோ!"

என்னுள் இருந்து திடீரென ஜெக்கெட்டாய் சீறிக் கிளம்பி வெளியே வார்த்தைகள் விழுந்தன.

"..................."

( உன்னைக் கும்பிடுவன் கொம்மாவின்ரை வீணையை ஒருக்கா எடுத்துவந்து வாசியம்மா ... வாசி. )

என்ன சொன்னேன் ?

**“என்னைக் கும்பிடுறேண்டு சொல்லாதேங்கோ ... நான் வாசிக்கிறன் ... வாசிக்கிறன் ... வாசிக்கிறன் ......''**

எங்கிருந்து பெருகும் ஊற்றோ, மணற் புரிகளின் சிறு நீக்கலால் உடல் தடவி ஊர்ந்து, நிறமற்ற நீரின் முக முனைப்பால் அடிதடவி மேலெழுந்து மெல்லத் தலையுயர்த்தி, அதன் நிலையே மேல்மட்டத்தோடு தளும்பும் பெருக்கமாய், அங்கேயும் தந்தியின் ஒவ்வொரு நெளிவிலிருந்தும் பிறக்கும் நாதமென்னூற்றுக்கள் மடிப்பு மடிப்பாய் பெருகி, இசை நாதக் கடலை எங்கும் பரவ வைக்கின்றன.

களைத்த மனம் நிமிர்கின்றது; முதுமையில் வளைவில்லை. மனம் மத்தாப்பாகி எண்ணப் பொறிகளைப் பூத்துக் கருக்கிக்கொண்டிருக்கின்றது.

அவள் ஓயவில்லை.

வீணை ஓய்ந்த ஓய்விற்கு, ஒரு நாளிலேயே பிராயச்சித்தம் தேடி ஒலி நெகிழ்த்தி, மனித இதயங்களை நெய்யாய் ஓடி உருகவைத்து, அவித்த உருளைக்கிழங்காய் மசித்து, ஒரு வருக்குந்தான் தன்னுணர்வில்லை.

சுக்கானுக்கு அடங்காத கப்பலாய் மனம் போனபோக்கிலேயே வழியைக் கிழித்துப் பறக்கின்றது. கிரக கோளங்கள் சுழன்று திரியும் வெளியான

வெளியிலே இசை, வட்டவட்டமாய்க் குவி யஞ் சுற்றுகின்றது. தூல, சூக்கும உணர்வு களே அற்று, ஒன்றுமற்ற ஒன்ருய் நான் இசை யினில் ஒன்றுகின்றேன். அண்டங்களைக் கடந்து வட்டங்கள் கீறியிருக்கும் அண்டங்களை நோக்கி நான் சிறு துகளாய் மேலெழுகின்ருற் போல உடல், உயிர் எல்லாமே தொய்வடைகின்றன.

காளிதாஸனின் வருஷருது என்முன்பு தன்னைக் காண்பிக்கும் இசைமயம். 'மயில்கள் இதோ தோகைகளை விரித்துக் குதூகலத்துடன் ஆடுகின்றன. செருக்குற்ற சில பெண்களைப் போல் கரையிலுள்ள மரங்களைக் கீழே தள்ளிக்கொண்டு அழகிய அலையும், சுழலும் கொண்டு ஆறுகள் கடலை நோக்கி விரைகின்றன' அதுபோலவே என்னை அள்ளும் இசைச் சுழலும். ஒரு ஸ்வரமும் அதன் பஞ்சமமும் சேர்ந்து தொடங்கிய இசைவெள்ளம் எப்படி அருவியாய், நதியாய், ஆருய், கடலாய், சமுத்திரமாய் ஆகியது? நான் இப்பொழுது எங்கே?

நான் எங்கே போகின்றேன்? படிகள். படிகள். வளைந்து உயரும் படிக்கட்டுகளில் தாவிக் கொண்டு நான் உச்சத்திற்கு வந்துவிட்டேன். வெட்டவெளிச்சம். ஒளியின் பூரணத்துவ ஒளிப்பு. உச்சியில் நான் ஒருவன். கீழே எல்லாமே ஒலி வளையங்கள்; அதுதான் உடலிற்கு எல்லாமாய்ப்போல. சுழற் காற்றில் சுழன்றெழும் இலைச்சருகாய் நான் சுழன்று உயர்ந்து

ஜெசஉ28



மேலெழுகின்றேன். என் உடல் கீழே இழுவுண்டு என்னிலிருந்து கழருவதுபோல, பிறகு அது பன்னுடையாய்ச் சில்லவல்லமாகக் கிழிந்து பொச்சுத் துணுக்காகி...... என் நெஞ்சு என்னைவிட்டு மேலே உயர்கின்றது. அதை இழந்த நெஞ்சக் கூடு படபடவென்று அடித்து, இந்தக் கிழ உடம்பை முறித்து விழுத்தக் கால் தட்டுப்போட, நான் முதுகெலும்பு முறிந்து, தீயில் நாலறுந்து விழும் மயிர்க்கொட்டிபோற் சுருளுகின்றேனு...

ஐயோ கமலம்... கமலம்... கமல... கம...

## 12

வீணையின் தந்திகள் அறுந்து தொங்க, அதன் மேட்டிலே நிருத்யதிலகா முகத்தைப் போட்டு நிலைகுலைந்து மயங்கிக் கிடக்கின்றாள்.

இராமச்சந்திரனின் முகத்திலே என்றுமில்லாத அமைதி; காம்பீரியம்; ஒளிப்பு.

# யோகநாதன் கதைகள்

" ... யோகநாதனின் கதைகளைப் படிப்பதால் விளையும் மன நிறைவு, மனித உணர்வுகளைப் புரிந்துகொண்டதின் விளைவே. 'உணர்வுகள் வாழ்வை நிர்ணயிப்பதில்லை; வாழ் நிலையே உணர்வுகளை நிர்ணயிக்கின்றது.' வாழ் நிலையை வக்கிர நோக்குடன் புரிந்துகொண்ட ஆசிரியர் நமக்கு உணர்வுகளை — வாழ்வைப் புரியவைப்பதில் வியப்பில்லை. இவர் காட்டும் மனித வாழ்வு, இம் மண்ணில் வேரூன்றியது. இவரின் எழுத்துக்கள் வாழ்வைப் படித்த எழுத்துக்கள்.

அக உலகினில் உழல்பவர்களும், மானித மேம்பாட்டின் தார்மீக ஆவேசகாரர்களும், நசுக்கும் வர்க்கத்தைக் கணத்தினில் முறியடித்துப் புத்தமைப்புக் காணக் கிளர்பவர்களும், மூலைக்கு மூலை இருதயத்தினுள் அனுங்கும் ஆசைகளின் வலையினின்று பிதுங்கி ஒசைப்படுபவர்களும், மெல்ல அலையெழுப்பினும் மறுவேளை பிரளயத்தின் வாயென விறிடும் கடலருகே இன்ப துன்ப தாக்கங்களுக்கிடையே போராடியும், கெக்கலித்தும், விரிட்டு வாழ்பவர்களும், குழந்தைகளின் பஞ்சுச் சதைக் கால்களின் மெத்தென்ற உதையல்களுக்கு இருதய வெளியமைத்து இயங்குபவர்களுமான இவர்கள் - எங்களின் உறவினர்கள், எங்களின் அயலவர்கள், எங்களுக்குள்ளேயே இருப்பவர்கள்: இவர்கள்தான் யோகநாதனின் கதைகள்; பாத்திரங்கள்; உலகினர் ..."

★ இது ஒரு புதுமைப் பிரசுரம்!

COVER PRINT: THAMILNAD, JAFFNA